www.tamilarangam.net

THAYAGAM

75¢

8 . 4 . 94

உணர்வு:5
தொடர்:40

# தாயகம்

# ஐ.தே.கட்சிக்குள் மோதல்

விஜேதுங்கவுக்கு எதிராக
சிறிசேன கூரே போர்க்கொடி
**ஜே.ஆர் தலையிட்டு சமரசம்**

## சுதந்திரக் கட்சி உறுப்பினர் சுட்டுக்கொலை

## இந்தியா புலிகளோடு ஒப்பந்தம் இல்லை சவான் மறுப்பு

## புத்தளத்தில் அகதிமுகாமில் தீவிபத்து ஒருவர் பலி

## அஷ்ரப் பதவி விலக மாட்டார்

## புதிய பேச்சுவார்த்தை முயற்சியில் இன்டர்நாஷனல் அலேட்

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CDவிற்பனையாளர்
SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru

Niru

# தரத்தின் சின்னம்

# நிரு பிராண்ட்®

# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை
உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை
வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன்
தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள்
எப்பொழுதும் கிடைக்கக் கூடிய
வர்த்தக நிலையங்களை அறியலாம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Second class mail Registration No:8435




# ஐ.தே.கட்சிக்குள் மோதல் ஜே.ஆர் தலையிட்டு சமரசம்

## தேர்தல் தோல்விக்கு பரஸ்பரம் குற்றச்சாட்டு

ஐ.தே.கட்சிக்குள் பெரும் பிளவு ஏற்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது. கடந்த தென் மாகாணத் தேர்தலில் ஐ.தே.கட்சி பலத்த தோல்வியைத் தழுவியது தெரிந்ததே. இந்தத் தேர்தலில் பிரேமதாசாவின் ஆதரவுள்ள பகுதியில் மட்டுமே ஐ.தே.கட்சி வெற்றி பெற்றது. இந்த தோல்விக்கு ஜனாதிபதியின் இனவாதக் கருத்துக்களே காரணம் என்று பிரேமதாசாவின் ஆதரவாளர்களைக் கொண்ட அணிக்கு தலைமை வகிக்கும் சிறிசேன கூரேயிற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பலத்த கருத்து மோதல் ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடியைத் தணிக்க ஜே.ஆர் தலையிட்டு நிலைமையைச் சுமுகமாக்கியுள்ளார்.

ஐ.தே.கட்சி அரசுக்குள் ஏற்கனவே பலத்த மோதல்கள் இருந்திருந்தன. விஜேதுங்கவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்கனவே ஒரு பனிப்போர் இருந்து வந்தது. தனக்கு ஆதரவு தேடும் முயற்சியில் ஜனாதிபதி காமினியை உள்வாங்கியதில் இந்த கருத்து வேறுபாடு முற்றியும் இருந்தது. இதை விட பிரேமதாசாவின் நினைவுகள் முற்றாக மறுக்கப்படுவதுடன் பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் ஒதுக்கப்படுவதற்கும் எதிராக அவரது விசுவாசிகள் போர்க்கொடி தூக்கியிருந்தனர். இதை விட ஐ.தே.கட்சியுடன் கூட்டு வைத்துக் கொண்டுள்ள தொண்டமானின் தொழிலாளர் காங்கிரஸ் கூட ஜனாதிபதியுடன் கருத்து வேறுபாடுகளில் உள்ளது. ஜனாதிபதி இனவாதத்தை கிளப்பி தொண்டமானை உதாசீனம் செய்வதன் மூலம் சிங்கள வாக்குகளைத் திரட்ட எண்ணிய ஜனாதிபதி தொண்டமானைச் சந்திக்க மறுத்ததுடன் தொண்டமானுடன் மோதிக் கொண்ட செல்லச்சாமியை தன் வசம் இழுக்க முயன்றிருந்தார்.

இந்த இழுபறிகள் எல்லாம் கடந்த தென் மாகாணத் தேர்தலில் ஆளும் கட்சி அடைந்த தோல்வியுடன் முற்றி வெடித்திருக்கின்றன. தேர்தல் தோல்விக்கு யார் காரணம் என்பதில் ஒரு பலிக்கடா ஒன்றை தேடிக் கொண்டிருப்பதாக அரசியல்வாதிகள் சிலர் கூறியுள்ளனர். ஐ.தே.கட்சியின் தோல்வி முக்கியமற்றது. நடந்து முடிந்தது ஒரு மாகாணத்தின் தேர்தலே என்று பகிரங்கமாக ஐ.தே.கட்சி கூறிய போதிலும் போட்டிக் குழுக்கள் மற்றவர்கள் மீது தோல்விக்கான பழியைச் சுமத்த முயன்று வருகின்றனர். தேர்தல் தோல்விக்கு ஜனாதிபதியே காரணம் என்று குற்றம் சாட்டி மற்றக் குழுக்கள் போர்க்கொடி தூக்கியதில் ஏற்பட்ட சிக்கலைத் தணிக்க ஜே.ஆர் தலையிட வேண்டிய நிலை ஏற்பட்டது. இவர் தொண்டமானைச் சந்தித்து ஐ.தே.கவுடன் உறவுகளை உடைத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். அத்துடன் அனுரா பண்டாரநாயக்கவும் தொண்டமானைச் சந்தித்து இது பற்றி பேசியிருந்தார். அனுராவிடம் தான் தொடர்ந்தும் ஐ.தே.கட்சியை ஆதரிப்பதாக தொண்டமான் உறுதியளித்ததாகவும் இதற்குப் பிரதியுபகாரமாக தொண்டமானுடனான கருத்து வேறுபாடுகளை தீர்த்துக் கொள்ள ஜனாதிபதி

4ம் பக்கம் பார்க்க..

# இராணுவம் புதிய ஆயுதங்கள் கொள்வனவு

சீனாவிடம் நான்கு யுத்தக்கப்பல்களை 115 கோடி ரூபாவிற்கு வாங்குவதற்கான ஒப்பந்தத்தை இலங்கை அரசு கைச்சாத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் கடற்படைத் தளபதி மோகன் சமரசேகரவும் சீனாவின் இலங்கைத் தூதுவரும் கைச்சாத்திட்டனர். 200 அடி நீளமான பீரங்கிப் படகு. அதிவேக பீரங்கிப் படகுகள் இரண்டு. பொருட்களையும் துருப்புகளையும் தளபாடங்களையும் ஏற்றி இறக்கக் கூடிய கப்பல் ஒன்று என்பன வாங்கப்பட உள்ளன. இதில் தளபாடங்களை இறக்கும் கப்பல் மூன்று மாதங்களில் வந்து சேரும். மற்றவை அடுத்த வருடம் வழங்கப்படும். இந்த கொள்வனவுக்கான பணச் செலுத்துகை பத்து வருட காலத்தில் செலுத்தப்படும்.

இந்தக் கப்பல்களைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட தளபதி சென்றிருந்த வேளை. நிதி அமைச்சு இந்தக் கப்பல்களை வாங்க போதிய நிதி இல்லை என்று அறிவித்திருந்தது. இது குறித்து தளபதி சீனாவிலிருந்து பாஸ்கரலிங்கத்தை தொடர்பு கொண்ட போது பாதுகாப்பு அமைச்சு முறையான விண்ணப்பம் செய்யவில்லை என்று கூறியிருந்தார். இது உடனடியாக தீர்க்கப்படா விட்டால் தான் ராஜினாமா செய்யப் போவதாக தளபதி தெரிவித்தார். இதை அடுத்து பாஸ்கரலிங்கம் இதற்கான அனுமதியை வழங்கினார்.

ஆனால் உண்மையில் இந்த ஒப்பந்தம் அரசுகளுக்கு இடையில் நடப்பதை சிலர் விரும்பவில்லை. இடைத்தரகர்கள் மூலம் இந்த கொள்வனவைச் செய்தால் தாங்கள் பணம் சம்பாதிக்க முடியும் என்று நினைத்த சிலரே இதற்கு மறுத்ததாகவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. ஆனாலும் பாதுகாப்பு, நிதி அமைச்சு இரண்டுமே ஜனாதிபதியின் கைக்குள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இது ஒரு புறமிருக்க இன்னொரு ரஷ்யாவில் ஆயுதங்கள் வாங்குவதற்காக புறப்படுகிறது. இன்னொரு குழு புதிய வள்ளங்கள் வாங்க இஸ்ரேல் செல்கிறது. தென்னாபிரிக்காவில் இருந்து டாங்கிகள் வாங்கவும பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீண்டும் காட்சியளிக்கிறது
# முனி பதில் தரும் "Bore அம்மா"



★ முனிவா, உன்னை புலிக் கொடியுடனும் Shorts உடனும் சென்ற வாரம் பார்த்ததும் புல்லரித்துப் போய் விட்டது. என்ன கட்சி மாற்றமோ?

கணேஷ், ஸ்காபரோ

இது கட்சி மாற்றமல்ல, காட்சி மாற்றம். இந்தப் படக் காட்சியில் summer வருகுது எனக் காட்ட shorts. 'சமர்' வருகுது எனக் காட்ட புலிக்கொடி... போதும்மா.. முனிபதில் மிக மிக Bore அம்மா!

★முனிவரே, மாத்தயாவை மறந்து விட்டாயா? மாத்தயா எங்கே எனச் சொல்?

சுரேந்திரன், வுப்பெற்றால், மே.ஜேர்மனி

உமது கேள்விக்காக மாத்தயாவைப் பற்றி உலகத்தமிழரில் என்ன எழுதியிருப்பார்கள் எனத் தேடினேன். ஒரு பழைய உலகத்தமிழர் அகப்பட்டது. 1.9.90ம் உலகத்தமிழரில் எமது தலைமை என்ற தலைப்பில் கவிஞர் இன்குலாப் எழுதியிருக்கிறார்.

'பிரபாகரன் என்பதும்
மாத்தயா என்பதும்
தனிமனிதர்களின்
பெயர் இல்லை.
விடுதலை அவாவும்
தமிழ் இனத்திற்கு
இந்தப் பெயர்களே
இனிமேல் பொருள் தரும்
இந்த முகங்கள்
தனி முகங்கள் இல்லை
உரிமைக்குப் போரிடும்
இனத்தின் முகங்கள்'

எப்படியிருக்கிறது கவிதை. இப்போ மாத்தயா உரிமைக்கு போராடுகிறார். விரைவில் பிரபாகரனும் போரிடக் கூடும்.

★ தென் மாகாணத்தில் ஐ.தே.கட்சி பலத்த தோல்வியைத் தழுவியிருப்பது எதைக் காட்டுகிறது?

கருணா, மிசிசாகா

சிங்கள அரசாங்கங்களின் போக்கிற்கு எதிராக சிங்கள மக்கள் வெறுப்படைந்திருக்கிறார்கள். இனப்பிரச்சனைக்கான சிங்கள மக்களின் தீர்ப்பு என்று சொல்வதை விட பொருளாதாரப் பழு காரணமாக சிங்கள பொதுஜனம் கொடுத்த அதிருப்தி வாக்குகள் என்றே கருத இடமுண்டு.

★ யாழ் குடாநாட்டிலிருந்து முஸ்லிம்களை ஏற்பது சிரமம் எனச் சொல்லும் புலிகள் இப்போது முஸ்லிம் தலைவர்களுடன் எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகளுக்கு உடன்பட்டு வருகிறார்கள்?

கருணா, மிசிசாகா

முஸ்லிம்களை யாழ்ப்பாணத்தை விட்டு விரட்டி, கிழக்கில் படுகொலைகள் செய்து புலிகளுக்கு அபகீர்த்தியை உருவாக்கியவர் மாத்தயா என்று இப்போது மாத்தயாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பரப்பப்படுவது அறிந்ததே. மாத்தயா மீது பழியைப் போட்டு விட்டு தாங்கள் விட்ட ஒரு மாபெரும் பிழைகளில் ஒன்றை நிவர்த்திக்க புலிகள் முயல்கிறார்கள். இதே பாணியில் பிரபாகரன் தலைமையிலிருந்து அகன்றதும் இந்தியாவுடனான புது உறவுகளை புலிகள் ஏற்படுத்துவார்கள்.

★ அண்மையில் இலங்கைக்கு பயணம் செய்து மஞ்சரியில் கட்டுரை எழுதி வரும் ஒருவர் கிளாலிக்குள்ளால் போகாமல் ஏன் பாதுகாப்பாக திருகோணமலையூடாக போய் வந்து பயணக் கட்டுரை எழுதுகிறார். இவர் கிளாலிக்குள்ளால் சென்று தமிழ் மக்களின் துன்பங்களை எழுதியிருக்கலாமே. இவர் போய் வந்து இப்படி எழுத வேண்டும் என்று தமிழ் மக்களின் நிலைமை அவ்வளவு மோசமாகப் போய் விட்டதா?

சிவா, ஸ்காரோ

ஹூம். ஒரு புலி ஆதரவாளர் எதை எழுதுவாரோ அதைத்தான் அவர் எழுதுகிறார். திருகோணமலையென்ன.. கிளாலியென்ன.. யாதும் ஊரே.. யாவரும் கேளீர்! ரொறன்டோவென்ன, யாழ்ப்பாணமென்ன.. யாதும் ஊரே என்று ஊரை விட்டு ஓடும் போது தான் தமிழ் மக்களின் கஷ்டம் தெரிய வேண்டும் என்பதற்காக கிளாலியூடாக வெளியே வந்து காட்டியிருக்கிறார். (சென்றவரைக் கேட்டால் வந்து விடு என்பார்.. வந்தவரைக் கேட்டால் சென்று விடு என்பார்.. வீடு வரை உறவு.. கடைசி வரை யாரோ?)

★ இன்று இங்குள்ள சிறுவர் சிறுமியர் தமிழ் பேசச் சிரமப்படுகிறார்களே.. இன்னும் பல ஆண்டுகளின் பின்னர் தமிழ் இங்கு உலவுமா முனிவரே!

நந்தன், ரொறன்ரோ

மெல்ல ரமில் இனிச் சாகும்.

★பெண்களை அடிமைப்படுத்தியும் கொடுமைப்படுத்தியும் வாழும் கணவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?

'ஹேய், கணவர்காள்!' அமெரிக்காவில் ஒரு பெண் தன் கணவன் தூங்கும் போது கத்தியெடுத்து..' என்ற கதை தெரியுமா உங்களுக்கு.. பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய கவிதை ஒன்றைத் தருகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புவிப்பெரியான்
ஜோர்ஜ் பெர்ணட்ஷா
உரைத்த
பொன்மொழியைக் கேளுங்கள்
நாட்டில் உள்ளீர்
உவந்தொருவன் வாழ்க்கை
சரியாய் நடத்த
உதவுபவள் பெரும்பாலும்
மனைவி ஆவாள்
அவளாலே மணவாளன்
ஒழுங்கு பெற்றான்
அவளாலே மணவாளன்
சக்தி பெற்றான்
குவியுமெழிற் பெண்களுக்கே
ஊறு செய்யும்
குள்ளர்களே
கேட்டீரோ ஷாவின் பேச்சை!

★சந்திரிகா ஆட்சிக்கு வந்தால் நாட்டில் மாற்றம் ஏற்படச் சந்தர்ப்பம் உண்டா?
ஹெலன் ராஜசேகரன், மார்க்கம்

தமிழ் மக்களைப் பொறுத்தவரை க.க இதுவரைக்கும் சொன்ன அரசியல் வேறு. செய்த அரசியல் வேறொன்று. பண்டாரநாயக்க, சிறிமாவோ போலல்லாது சந்திரிகா அடுத்த தலைமுறைக்கு உண்மையிலேயே நன்மை செய்ய உளப்பூர்வமாக நினைத்தால் தமிழர் பிரச்சனையை இன்ன வழியில் தீர்ப்பேன் என்பதை மட்டும் சொல்லி சிங்கள வாக்காளர்களிடம் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் நாட்டில் மாற்றம் ஏற்பட ஒரே வழி. அதை விட்டு பத்தோடு பதினொன்றாக இனப்பிரச்சனையை அணுகினால் எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்ற பெயர் தான் கிட்டும்.

★ கனடாவிற்கு இது பத்திரிகை சீசனா? நீ எந்தப் பத்திரிகையை விரும்பிப் படிக்கிறாய் முனியா?
எஸ்.நகுலன், ரொறன்ரோ

இப்போதைக்கு ஈழமுரசு.. குழந்தைத்தனமாகவும் கூடவே நகைச்சுவையாகவும் இருக்கிறது. (பல்லே முளைக்காத சிறுகுழந்தை 'முரசால்' கடிப்பதை அனுபவித்திருக்கிறீர்களா? வலிப்பதில்லை)

★ முனி, உமக்கு பிரபாகரன் பொட்டு வைப்பதாகவும் நான் மாலையிடுவதாகவும் கனவு கண்டேன். கனவு பலிக்குமா?
சிறி, ரொறன்ரோ

அருண்மொழி, சித்திரா பாடிய ஒரு இனிமையான பாட்டுக் கேட்டேன். 'செம்மீனே, செம்மீனே.. உங்கிட்ட சொன்னேனே.. மலைசாதிப் பொண்ணுக்கு மடல் வாழைக்கண்ணுக்கு கல்யாண மாலை கொண்டு வா.. மஞ்சள் தாலியும் குங்குமமும் தா.. தா..' என பெண் பாடுகிறார். இதை வைத்துப் பார்க்கும் போது பிரபாகரன் எனக்கு பொட்டு வைக்கவோ நீர் எனக்கு மாலை போடவோ சாத்தியமில்லை. காரணம் நான் ஒரு ஆண்மகன் அல்லவோ.. (ஹா.. ஹா.. உமது கனவு பலிக்காது..)

★ சூரிய அழகிகளுக்கு வயதெல்லை உண்டோ?
ராஜன், ஸ்காபரோ

சூரியனின் வயதுக்கு வானமே எல்லை அழகியின் வயதுக்கு மனமே எல்லை சூரிய அழகியின் வயதுக்கு மானமே எல்லை

★ கனடாவின் எதிர்க்கட்சித் தலைவர் முன்பு இலங்கையில் அமிர்தலிங்கம் செய்தது போல பிரிவினையை ஆதரித்து பிரசாரம் செய்து வருகிறார். இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமா?
மோகன், மொன்றியல்

இந்த பிரசாரம் பப்ளிசிட்டிக்கான வெறும் அரசியல் தந்திரமே தவிர வேறொன்றுமில்லை. கியூபெக்கை பிரிக்க ஓரசியன் பூசார்ட்டிடம் திட்டம் எதுவும் கிடையாது. உடைந்து வரும் கனடாவின் பொருளாதாரம் இத்தகைய எண்ணங்களுக்கு தூபம் போட்டு வந்தாலும் முற்றுமுழுதான பிரிவனைக்கான அகச்சூழலும் சரி, புறச்சூழலும் சரி, கியுபெக்கில் இன்று வரை இல்லை. (என் நண்பர் ஒருவர் அடித்த ஜோக்.. கனடாவிலிருந்து கியுபெக் பிரிந்தால் ரொறன்ரோவிலிருந்து மொன்றியல் வரும் போது கனடியன் டொலரை நூறுக்கு எண்பது என்ற விகிதத்திலோ மாற்ற வேண்டி வரும்?')

★ எதுவித எதிர்பார்ப்புமில்லாது மலர்வதல்ல காதல் என்கிறேன் நான். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
சரோ, ஸ்காபரோ

அப்படியானால் எதிர்பார்ப்புகளுடன் மலர்வது தான் காதல் என்கிறீர்களோ? மன்னிக்கவும். அப்படியானால் அது காதலே அல்ல. உதாரணமாக சிலர் பக்தியுடன் எந்த வித எதிர்பார்ப்பும் இன்றி கடவுளை வணங்குவார்கள். வேறு சிலரோ 'பாலும் தெளிதேனும்' எனப் பஜனை பாடி அதைத் தா.. இதைத் தா என பக்தியுடன் வேண்டிக் கொள்வார்கள். இவ்விரு வகையிலும் எதை உண்மையான பக்தி என்று சொல்ல முடியும்? இது போலவே 'எதுவித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் வெறுமனே வெறித்தனமாக அன்பு செலுத்துவதே காதல்' எனப்படும் முனிவரின் என்சைக்கிளோபீடியாவில். (அதேசமயம் கல்யாணத்துக்கு பின்னால் வரும் காதலிலும் எனக்கு நம்பிக்கையுண்டு)

★ இனி ஊருக்குப் போனால் சீதனமில்லாமல் திருமணம் முடிக்கத்தான் நேரிடும். அதனால் இங்கிருந்து திருமணம் முடிக்க ஊருக்கு செல்வோரின் தொகை குறையுமல்லவா?
ஜெயசாந்தினி, மார்க்கம் றோட்

நீர் ஒன்று. சீதனத்தையாவது தமிழரிடமிருந்து பிரிக்க முடிவதாவது. - சீதனத்தை சுதந்திரப் பறவைகள் தடுத்ததாக செய்தி வந்திருப்பது உண்மை தான். ஆனால் வாங்கும் சீதனத்தில் ஒரு பகுதியை 'சீதன வரியாக' செலுத்தினால் சீதனம் வாங்கலாம் என்ற 'சீதனத்தடை திருத்த மசோதா' தமிழீழத்தில் அமுலாகாது என்பது என்ன நிச்சயம்?

★எனது சிநேகிதியை காதலித்த ஒருவர் என் சிநேகிதியுடன் ஒருமுறை வாக்குவாதப்பட்டதிலிருந்து அவளை மறந்து விட்டது போல் நடித்துக் கொண்டு வருகிறார். அவளை மறக்கவும் முடியாமல் இப்போது அதிகமாகக் குடித்து வருவதாகவும் கேள்விப்படுகிறேன். அதற்கு என்ன தீர்வு முனிவர் அவர்களே?
(பெயர் பிரசுரிக்க விருப்பமில்லை)
ஸ்காபரோ

ராமபிரான் ஒருமுறை தன் அம்பை நிலத்தில் ஊன்றிய போது ஒரு தேரை மேல் அம்பு குத்தி தேரை துடிக்கத் தொடங்கியது. தேரை சாகப் போகும் தறுவாயிலாய இராமபிரான் தேரையைக் கண்டார். உடனே தேரையிடம் 'தேரையே. . ஏன் அம்பு உன்னைக் குத்திய போதே அதை கத்திச் சொல்லவில்லை' என்று கலங்கினார் ராமர். 'பெருமானே.. என்னை மற்றவர் வருத்தும் போது உன்னை அழைப்பேன். நீயே என்னை வருத்தும் போது நான் யாரை அழைத்து ஓலமிடுவேன்' என்று அழுததாம் தேரை.

இதுபோல உமது சிநேகிதியின் பால் கொண்ட காதல் வருத்தம் தான் இதற்கும் காரணமென்றால்.. நோய் தீர்க்கும் மருந்து உமது சிநேகிதியைத் தவிர வேறுயாருமில்லை. அவரிடமே இதைக் கேட்டுப் பாரும்.

'புலிகளை ஆதரி' போருக்காக.. உள்ளே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஐ.தே.க மோதல்..

இணங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. தொண்டமான் தொடர்ந்தும் ஐ.தே. கட்சியை ஆதரிக்க வேண்டுமெனின் தனது நிபந்தனைகளுக்கு ஐ.தே.க இணங்க வேண்டுமென வலியுறுத்தினார் என்றும் செல்லச்சாமி மீதான நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டதாகவும் கொழும்பு தகவல்கள் கூறுகின்றன.

தென்மாகாணத்தில் உள்ள தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களின் வாக்குகள் சுதந்திரக் கட்சிக்கே விழுந்ததாக ஐ.தே.கட்சி கருதுவதால் தொண்டமானின் மலையக வாக்குகள் இல்லாமல் அடுத்த தேர்தல்களில் வெல்ல முடியாது என்று அரசு கருதுகிறது. இதனால் தான் ஜே.ஆர் தொண்டமானை ஜனாதிபதியுடன் சமரசம் செய்ததாக கருதப்படுகிறது. தெனியாய, அக்குரஸ்ஸ, ஹக்மன, கரந்தெனியா, பெந்தர, பத்தேகம போன்ற இடங்களில் உள்ள தோட்டங்களில் தமிழர்கள் வாழ்கின்றனர்.

தென் மாகாணத் தோல்விக்கு தானே காரணம் என்று கூறி சிறிசேன கூரே பதவியை ராஜினாமா செய்ய முன்வந்ததாகவும் இது குறித்து முடிவெடுக்க தனக்கு காலஅவகாசம் தரும்படி ஜனாதிபதி கேட்டதாகவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இதற்குள் காமினி திசநாயக்கவைப் பாராளுமன்றத்திற்குள் கொண்டு வந்து அமைச்சர் பதவி கொடுக்கும் முயற்சிகள் நடைபெறுவதாகவும் இதற்கு முக்கியஸ்தர்கள் பலர் எதிர்ப்பு தெரிவித்ததாகவும் பிரேமதாசவின் ஆதரவாளர்கள் பிரேமதாசாவின் மகனை பாராளுமன்றத்திற்குள் கொண்டு வர முயல்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே.ஆரின் சந்திப்பின் பின்னர் போட்டிக் குழுக்களுக்கு இடையில் சமரசம் ஏற்பட்டதாகவும் அடுத்த தேர்தலில் ஒற்றுமையாகப் போட்டியிட சகல தரப்பினரும் முடிவு செய்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கு முன்னர் விஜேதுங்கவை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தும் முடிவை வாபஸ் பெற்று வேறு யாரையாவது நிறுத்த வேண்டும் என சில குழுக்கள் முயன்றதாகவும் கூறப்பட்டது.

தங்கள் கட்சிக்குள் மோதல் இல்லை என்று விஜேதுங்க மறுத்துள்ளார். சில தொடர்பு சாதனங்களே ஐ.தே.கவின் நம்பகத் தன்மையைக் குறைக்கும் நோக்கில் ஆதாரமில்லாத பிரசாரத்தை மேற்கொள்கின்றன என்று ஐ.தே.க பாராளுமன்றக் குழு கூட்டத்தின் போது ஜனாதிபதி கூறினார்.

இப்போது தோல்விக்கான காரணங்களை அறியும் நோக்குடன் குழு ஒன்று நியமிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் கட்சியின் திட்டங்கள் பற்றி முடிவெடுக்கவும் அக்குழு பணிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் அரசியலமைப்பு அமைச்சர் சொக்ஸி, அமைச்சர் விஜயபால மெண்டிஸ், சிறிசேன கூரே ஆகியோர் அங்கம் வகிப்பர். தோல்விக்கான காரணங்களாக இனவாதப் பேச்சு என்றும் இதனால் தென்மாகாணத்தில் உள்ள முப்பதாயிரம் தமிழ் வாக்குகள் இழக்கப்பட்டதாகவும் முஸலிம்களும் இனவாதப் போக்கினால் சுதந்திரக் கட்சியை ஆதரித்ததாகவும் சிலர் கருத்து தெரிவித்துள்ளனர். வேறு சிலர் தென்பகுதியில் பிரேமதாசவின் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றும் இதுவே தோல்விக்கு காரணம் என்றும் கூறியுள்ளனர்

# தமிழ் அகதிகளால் பதவி இழந்த டென்மார்க் அமைச்சர்

டென்மார்க்கில் 'தமிழ்கேட்' விவகாரம் முடிவு நிலைக்கு வந்துள்ளது. டென்மார்க்கில் உள்ள அகதிகளுடன் அவர்களது உறவினர்கள் இணைந்து கொள்வதற்கு தடையாக இருந்தது குறித்து முன்னைய அரசு மீது கண்டனங்கள் எழுந்து பிரதமர் போல் ஷ்லூய்ட்டரின் அரசு கவிழ்ந்தது. தற்போது முன்னாள் நீதியமைச்சர் எரிக் நின் ஹான்சனை பதவி நீக்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. கன்சர்வேட்டிவ் கட்சியின் சிரேட்ட உறுப்பினரான இவர் 1987ல் தமிழ் அகதிகள் குடும்பங்கள் இணைவதை நிறுத்துவதற்கு கட்டளையிட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

தற்போதைய அரசியல் போட்டிகளால் இந்த விடயம் கிறிமினல் வழக்கு போல நடத்தப்படுகிறது. ஹன்சனே தான் தனது அமைச்சரவையினதும் எதிர்க்கட்சியினதும் விருப்பத்தையே நிறைவேற்றியதாக கூறியுள்ளார்.

41 வருடங்களாக பாராளுமன்றத்தில் இருந்து வரும் தன்னை வெளியேற்ற பாராளுமன்றம் எடுத்த முயற்சி குறித்து கூறும் போது தன் மீது ஏன் குற்றம் சாட்டுகிறார்கள் என்று புரியவில்லை என்று தெரிவித்தார். இதில் குற்றம் காணப்படும் இடத்து இவர் இரண்டு வருடங்கள் சிறையில் கழிக்கவும் நேரிடலாம்.

# தொடர்ந்தும் ஜனசவிய

தென் மாகாணத் தேர்தலில் தோல்வியடைந்ததை அடுத்து மக்களின் எதிர்ப்புணர்வைப் புரிந்து கொண்ட ஐ.தே.க அரசு தான் நிறுத்தப் போவதாக அறிவித்திருந்த திட்டங்களை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப் போவதாக கூறியுள்ளது. பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் சீருடைகள், மதிய உணவு போன்றன நிறுத்தப்படப் போவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த வெட்டுகளாலேயே ஐ.தே.க தோற்க வேண்டி வந்தது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. நாற்பது லட்சம் குழந்தைகளுக்கு பயன்படும் இந்த திட்டங்களால் அதிக பணம் செலவாகுவதாக அரசாங்கம் கூறியிருந்தது.

இத்திட்டங்களுடன் ஜனசவியத் திட்டமும் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த திட்டம் மீண்டும் அமுலாகலாம் என்று கூறப்படுகிறது. பிரேமதாசாவே இந்த திட்டத்தை அமுலாக்கியிருந்தார்.

# முகாமில் தீ ஒருவர் பலி

புத்தளம் பகுதியில் புலிகளால் விரட்டப்பட்ட முஸ்லிம்கள் வாழ்ந்த அகதி முகாம் ஒன்றில் தீ பற்றிக் கொண்டதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 186 குடிசைகளும் எரிந்து சாம்பராகியுள்ளன. தீ பற்றிக் கொண்டதும் மற்றவர்கள் தப்பிக் கொண்டனர் என்றும் இதனால் மற்றவர்கள் யாரும் பாதிப்புறவில்லை என்றும் பொலிசார் தெரிவிததனர்.

சமையலறையிலிருந்தே இந்த தீ பரவியிருக்கலாம் என்று அங்கு வாழும் ஒருவர் தெரிவித்தார்.

புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட 1200 முஸ்லிம்களே இந்த அகதிமுகாமில் வாழ்ந்து வந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எதிர்பார்ப்புகளில் ஏமாற்றம் தந்த விஜேதுங்க

## றெய்ட்டர் நிருபர் கட்டுரை

தற்போதைய ஜனாதிபதி விஜேதுங்க பற்றி றெய்ட்டர் செய்தி முகவர் செய்திக் குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியாக பதிலீடு செய்யப்பட்ட மென்மையான இயல்பு படைத்த விஜேதுங்க தனது நோக்கம் பற்றி மக்கள் கருதிக் கொண்டவை தவறு என நிரூபித்து வருகிறார். சிலர் இவர் சர்ச்சைக்கு அப்பாற்பட்டவர் என்று கருதிக் கொண்டனர். மற்றவர்கள் இவர் முன்பு போலவே பின்னணியில் நின்று எதுவும் பேசாமல் செயலாற்றுவார் என்று நினைத்தனர். இரண்டு கணிப்புகளுமே தவறானது.

நரைத்த தலை கொண்ட விஜேதுங்க கடுமையாகப் பேசும் ஜனாதிபதியாக, சர்ச்சைகளுக்குள் தன்னை ஆட்படுத்திக் கொள்வதுடன் தனது எதிரிகளுக்கு இடம் கொடுக்காமல் இருக்கிறார்.

'இவர் ஒரு தூங்கும் ஜனாதிபதி என்று நினைத்தவர்கள் இப்போது தூக்கம் கலைந்து இவர் விளையாட்டானவர் அல்ல என்பதையும் அவருக்கு முன்னர் இருந்த ஜனாதிபதியை விட கடுமையானவர் என்பதையும் உணர்ந்து கொண்டனர் என்கிறார் ஒரு பத்திரிகையாளர்.

இனவாதக் கருத்துக்களை சொன்னதன் மூலம் தமிழர்களை கோபமூட்டியதுடன் காமினியையும் அனுராவையும் கட்சியில் சேர்த்து பலரை ஆச்சரியத்துக்குள்ளாக்கியும் தொடர்ந்தும் பதவியில் இருக்க முடிவு செய்து அதிர்ச்சிக்குள்ளாக்கியும் வருகிறார்.

பிரேமதாச கொல்லப்பட்ட போது பிரதமராக இருந்தவர் ஜனாதிபதியாக வந்த போது, இவர் வெறுமனே இடைக்கால ஜனாதிபதியாகத் தான் இருப்பார் என அவதானிகள் கருதினர்.

ஆனால் இந்த அவதானிகள் இந்த மாற்றங்களால் அதிர்ச்சியடையவில்லை. 'ஒரு கிராம சண்டியன் மேல் மட்டங்களுடன் பழகும் போது நடந்து கொள்வதற்கு இது சரியான உதாரணம். அவர் முழுமையாக பழுதாகி, தனது நோக்கங்களை மறந்து விடுகிறார். பின்னர் ஒவ்வொரு முரண்படும் அழுத்தங்களுக்குள்ளும் சிக்கிக் கொள்கிறார்' என்று குறிப்பிடுகிறார் ஆய்வாளர் ஹெக்டர் அபேவர்த்தன.

ஆனால் கண்டிய மலைப்பகுதியில் கிராமப்புறம் ஒன்றில் வளர்ந்து அரசியலுக்கு வருமுன்னர் கூட்டுறவு பரிசோதகராகப் பணியாற்றிய இவர் பலரைக் கவர்ந்தும் இருக்கிறார்.

'நீண்ட காலமாக நாங்கள் தேடிக் கொண்டிருந்த உண்மையான தலைவர் இவர்தான்' என்கிறார் பெரும்பான்மைச் சிங்களவர்களின் உரிமைக்காகப் போராடும் காமினி ஜயசூரிய.

பிரேமதாச இறந்த பின்னர் எல்லாவற்றையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பொருளாதார சீர்திருத்தங்கள் தொடரும் என வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உறுதியளித்தார் என்று ஒரு பொருளியலாளர் கூறுகிறார்.

தனக்கு முன் ஜனாதிபதியாக இருந்தவர்கள் போலன்றி, அடுத்த தேர்தலில் சிங்களவர்களின் வாக்குகளை மட்டும் கொண்டே தான் வெல்ல முடியும் என்று இவர் கருதுவது இவருக்கு எதிராக முடியும் என்கிறார் அரசியல் பேராசிரியர் ஒருவர்.

தமிழர்களுக்கு அதிக உரிமைகள் கொடுக்கப்படுவதாக இவர் சொல்லி சிங்கள கடும் போக்காளர்களை தம் வசப்படுத்த முயன்ற போது, வழமையாக ஐ.தே. கவை ஆதரித்த சிறுபான்மையினரை மனம் நோகச் செய்கிறார் என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

இனப்பிரச்சனை இல்லை, பயங்கரவாதப் பிரச்சனையே உள்ளது என்று இவர் கூறுவது தமிழர்களை கோபமூட்டுகிறது.

பெரும்பான்மை இனம் மரம் போன்றது. சிறுபான்மை இனம் கொடிகள் போன்றது என்று வர்ணித்தது பெரும் எதிர்ப்பைக் கிளப்பியது. இந்த வாதம் தான் கிழக்கில் சிறுபான்மையினர் அரசுக்கு எதிராக வாக்களிக்க வைத்தது.

சிறுபான்மையினர் வாழும் பகுதிகளில் அவமானப்படும் அளவுக்கான தோல்வியை ஐ.தே.க அடைந்திருப்பது தமிழ் மக்கள் எந்தக் கட்டத்திலும் உயிர்வாழ்வதற்காக மரத்தில் தங்கியிருக்கும் கொடிகளைப் போல வாழ தமிழர்கள் தயாரில்லை என்பதைக் காட்டியிருக்கிறது என்கிறார் சித்தார்த்தன்.

ஒரு புறத்தில் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறார். அதே நேரம், சிறுபான்மையினர் பிரச்சனை தீர்க்கப்பட்டதால் பேசுவதற்கு எதுவும் இல்லை என்றும் கூறுகிறார்.

இனரீதியான கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தில் பணிபுரியும் நீலன் திருச்செல்வத்தின் கருத்துப்படி 'கிராமப்புறங்களில் வாழும் சிங்களக் கடும் போக்காளரின் நிலைப்பாட்டையே ஜனாதிபதியும் கொண்டிருக்கிறார். இதன்படி எந்த இனப்பிரச்சனையும் இல்லை. இந்த யுத்தத்திற்கு தீர்வு இராணுவத் தீர்வு. சிங்களவர்கள் சிறுபான்மையினருக்கு போதுமான உரிமைகள் வழங்கியுள்ளனர் என்பதே இதன் கருத்தாகும் என்கிறார் நீலன் திருச்செல்வம்.

ஜனாதிபதியால் கொண்டிருக்கப்பட்ட அதிகாரங்களை விடத் தயார் என்று கூறிய இவர் தொடர்ந்தும் பதவியில் இருக்க முயல்வது பற்றி பலர் ஆச்சரியம் கொள்கின்றனர். ஆரம்பத்தில் நடுநிலையாளராக இருந்த இவர் முன்னைய ஜனாதிபதிகள் போல புகுந்து விளையாடுகிறார்.

தனது செல்வாக்கை உயர்த்த, பலம் வாய்ந்த பழைய ஐ. தே.கட்சிக்காரர்களைக் கொண்டு வந்துள்ளார். எதிர்க்கட்சிகளைப் பிரித்துள்ளார். அத்துடன் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் சம்பந்தப்பட்ட இரண்டு ஐ.தே.க ஆதரவாளர்களுக்கு மன்னிப்புக் கொடுத்ததில் பெரும் எதிர்ப்பைத் தேடிக் கொண்டுள்ளார்.

இவ்வாறு றெய்ட்டர் நிருபர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அமெரிக்க ராஜதந்திரி கிழக்கு சென்றார்

இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க ராஜதந்திரியான றெபின் ரபேல் மட்டக்களப்புக்கும் விஜயம் செய்திருக்கிறார். அங்கு அவர் சமயத் தலைவர்களையும் இராணுவத்தினரையும் சந்தித்தார். ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையையும் சந்தித்தார்.

தேர்தலின் பின்னர் அங்கு நிலைமையை அவதானிக்கவும் ஜனநாயகமும் சிவில் நிர்வாகமும் தேர்தலின் பின் செயற்படுகிறதா என்றும் பார்வையிடவும் மனித உரிமை மீறல்கள் பற்றி அறியவும் விரும்பினார் என்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார். அவ்வாறான நிலை இல்லை எனத் தான் கூறியதாகவும் அவர் மேலும் கூறினார்.

றெபின் ரபேல் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சியினர் ஆகியோரையும் சந்தித்தார்.

## புலிகள் புதிய நாணயம் வெளியிடுகிறார்கள்

புலிகள் தமிழீழப் பகுதிகளில் புதிய நாணயம் ஒன்றை அமுல்படுத்த உள்ளார்கள் என்று செய்திகள் கூறுகின்றன. இலங்கை நாணயம் நூறு ரூபாய்க்கு எண்பது ரூபா தமிழீழ நாணயம் என்ற விகிதத்தில் இந்த நாணய மாற்று நடைபெறும் என்றும் இதற்காக வங்கிகள் திறக்கப்பட உள்ளன என்றும் கூறப்படுகிறது. சித்திரைப் புத்தாண்டுடன் இத்திட்டம் அமுலாகும் என்று கூறப்பட்ட போதும் இதற்கு பல வகைகளிலும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது ஒருவகையில் மக்கள் மீது சுமத்தப்படும் வரியே என்ற அபிப்பிராயம் நிலவுகிறது. இது குறித்து பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு இது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்று நிதி ராஜாங்க அமைச்சர் ஹேரத் தெரிவித்திருக்கிறார். அவ்வாறு அச்சிடுவது சட்டவிரோதமானது என்றும் அவை குற்றங்கள் எனக் கருதப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

## எதிர்க்கட்சி உறுப்பினர் சுட்டுக்கொலை

தென்னிலங்கையில் எதிர்க்கட்சியைச் சார்ந்த உள்ளூராட்சி உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சந்திரா டி சில்வா என்ற இவர் தென் மாகாண சபைத் தேர்தலுக்காக பிரசாரங்களில் ஈடுபட்டவர்களில் முக்கியமானவர். இவரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சுட்டுக் கொன்றுள்ளனர். பேருவளையில் இந்த சம்பவம் நடைபெற்றிருக்கிறது. சுட்டவர்கள் தப்பியோடியிருக்கிறார்கள்.

கடந்த வாரம் தான் சிறிமாவோ பண்டாரநாயக்க தனது ஆதரவாளர்கள் மிரட்டப்படுகிறார்கள் என்று அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டிருந்தார். அத்துடன் பொலிசார் பாரபட்சமாக நடக்கிறார்கள், முறைப்பாடுகளை பதிவு செய்யவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் ஹினிதுமவில் சுதந்திரக் கட்சி கிளைத்தலைவர் ஒருவர் பொல்லால் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். ஹக்மனையில் சுதந்திரக் கட்சி ஆதரவாளர் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார். வேறு பல இடங்களிலும் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்பட்டதுடன் வீடுகள், கடைகள் தாக்கப்பட்டுள்ளன.

## கல்முனையில் மு.கா மாநாடு

முஸ்லிம் காங்கிரஸ் கல்முனையில் தனது வருடாந்த மாநாட்டை நடத்துகிறது. முன்பு பிரேமதாசா ஆட்சியிலிருந்த போது ஜனாதிபதி சிறப்பு விருந்தினராக அழைக்கப்படுவதுண்டு. ஆனால் இம்முறை ஜனாதிபதி அழைககப்படவில்லை. ஜனாதிபதியின் இனவாதப் போக்கு காரணமாக சென்ற கிழக்கு தேர்தலில் அஷ்ரப் அரசுக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபட்டதுடன் தமிழர்களுக்கு ஆதரவான கருத்துக்களையும் தெரிவித்திருந்தார்.

மாநாட்டில் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம், சுதந்திரக் கட்சி சார்பில் சந்திரிகா ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். வாசுதேவ நாணயக்காரவும் கலந்து கொள்கிறார்.

## உள்ளூராட்சி சபைகள் பதவியேற்பு

வவுனியா மற்றும் கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் வென்றவர்களிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட உள்ளது. மட்டக்களப்பில் செழியன் பேரின்பநாயகம் தலைமையில் உள்ள அணி பதவியேற்க உள்ளது. மட்டக்களப்பில் 11 சபைகளும் திருமலையில் பத்து சபைகளும் அம்பாறையில் பதினைந்து சபைகளும் தெரிவு செய்யப்பட்டவர்களின் நிர்வாகத்தின் கீழ் வருகின்றன.

இதில் முஸ்லிம் காங்கிரசின் கட்டுப்பாட்டில் ஆறு சபைகள். ஐ.தே.கவின் கட்டுப்பாட்டில் அம்பாறை நகரசபை உட்பட 17 சபைகள். சுதந்திரக்கட்சியின் கட்டுப்பாட்டில் மூன்று சபைகள், சுயேச்சைகளின் கையில் 12 சபைகள் என்பன உள்ளன.

கிறிஸ்தவ திருமணங்களில் மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை, அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் வாடகைக்கு பெற்றுக் கொள்ள
ராஜி
796 2672
பூங்கொத்துக்கள் நீங்கள் விரும்பிய வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம்
Net, Colorful Flower Bouquet, Flower Basket



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு ஆயர் விஜயம்

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப்பகுதிகளுக்கு யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் விஜயம் செய்துள்ளார். அங்கு ஒரு வார காலம் தங்கியிருந்து அங்குள்ள கத்தோலிக்க மக்களைச் சந்தித்ததுடன் சில இடங்களில் திருப்பலியும் நிறைவேற்றினார். அத்துடன் இளவாலைக்கும் சென்றார். ஊர்காவற்றுறை, இளவாலை போன்ற பகுதிகளில் கத்தோலிக்கர்கள் பெருமளவில் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது விஜயத்தை முடித்துக் கொண்ட பின்னர் காங்கேசன் துறையிலிருந்து பருத்தித்துறை ஊடாக யாழ்.நகர் வந்து சேர்ந்தார்.

## புலிகளோடு ஒப்பந்தம் இல்லை சவான் மறுப்பு

புலிகளுடன் எந்த வித ஒப்பந்தமும் இல்லை என்றும் இந்தியாவில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் அமைப்புகளின் மீதான தடை நீக்கப்படாது என்றும் உள்துறை அமைச்சர் சவான் தெரிவித்திருக்கிறார்.

றோவும் புலிகளின் ஐரோப்பியக் கிளையும் சந்தித்துக் கொண்டதாக வாரப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டதை அடுத்து பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே சவான் இவ்வாறு தெரிவித்தார். இந்த பத்திரிகைச் செய்திகள் தவறானவை. தொடர்ந்தும் புலிகள் மீதான தடை உள்ளது என்று அவர் கூறினார்.

இந்த செய்தியின் அடிப்படையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் குறித்து ஜெயலலிதா சட்டசபையில் கருத்துக் கூறுகையில் 'தமிழக அரசு புலிகளை சுதந்திரமாக உலவ விடுகிறது' என்று மத்திய அரசு குற்றம் சாட்டுகிறது. ஆனால் றோ புலிகளுடன் பேச்சுவார்தை நடத்துகிறது என்று சாடினார். இவ்வாறு குற்றம் சாட்டுவோர் தமிழக காங்கிரஸ்காரரே என்றும் அவர் கூறினார்.

## அஷ்ரப் பதவி விலக மாட்டார்

அஷ்ரப் தனது பதவியை ராஜினாமா செய்ய மாட்டார் என்று தெரிய வருகிறது. மாகாண சபைத் தேர்தலில் ஆறு சபைகளில் வெற்றி பெறாவிட்டால் தனது பதவியை ராஜினாமா செய்வதாக இவர் கூறியிருந்தார். எல்லா சபைகளிலும் வெல்ல முடியாமல் போனதால் இவர் ராஜினாமா செய்ய முன்வந்த போதும் இவர் பதவி விலகினால் அடுத்த பட்டியலில் வேகு இசாதீன் பதவி ஏற்க வேண்டி வரும் என்று காரணம் காட்டி இவர் பதவி விலகாமல் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்க உள்ளார். இவரைப் பதவி விலகாமல் தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

வேகு இஸாதீன் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட போதிலும் அது சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு வரும் வரைக்கும் அவர் தனது பதவியை ராஜினாமாச் செய்ய மாட்டார் என்று கூறப்படுகிறது.

## யாழ்ப்பாணத்திற்கு கோமல்

சுபமங்களா ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் எழுத்தாளர்களைச் சந்தித்தும் கூட்டங்களில் கலந்து கொண்டும் பயணம் மேற்கொண்டுள்ள இவர் யாழ்ப்பாணத்திலும் எழுத்தாளர்கள், நாடக கலைஞர்கள் போன்றோரைச் சந்திப்பதுடன் பல்கலைக்கழகத்திலும் உரையாற்றுவார்.

## பேச்சுவார்த்தை முயற்சி

லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட இன்ரர்நஷனல்அலேட் நிறுவனப் பிரதிநிதி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த யாழ்ப்பாணம் சென்றதாக கொழும்பு செய்திகள் கூறுகின்றன. லிஸ் பிலிப்சன் என்ற இந்த பிரதிநிதி கொழும்பில்உள்ள தமிழ் கட்சிகளுடனும் அரச அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி மு.காங்கிரஸ் நிலைப்பாடு மாற்றம்

வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி தற்போது முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. அம்பாறை மாவட்டதில் தமிழ் மக்கள் ஐ.தே.கட்சியை ஆதரித்ததன் பின்பே முஸ்லிம் காங்கிரஸ் தன் நிலைப்பாட்டை மாற்றுவது பற்றி யோசித்துள்ளதாக கூறப்படுகிறது. ஜனாதிபதியின் சிங்கள இனவாதம் காரணமாக தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்து போராட வேண்டிய அவசியத்தையும் காங்கிரஸ் உணர்ந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸ் கூட்டணியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது. அங்கு இந்த பிரச்சனைகள் பற்றி கலந்துரையாடப்பட்டதாகவும் வடக்கு கிழக்கில் முஸ்லிம்களின் நிலை பற்றி ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்க்ப்படுகிறது. கல்முனையில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டின் பின்னர் இது தொடரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இம்முறை ஐ.தே.க மேதினக் கேளிக்கைகள் இல்லை

இம்முறை மே தினக் கொண்டாட்டத்தை ஐ.தே.கட்சி அமைதியாகக் கொண்டாட உள்ளது. சென்ற வருடம் மே தினத்தில் பிரேமதாச கொல்லப்பட்டதால் அதை நினைவு கூரும் வகையில் வழமையான கேளிக்கைகள் இன்றி அமைதியாகக் கொண்டாடப்படும். இந்த முடிவை ஐ.தே.க செயற்குழு எடுத்திருக்கிறது. சமய அனுட்டானங்களுடன் நாடெங்கும் அன்னதானம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.


முன்பு நடைபெற்றது போல் காலிமுகத்திடலில் இந்தியக் கலைஞர்களைக் கொண்ட கலைநிகழ்ச்சிகள் இடம் பெற மாட்டாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# GOOD BYE BALDNESS



# முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

## ஒரு சிறு குமிழ் உங்கள் கேசத்தை வளரச் செய்கிறது

## பரீட்சித்துப் பாருங்கள்


## Try First

பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்


239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

# சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!

# Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.




## NERVOGEN NERVE FOOD

உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.


அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.

Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada




## CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder *இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது.* Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix *போன்றனவும் கிடைக்கும்.*




## DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சூர்ய கிரணின் சங்கவி "பத்துப்பாட்டு"

## மூர்த்தி

கனடாவில் வாழும் ஈழத்தமிழர்களில் பெரும்பான்மையோர் இன்னும் 'இறக்குமதி' செய்யப்பட்ட புட்டுக்குழல்களில் அவித்துக் கொண்டிருந்தாலும் கூட, பிறிதொரு பகுதியில் மிகவேகமாக 'ஹை டெக்' பாவனையை ஈழத்தமிழர் கலாச்சாரத்துள் பிணைத்துவிடும் முயற்சியும் சளைக்காமல் நடக்கிறது. சட்டலைட் வழியாக ஐரோப்பாவையும் அவுஸ்திரேலியாவையும் தாய்நாட்டையும் விரல் நுனியில் தொலைபேசிகளால் இணைத்தது போதாதென்று இப்போ தொலைக்காட்சிகளாலும் இணைத்து வலையாக்க செய்கிறார்கள். டெஸ்க்ட்ரொப் பப்ளி ஷிங் முறையில் கனடாத் தமிழர்கள் என்றோ அதி அதிவிசேட சித்தியடைந்தாயிற்று. வீட்டுக்கு வீடு அதிவேக 486 ஐ வைத்துக்கொண்டு "வேர்ட் பேர்:.பெக்ட் கேம்ஸ்...' என கம்பியூட்டர் பேசுகிறார்கள் விலையுர்ந்த கம்பியூட்டரின் சிடி ரொம் பகுதியை தமிழ் பாட்டு கேட்க மட்டும் உபயோகிப்பவர்களுமுண்டு. குழந்தைகள் "மம்மி...டடி... நின்ரன்டோ..." என மழலை பேசுகிறார்கள்.

சென்றவாரம் இவ்வரிசையில் வேறோர் பாராட்டத்தக்க புது முயற்சியும் ஆரம்பமாகியிருக்கிறது. சூர்யகிரண் ஆர்ட்ஸ் நிறுவனம் ஒரு கொம்பாக்ட் டிஸ்க்கை தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள். அதிலென்ன விசேடம்? இங்குள்ள தமிழ்க் கடைகளில் ஏற்கனவே தென்னிந்திய தமிழ் சினிமா பாடல்கள் 'சிடி' த்துக்கொண்டு.. மன்னிக்கவும்... சிரித்துக் கொண்டு இருந்தாலும்கூட இந்த தமிழ் கொம்பாக்கட் டிஸ்க் வேறுவகையில் ஒரு சிறப்புக் கொண்டிருக்கிறது. கனடா வாழும் சில ஈழத்தமிழர்களின் கூட்டு முயற்சியாக புதியவரான குணரட்னம் கிரிதரன் இசையாக்கத்தில் பத்துப்பாடல்களை பதித்துக்கொண்டு இது வெளியாகியிருக்கிறது. பாடல்களை பாடியவர்களும் வாத்தியக் கலைஞர்களில் பெரும்பான்மையோரும் கனடாவின் மேடைகளில் பிரபல்யம் பெற்ற ஈழத்தமிழர்கள். பாராட்டுக்குரிய புதிய முயற்சி.

எந்தப் புதிய முயற்சி பற்றியும் எழுத்தில் அபிப்பிராயங்களைப் பகிர்வதில் எவருக்கும் ஆட்சேபனையிருக்காது. அதற்காக காரணமின்றி வெறுமனே பாராட்டுக்களை மட்டும் வாரி வழங்குவது மிகவும் ஆபத்தான செயல். அது சம்பந்தப்பட்டவரை ஏமாற்றுவதாகும். அதே சமயம் விமர்சனம் என்ற பெயரில் கடித்துக் குதறுவதும் பொறுப்பற்ற செயல் இவ்விரண்டிற்குமிடையே கவனமாக நடந்து இம்முயற்சியை நோக்கும்போது, தமிழக சினிமாப்பாடல்கள் இசையமைத்தவரையும் பாடல்களை எழுதியவரையும் கடுமையாக பாதித்திருப்பதுதான் முதலில் தென்படுகிறது. துரதிஷ்டவசமாக ஈழத்தமிழருக்கென்று ஒரு தனித்துவமான பலம் வாய்ந்த வெகுஜன கலைத்தளம் இருந்ததில்லை என்பது ஒரு கசப்பான உண்மையாதலால், இம்முயற்சியில் தமிழ் சினிமாச் சாயல் தென்படுவதை வழமை போல் மக்களைக் கவர எடுத்த ஜனரஞ்சக முயற்சி என்றே கணிக்க வேண்டியுள்ளது.

ஈழத்தமிழருக்கென்று ஒரு தனித்துவமான பலம் வாய்ந்த வெகுஜன கலைத்தளம் இருந்ததில்லை என்பது ஒரு கசப்பான உண்மையாதலால், இம்முயற்சியில் தமிழ் சினிமாச் சாயல் தென்படுவதை வழமை போல் மக்களைக் கவர எடுத்த ஜனரஞ்சக முயற்சி என்றே கணிக்க வேண்டியுள்ளது.

பாட்டு ஒன்று: கண்கள் தினம் காணும் விழா..." மோகனத்தில் முதல் பாடல் ஆரம்பிக்கும் போதே இசைத்தட்டின் இசைத்தொகுப்பின் தரம் பளிச் என்று தெரிகிறது. பாடல் வரிகள் சாதாரணம்.. ஆனால் பாடிய நடா ஜெயதேவனின் குரல் வளம் இது வரை தெரியாதிருந்த பெரிய விடயம். மேடைகளில் கிட்டாரிஸ்டாக தெரிந்த நடா உணர்ந்து பாடும் நல்லதொரு பாடகராகவும் ஒலிக்கிறார். புல்லாங்குழல் குழைந்து குழைந்து லயிக்க வைக்கிறது. பின்னால் வரும் ஹம்மிங்குகள் மேலும் மெருகூட்டுகின்றன ஆனால் கூடப் பாடும் பாடகி விழா — என்பதை 'வவ்விளா' என்று உச்சரிப்பதைத்தான் சகிக்க முடியவில்லை.

பாட்டு இரண்டு "பாட்டொன்று பாடும் பாவம்..." தமிழ் சினிமாவில் காதல் வேகத்தில் பாடும் டிப்பிக்கல் பாட்டுப்போல இசை அமைகிறது. இவ்வகைப் பாடல்களுக்கு சினிமா தரும் சிவரஞ்சனி ராகத்தில் இழையும் இப்பாடலை இசையமைத்த கிரிதரனே தனித்துப் பாடியிருக்கிறார். நன்றாகவே பாடுகிறார்.

பாட்டு மூன்று: "உன்னை பார்த்தபோது.." இது ஒரு லவ் டுயட். இசையமைப்பும் பக்கா தமிழ் சினிமாப்பாட்டேதான். பாடும் சுந்தரின் குரல் ரேஞ்சிற்கு பாடல் பொருந்துகிறது. ஆனால் பாடகியின் குரல் சில இடங்களில் வீக்காகி ஒலிக்கிறதே.

பாட்டு நான்கு: "கண்ணுறங்கு... அன்புத்தாயே..." தாய்பாசம் பற்றி பாடாத தமிழ் சினிமாவா... எனுமளவுக்கு எத்தனை தாய்ப்பாசப் பாட்டுக்களை கேட்டிருக்கிறோம். அவ்வகைப் பாடல்களிலொன்றை அடியொற்றி இப்பாடல். தாய்க்கு ஒரு தாலாட்டு ரசித்துப் பாடுபவர் யூட்சன் சூசைதாசன். கனடா மேடைகளில் புகழ்பெற்ற பாடகர்களில் ஒருவர் பாடலின் இடையே ஒலிக்கும் பிற்குரல்கள் இரண்டும் மேலும் மெருகூட்டுகின்றன.

பாட்டு ஐந்து: "நீரோடையில் நீந்தும்.. மீனே..." ஆபேரி ராகத்தில் வருகிறது இப்பாடல் முன்பு இலங்கை வானொலி ஒலிபரப்பிய ஈழத்துப்பாடல்களை அச்சாக ஞாபகப்படுத்துகிறது. இப்பாடலுக்கான இசையமைப்பு பாடியவர்களின் திறமை பெரிதாக எடுபடவில்லை. பின்னால் வரும் ஹம்மிங் குரல் (நடாஜெயதேவனோ?) மீண்டும் தூக்கிவிடுகிறது.

பாட்டு ஆறு: "விடியாத இரவோடு... இதைப்பற்றி இப்படி எழுத சிரமமாக இருக்கிறது. ஆனாலும் எழுதத்தான் வேண்டும். இந்த வகைத் தொகுப்பில் இப்படிப்பட்ட ஒரு இயக்கப்பாணிப் பாட்டை எதற்குத் தொகுக்க வேண்டும்?

**28ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கிலாந்து தனது காலனித்துவத்தால் ஆங்கிலத்தை உலகமொழியாக்கியது. அமெரிக்கா நவ காலனித்துவத்தால் டொலரை உலக நாணயமாக்கியது. இந்த இரண்டிலும் தமிழர்களுக்கு மோகம் அதிகம். அதிலும் ஆங்கிலத்தில் அப்படி ஒரு பிடிப்பு. மூன்றும் வகுப்பிலிருந்து கனடாவில் வெல்பெயர் எடுக்கும்வரை படிக்கப்படுகின்ற ஒரே விடயம் ஆங்கிலம். கனடா வருவதற்காக மூன்று மாதத்தில் ஐயரிடம் படித்தது முதல் முப்பது வருசமாக படிப்பவர்கள் வரை தமிழர்கள் ஆறிலிருந்து அறுபது வரை உண்டு. இங்கே வந்தாலும். ELS எனப்படும் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கொண்டவர்களின் வகுப்புகளுக்கு சென்றாலும்.. அங்கு அரைத்த மாவையே அரைப்பதுண்டு.

சில மாதங்களுக்கு முன் என் பால்ய நண்பனும் என்னோடு மாங்காய் எறிவதிலிருந்து வீதிவலம் வருவது வரை ஒன்றாக இருந்த ரவி மாஸ்டர் சமீபத்தில் கனடா வந்திருந்தான். தனது வருங்கால மனைவியால் ஸ்பொன்சர் செய்யப்பட்டு (சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்காக மட்டும்!) தாயகத்தில் எனது தொடரைக் கண்டு என்னுடன் தொடர்பு கொண்ட போது. அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே தோன்றிய பின்னர். தாயகத்திற்கு ஏதாவது எழுத வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அந்த நாட்களில் எங்கள் காதல் கடிதங்களில் எழுதப்பட்ட அனைத்து ஆங்கில வார்த்தைகளும் இவனது அங்கீகாரத்தின் பின்னரே 'வெளியிடப்பட்டன'. இதனால் சாதாரண பாவனையில் உள்ள ஆங்கிலம் பற்றி அவ்வப்போது எழுதுவதாகக் கூறிக் கொண்டுள்ளான். இதில் பல விடயங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கும். (இத்தனை வருஷம் வேறு படிக்கிறீங்க!) இருந்தாலும் சில துணுக்கு ரகமான சங்கதிகள் இதில் வரும். ஒரு பாடத்திட்டத்தின் அடிப்படையானதும் அல்ல. குமுதம் துணுக்குகளைப் படிக்கின்ற போது மனதில் நிற்பதைப் போன்றே இவையும் மனதில் நிற்கக் கூடும். இதைப் படிப்பதற்கு வெல்பெயர் எடுக்க வேண்டும் என்ற விதிமுறைகள் எதுவும் கிடையாது.

**கியூறியஸ் ஜி.**

# ஆறிலிருந்து அறுபது வரை!
# "ஒரு" மூணு மாச விவகாரம்

**மாஸ்டர் ரவி**

தமிழில் ஒரு. ஓர் என்ற பதங்கள் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒன்று என்ற கருத்தில்! பெயர்ச் சொற்களின் முதல் எழுத்து உயிரெழுத்தாக, அ முதல் ஔ வரையிலான. இருந்தால் அவற்றின் முன்னால் "ஓர்" என்றும் மெய்யெழுத்துக்களின் தொடங்கும் சொற்களுக்கு "ஒரு" என்றும் வரும் என்று முன்னும் கிளாசில் படித்திருப்பீர்கள். தமிழில் "இரு" என்ற சொல் இரண்டு என்ற கருத்தில் இதே போன்று "ஈர்" எனப் பாவிக்கப்படும். "ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஒருயிர் ஈருடலான தம்பதிகளாயினர்" என்பதில் இந்த பயன்பாட்டைக் காணலாம். (வெல்பெயர் எடுக்கப் போகும் வரை தான் இது. அப்போது ஈருடல் ஈருயிராகி விடும்). ஆனால் தற்போது இந்த விதிமுறை கணக்கெடுக்கப்படுவதில்லை.

✪ ✪ ✪

அதுசரி. இந்த உயிர் எழுத்து என்பதென்ன? சத்தம் எழுப்பும் போது உதடுகள் முட்டாமல் நாவை அசைக்காமல் எழுப்படுகின்ற ஒலிகள் உயிர் எழுத்துக்கள்.. உதடுகள் முட்டாமல் என்னும் போது ஒரே நபரின் உதடுகள்.. இருவரின் உதடுகள் முட்டுப்படும் போது வருவது ச்.. ச்

✪ ✪ ✪

இதைப் போன்றே ஆங்கிலத்திலும் Vowels எனப்படுகின்ற உயிரெழுத்துக்கள் (A,E,I,O,U) ஆகியவற்றை முதல் எழுத்தாகக் கொண்ட பெயர்ச் சொற்களின் முன்னால் "ஓர்" என்பதைக் குறிக்க an என்ற பதமும் மெய்யெழுத்துக்களான consonant களில் ஆரம்பிக்கும் பெயர்ச் சொற்களின் முன்னால் a எனும் பதம் "ஒரு" என்பதைக் குறிக்கப் பயன்படும் என்றும் எட்டாம் வகுப்பைத் தாண்டியிருந்தால் தெரிந்திருப்பீர்கள்.

ஆனால் இந்த விதிகளைத் தெரிந்திருக்கும் பலருக்கு இதற்கான விதிவிலக்குகள் தெரிவதில்லை. உண்மையில் ஆங்கிலத்தில் a/an பயன்பாடு பெயர்ச் சொல்லின் முதல் எழுத்தில் அல்ல. அதன் சத்தத்திலேயே தங்கியிருக்கிறது. உயிர் எழுத்துக்களில் தொடங்கினாலும் University என்ற சொல்லின் முன்னால் a தான் பாவிக்கப்படுகிறது. காரணம் இது யூனிவேர்சிட்டி என்று உச்சரிக்கப்படுகிறது. இதைப் போலவே European என்பதுவும் யூரோப்பியன் என்று உச்சரிக்கப்படுவதால் a தான் பாவிக்கப்படும். One dollar coin என்பதிலும் வண் என்ற உச்சரிப்பு இருப்பதால் a தான் பயன்படும்.

அத்துடன் மெய்யெழுத்துக்களில் தொடங்கும் பெயர்ச் சொற்களின் முன்னாலும். அந்த மெய்யெழுத்துக்களின் உச்சரிப்பு உயிர் தன்மை கொண்டிருந்ததால் அவற்றின் முன்னால் an பாவிக்கப்படுகிறது. Hour, Honorable person, Hotel (இது சமயங்களில் ஓட்டல் என்று உச்சரிக்கப்படுவதால்) இவற்றின் முன்னால் ஒரு என்ற கருத்தை தர an பயன்படும்.

✪ ✪ ✪

ஞாபகத்தில் இருத்த வேண்டிய இன்னொன்று.. இந்த ஒரு. ஓர் எல்லாம் எண்ணப்படக் கூடிய பெயர்ச் சொற்களின் முன்னால் தான் பயன்படும். advice, news, information, furniture போன்றன ஒருமையாக இருந்த போதும் இவை எண்ணப்பட முடியாததால் இவற்றின் முன் a/an பாவிக்கப்படுவதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழக்கே போய் காத்திருந்தேன்
நீ வரவில்லை
மேற்கே போய் காத்திருந்தேன்
நீ ஏன் வரவில்லை
துயிலின்றி நான் துடித்தால்
கதைசொல்லி நீ கண்ணுறங்கி
போவாய்.....

அமைதியான இரவுகளில்
உன் தாலாட்டில் மலர்களும் உறங்கிவிடுமே
உன்னையே சுற்றி சுற்றி வந்தேன் அன்று
சின்னவள் என்பதாலா?
இன்று சிதைந்துபோன தேசத்தில்
எப்படி நீயும் தனித்தவளாய்

இரவு வெளிச்சத்தை நெசவு செய்ய
உன் கருப்பு கூந்தல்களிலும்
வெள்ளி கம்பிகள் நெய்யப்பட்டிருக்குமோ?
நான் நீந்தி திரிந்த நதியில் தான்
இன்னும் நீ நீராடுகின்றாயோ?
ஓரத்தில் நீராடிவிட்டு திரும்பி விடு
வெள்ளம் என்றால் பயப்படுவாயே!
எப்படி தனிமையாய்......

நீ வளர்த்த பெரிய சிவப்பு சேவல்
செத்து போய்விட்டதா?
அது கூவினால் தானே
அதிகாலையில் நீ எழும்புவாய்?
அது செத்து போனால் எப்படி உன்னால்
அதிகாலையில் எழும்ப முடியும்....
என்னை பிரிந்த உன்னால் வாழ முடியும்
என்றால் அந்த சேவல் செத்து போனால்
உன்னால் எழும்ப முடியாதா என்ன?

இங்கே ஆகாய தேவதைகள்
நித்தமும் சேலைகளை சலவைசெய்வதால்
இந்த பூமியில் சோப்பு தூள்கள்..

என் வீட்டு பல்கனியில்
ஒரு தாய்புரு கூடு கட்டியிருக்கின்றது..
அசிங்கப்படுத்திவிடும் விரட்டிவிடுங்கோ
பக்கத்து வீட்டு பெண் சொன்னாள்
அதற்கு தீனி போடுகின்றேன்
குஞ்சுகள் எல்லாம் எங்கோ
பறந்து போயிருக்க வேண்டும்...
அந்த தாய்புரு தனித்து நிற்கின்ற
போதெல்லாம் உன் நினைவு
என் நெஞ்சை எரிக்கும்.....
இப்போது அந்த புரு
என் வீட்டுக்குள் கூட
வந்து உலாவி திரியும்....
ஆனால் நீ.........

ஜி. மொனிக்கா

## காதல் கனவுகள்

கனவுகள் தான் காதல் என்று
காதலித்தோர் சொன்னதுண்டு
கண்ணீர் தான் காதல் என்று
கண்ணே நான் இன்று கண்டு கொண்டேன் எம்
காதல் காவியத்தில் நம்
கண்ணீரின் முத்திரைகள்
காலத்தால் அழிந்திடுமோ? நம்
காதல்தான் கரை புரண்டு போயிடுமோ?
ஆண்டியும் ஒரு நாள் பூமிக்கே சொந்தமடி
அரசனும் ஒரு நாள் பூமிக்கே சொந்தமடி
அன்பே நீ மட்டும் என்றும்
எனக்கே சொந்தமடி

கே. சுதன்

## அடிச்சுவடுகளை தேடி!

அழகிழந்த எனது தேசத்திற்கு
நான் வருகிறேன்
என்று சொல்லுங்கள்

பிரஜா உரிமை இழந்தவள் நான்
சொந்த நாட்டின் அகதி
என் அடிச்சுவடுகள் புழுதிகிளம்பிய
அந்த செம்மண்ணில் புதைத்து வைக்கப்பட்டுள்ளது
இனிய வசந்த காலங்கள்
பழைய டயரிபோல்
டியூட்டரி வாசல்களிலும் குறுக்குவீதிகளிலும்
சிந்திக்கிடக்கின்றது.

நான் திரும்பி வருகிறேன்
என் தேசத்து காற்றுடன்
நான் அகதியாய் அலைந்தகதை
சொல்லி அழுவதற்கு
அன்னியர்களால் நான் இழந்த
அடையாள இழப்புகளை
சொல்லி ஆறுவதற்கும்.......

கோவில்மடத்திலும் குளத்துகட்டிலும்
அன்று தொலைத்த ஒற்றைக்கால் கொலுசும்
பழைய கதைப்புத்தகத்தையும் தேடி
நான் வருகின்றேன்
பூவரச இலையில் புல்லாங்குழல் செய்து
யாரும் வராத நேரம் ஊதிப்பார்க்க
நான் அங்கே வருகின்றேன்

அழகிழந்த என் தேசத்திற்கு
சொல்லுங்கள்
நான் வருகிறேன் என்று

பாமதி

## கனடா தரகர்

வேட்டியில்லை குடையுமில்லை
பையுமில்லை நடையுமில்லை
கோட்டினிலே புகுந்துகொண்டு
கேள்விகளும் கேட்டிடுவர்

நாட்டினிலே வீடுவீடாய்
நாட்கணக்காய் அலைந்தவரோ
வீட்டினிலே யிருந்துகொண்டு
தொலைபேசியிலே முடித்திடுவார்

காலையில் தொலைபேசியிலே
கோவிலிலே பொண்ணுஎன்பார்
மாலைபதில் வேண்டுமென்பார்
மறுகணமே காசுமென்பார்

எடுத்தவுடன் பொருத்தமென்பார்
எதுவும்செய்யத் துணிந்திடுவார்
அடுத்தொருவர் தலையிடினில்
அடுத்தகணம் கைவிடுவார்.

கந்த வாரணன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு சிம்மாசனத்தின் சூட்சுமம்

## பாலச்சந்தரின் சினிமா யுகம்

அருண்

*விரசம் என கருதப்பட்டவற்றைக் கூட விரசம் தோன்றாமல் நளினமாய் படமாக்கினார் மன்மத லீலையை முக்கியமாய் குறிப்பிட வேண்டும். மேலும் ஒரு ஆண் பெண் முன்னால் தன் ஆடைகளை களைவது போல் அபிநபிப்பதாய் அவள் ஒரு தமிழிச்சியில் ஒரு காட்சி வரும். புன்னகை மன்னனில் முத்தக்காட்சி. அவரது பல படங்களில் காண்பிக்கப்படும் படுக்கை அறைக் காட்சிகள் கூட 'தணிக்கைக்கும் தப்பி வந்தன.*

பாலசந்தர் வசனங்களிலும் பல புதிய அணுகு முறையைக் கையாண்டார். நீர்க்குமிழி, எதிர்நீச்சல், நவக்கிரகங்கள் போன்ற படங்களில் மணிக் கூட்டை வைத்து புதுத்தத்துவங்களை சொன்னார். இது போல் இரு கோடுகளில் ஒரு கட்டம். நாயகன் அலுவலக FILE ஐத் தொலைத்தவர். நாயகியோ அந்நாயகனால் வஞ்சிக்கப்பட்டவர் ஆனால் நாயகனின் அலுவலகப் புதுமுகவர் இச்சூழ்நிலையில் நாயனிடம் நாயகி சொல்வார் "நீங்கள் FILE ஐத் தொலைத்து விட்டீர்கள் அது LIFE போன்றது. கவனமாகப் பாதுகாக்க வேண்டியது. இரண்டுக்கும் எவ்வளவு ஒற்றுமை இருக்கிறது. எழுத்துக்கள் தான் முன்னே, பின்னே மாறி இருந்தாலும் இரண்டிலும் ஒரே எழுத்துகள் தான் வருகிறது" என வரும் வசனம் பலராலும் இன்றும் பாராட்டப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் சிலேடையில் புதுப்பாணியில் வசனம் எழுதியதுடன் காட்சியையும் அமைத்தார்.

ஒரு திரைப்படத்தின் உச்சக்கட்டம் அத்திரைப்பிடம் மீதான ரசிகர்களின் தாக்கத்தை தீர்மானிக்கும் மிக முக்கியமான பாகம். கூடுதலாக இது சொற்ப நேர காட்சியாகவே அமையும். இவ்விடத்திலும் பாலசந்தர் ஒரு சாதனை செய்தார். ....படம் 'தாமரை நெஞ்சம்'. இப்படத்தின் உச்சக்கட்டம் மூன்று படச்சுருள்(ரீல்) கொண்டன. அதாவது முப்பத்தைந்து தொடக்கம் நாற்பது நிமிடங்கள். இத்தகைய நீளமான உச்சக்கட்டத்தில் ரசிகர்களை இருக்கையின் நுனியில் வைத்திருப்பது என்பது பெரும் சவால்தான். இதை பாலசந்தர் செய்து காட்டினார்.

இதைவிட அவள் ஒரு தொடர்கதையில் வசனமே இல்லாத உச்சக்கட்டம் அபூர்வராகங்களில் பாடல் தான் உச்சக்கட்டம். நான் அவனில்லையில் அரைநிமிட உச்சக்கட்டம் நூல்வேலியில் உருவகத்தில் உச்சக்கட்டம். வெள்ளிவிழா, காவியத்தலைவி, இருகோடுகள், போன்ற படங்களில் கூட உச்சக்கட்டங்கள் ரசிகர்களிடம் பெரிதும் படபடப்பை தோற்றுவித்தன. இவ்விடத்தில் இன்னொன்றையும் குறிப்பிட்டால் தகும் என நினைக்கின்றேன். அச்சமில்லை அச்சமில்லை என்ற பட உச்சக்கட்டமே ராஜீவ்காந்தியின் கொலைக்கான பாணியை தூண்டியிருக்கலாம்.

பாலசந்தரது பட முடிவுகள் விபரீதமானதாகவோ கேள்விகளுடனே முடிவை தீர்மானிக்கமுடியாத வகையிலோ பொதுவாக முடிவதுண்டு. இது பல ரசிகர்களை திருப்திபடுத்துவதில்லை. எனினும் இத்ததகைய முடிவுகளால் ரசிகர்கள் முடிவை பல வழிகளிலும் அலச முற்படுவர். இதற்காக முழுத்திரைப்படம் கூட ஆராயப்படலாம். ஆக இத்தகைய முடிவுகளால் திரைப்படம் முடிந்த பின்பும் அது ரசிகர் மனதில் தடம் பதிக்கும். இது பாலசந்தரின் அணுகுமுறை.

படம் பார்த்து விட்டு திரைஅரங்கில் இருந்து வெளிவருவோர் படத்தில் சொல்லப்பட்டதையோ செய்யப்பட்டதையோ தாமும் சொல்லிக் கொண்டோ, செய்துக் கொண்டோ வரவேண்டும் என்று பாலசந்தர் சிலரை படத்தில் சேர்த்தார். உதாரணத்திற்கு மூன்று முடிச்சில் சிகரட்டை எறிந்து வாயால் பிடித்தல், அவள் ஒரு தொடர்கதையில் ஒரு கையை பொத்தி மறுகை விரல்களால் தொட்டுக் கொள்வது. அதில் வரும் படாபட் எனும் சொல், சொல்லத்தான் நினைக்கின்றேன் படத்தில் வரும் ட்டொடெங்........ அரங்கேற்றத்தில் வரும் அச்சச்சோ என்பனவும் அபூர்வராகங்களில் வரும் விடுகதையையும் சொல்லலாம்.

பாலசந்தர் படங்கள் மிக வேகமாக நகரும். காட்சியின் ஒவ்வொரு பிரேமும் சொற்ப செக்கன்களுக்கே திரையில் நிற்கும். அதனால் ஒரு காட்சியில் பல பிரேம்கள் அதிவேகமாய் நகர்ந்து விடும். பாலசந்தர் படம் எடுக்கும் போது பல கோணங்களில் ஒவ்வொரு படத்தையும் பிரேமாக்கிக் கொள்வாராம். தூரத்து காட்சியைவிட குறுகிய தூரக் காட்சிகளையே கூடுதலாக வேகமாக நகர்த்துவார். ஆனால் பாலசந்தரின் அண்மைக்கால படங்கள் இதிலிருந்து பிசகுபவையாகவே உள்ளது. இதன் காரணம் புதிய தொகுப்பாளர்கள் பெற்ற கூடுதல் அனுமதியோ தெரியாது. பாலசந்தரது முன்னைய படங்களில் எல்லா தொழில்நுட்பமும் (கமரா) உட்பட பாலசந்தர் தீர்மானித்தபடியே மற்றவர்களால் அமைக்கப்படும். இதனால் சில தொழில் நுட்பகலைஞர்கள் தமக்கு சுதந்திரம் இல்லையே என ஆதங்கப்பட்டதும் உண்டு. – இவர்கள் பாலசந்தரைப் பிரிந்த பின் எதையும் சாதிக்கவும் இல்லை.

நகைச்சுவை தமிழ் படங்களில் இன்றியமையாததாகவே இன்றும் கருதப்படுகின்றது. ஆனாலும் நகைச்சுவைக்காகவே படம் எடுத்தவர் குறைவே. இதில் பாலசந்தரும் அடக்கம். ஆனாலும் முழுநீள நகைச்சுவைக்குள்ளும் நல்ல கருத்துக்கள் சொன்னவர் பாலசந்தரே. இதற்கு நல்ல சாட்சி பாமா விஜயம். இப்படம் ஏககாலத்தில் தயாரிக்கப்பட்ட மேஜர் சந்திரகாந்தை விட பெரும் வரவேற்பை பெற்றது. பொய்க்கால் குதிரை எனும் படம் பாலசந்தரது சுய விருப்புக்காக நாடகத்திலிருந்து திரைவடிவானது. இதுவும் நல்ல ஒரு நகைச்சுவை படம் பாலசந்தர் ஏனைய படங்களிலும் நகைச்சுவையே புதிய பாணியில் தருபவர். இதற்கு நல்ல உதாரணம் புது புது அர்த்தங்களில் ஜனகராஜ் தான் இல்லை என பொய் சொல்லி விடச் சொல்வதுடன் தன் அபிநயத்தை தொலைபேசியில் அறிவிக்கவும் சொல்லி அபிநயப்பது.

முன்பெல்லாம் பாலசந்தர் கதையை ஆக்கிக் கொண்டு திரைக்கதையில், வசனத்தில் நல்ல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடயங்களைச் சொல்லிவைத்தார். ஆனால் இப்போதோ சொல்ல வேண்டிய நல்ல விடயங்களை வைத்துக் கொண்டு திரைக்கதையை, கதையை வனைந்து கொள்கின்றார். இதனால்தான் தற்போதைய பாலசந்தர் படங்கள் முன்னைய பாலசந்தர் படங்களின் சுவாரஷ்யத்திலிருப்பதில்லை.

பாலசந்தரின் கதாபாத்திரங்கள் பல தன்மையானதாயும் அமைந்திருக்கின்றது. ஆனால் ஒவ்வொன்றும் ஏனையோர் படைக்கும் கதாபாத்திர தன்மையிலிருந்தும் வேறுபடும். உதாரணத்திற்கு அனுபவி ராஜ அனுபவி எனும் படத்தில் நாகேசுக்கு இரட்டை வேடம் ஆனால் இவ் இருவேடங்களையும் மீசையைக் கொண்டோ தலைமுடியைக் கொண்டோ அல்லது பல்லைக் கொண்டோ வேறுபடுத்தாமல் ஒரு கிராமத்து பாசை பேசும் இடது கை வழக்கமானவர் மற்றவர் நகரவாசி வலது கை வழக்கமானவர் தில்லு முல்லில் ரஜனிக்கு உண்மையான இரட்டை வேடம் அல்ல. இரட்டை வேடம் ஏமாற்றும் பாத்திரம் இது ரசிகர்களுக்கும் காட்டப்படுகின்றது. இதில் மீசையே வேறுபாட்டிற்காக நாயகன் தெரிந்தெடுப்பது போன்ற கதை. இதுவும் ஒரு நல்ல நகைச்சுவை படம். காவியத்தலைவியில் மகளும் தாயுமான இரட்டை பெண் வேடங்களில் சௌகார் ஜானகி இப்படி இரட்டை வேடங்களையே வேறுபடுத்தினார்.

தண்ணீர் தண்ணீர்.. அக்கிராமத்து பேச்சு வழக்கிலே வசனம் எழுதப்பட்டிருந்தது. அதேபோல் அச்சமில்லை அச்சமில்லையில் திருநெல்வேலி பேச்சு வழக்கில் வசனம் எழுதப்பட்டிருந்தது. அனுபவி ராஜா அனுபவி, பட்டின பிரவேசம் போன்றனவோ அவ்வாறே. ஆனால் அவை இரண்டிலும் நகர்ப்புறமும் கலந்துள்ளது.

கிராமத்து படம் பாலசந்தர் தரமுடியாது என்பதை தண்ணீர் தண்ணீர். அச்சமில்லை அச்சமில்லை பட்டின பிரவேசம, தப்பு தாளங்கள் (சேரியில் எடுக்கப்பட்டது) அரங்கேற்றம் என்பன முறியடித்தன. தப்புதாளங்களில் விபச்சாரி வீட்டு கண்ணாடியில் மீண்டும் வருக என்று இருப்பதும் எல்லாம் முடிந்ததும் எல்லாரும் கண்ணாடியைப் பார்த்துக்கொள்வார்கள் தானே அதுதானே கண்ணாடியில்............ எனும் காட்சி இன்னும் என் மனதில் உள்ளது.

குறியீட்டுப் பாணியில் உருவகத்தை அறிமுகஞ் செய்தார் அதாவது நீர்க்குமிழி படத்தில் ஆடி அடங்கும் வாழ்க்கையடா' பாடலில் பின்னணி இசை வரும் ஒரு கட்டத்தில் ஒரு குடி தண்ணீர்க் குழாயருகில் நாகேஷ் தண்ணீர் குடிக்கும் நோக்கில் தன் மேலங்கியின் கைகளை மடித்து, நீளக் கால்சட்டையையும் மடித்து விட்டு தண்ணீர் குடிப்பதற்கு குழாயைத் திறந்தால் நீர் துளியாய் மட்டும் விழும். . அதாவது வாழ்க்கை என்பது ஏதோ உன்னதமாய் இருக்கப் போகிறது என்று எண்ணியபடி ஆயத்தங்கள் செய்கையில் எல்லாம் அற்பமாய் ஏமாற்றமாய் போய்விடும். படத்தின் கதைக் கருவும் இதுவே! இப்படி பல படங்களில் பல உருவகங்களை அவர் கொடுத்திருப்பினும் சிலதில் மிகச் சிறப்பாய் அமைந்திருக்கிறது. இதற்கு இன்னும் ஒரு உதாரணம் நிழல் நிஜமாகிறது படத்தில் அனுமந்து ஏதோ கற்பனையில் இருக்கையில் ஷோபா பழைய சோற்றை அவனுக்காக வைத்து விட்டுப் போவார். கற்பனையில் அனுமந்து மிதக்கையில் அச்சோற்றை நாய் சாப்பிட்டுவிடும் இதேபோல் பின்பு அனுமந்தால் நேசிக்கப்படும் ஷோபா சரத்பாபுவிடம் தன்னை அர்ப்பணிக்கச் சம்மதிக்கிறள் இன்னொரு காட்சியில் அனுமந்து ஷோபாவுக்கு வேர்க்கடலை (கச்சான்) வாங்கி வருகிறன். அதை ஷோபாவிடம் கையளித்ததும் கச்சான் கை மாறுகிறது. அதை சாப்பிட்டு முடித்ததும் கச்சான் கோதுகளை அள்ளிக் கொள்ளும்படி அனுமந்து பணிக்கப்படுகிறன். தன் தோள் துண்டில் அவற்றை அனுமந்து அள்ளிக் கொள்கிறன். இப்படத்தின் கதையும் அதேதான். சரத்பாபுவால் ஏமாற்றப்பட்ட ஷோபாவை அனுமந்துதான் வீடு கொடுத்து பாதுகாப்பும் கொடுக்கிறன். இப்படி பலவாறு குறியீட்டு உத்திகளைக் கையாண்ட பாலசந்தர் தலையாட்டும் பொய்மையைக் கொண்டும் கதையை நகர்த்திக் காண்பித்தார். நினைத்தாலே இனிக்கும் படத்தில் நோய்க்காக துரத்தும் ஒரு உருக்கண்டு கொள்ளமுடியாத உருவத்தை உருவகப்படுத்தினர்.

இதேபோல் காட்சியிலும் சில சிறு உத்திகளை புதுமையாய் செய்தார். எதிரொலியில் வாய் பேசாத பிள்ளையின் நினைவை நெகற்றிவ் இல் காட்டினர்.

**தப்புதாளங்களில் விபச்சாரி வீட்டு கண்ணாடியில் மீண்டும் வருக என்று இருப்பதும் எல்லாம் முடிந்ததும் எல்லாரும் கண்ணாடியைப் பார்த்துக்கொள்வார்கள் தானே அதுதானே கண்ணாடியில்............. எனும் காட்சி இன்னும் என் மனதில் உள்ளது.**

சொல்லத்தான் நினைக்கிறேனில் மின்சாரம் துண்டிக்கப்பட்ட ஒரு காட்சியை வெறும் பேச்சுக் குரல்களுடன் மட்டும் ஒரு நிமிடம் இருட்டாகவே காட்டினர். இப்படிப் பல கவர்ச்சியை முக்கியத்துவப்படுத்தி கதாநாயகியர் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் துணிந்து கவர்ச்சி இல்லாவிடினும் திறமைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இதனால் சுஜாதா ஷோபா, சரிதா, விஜயா போன்றோர் அறிமுகப்படுத்தப்பட்டனர். நாட்டிய நடிகை ஆலம் கூட முக்கிய பாத்திரத்தில் நடிக்கக்கூடியதாயிருந்தது. பலரும் பாடல் காட்சிக்காக பல லட்சங்களில் 'செற்' போடப்பட்ட நேரத்தில் புதுமை கருதி பாமா விஜயத்தில் நாகேஷ் சுவரில் உத்தரத்தில் நடப்பது போல் கட்டட செற் அமைத்துக் கொண்டவர் பாலசந்தரே.

விரசம் என கருதப்பட்டவற்றைக் கூட விரசம் தோன்றமல் நளினமாய் படமாக்கினர் மன்மத லீலையை முக்கியமாய் குறிப்பிடவேண்டும். மேலும் ஒரு ஆண் பெண் முன்னல் தன் ஆடைகளை களைவது போல் அபிநயிப்பதாய் அவள் ஒரு தமிழிச்சியில் ஒரு காட்சி வரும். புன்னகை மன்னனில் முத்தக்காட்சி. அவரது பல படங்களில் காண்பிக்கப்படும் படுக்கை அறைக் காட்சிகள் கூட தணிக்கைக்கும் தப்பி வந்தன. பாலசந்தர் பின்னேட்டக் காட்சிகளை பல படங்கள் பயன்படுத்தினர். மன்மத லீலையில் குதிரை பின்னல் போவது, நினைத்தாலே இனிக்கும் பட கனவுக்காட்சியில் புகை பின்னேக்க நகருவது, சொல்லத்தான் நினைக்கிறேன் படத்தில் நாயகிகளின் ஆசைகள் நிராசையான பொழுது சாம்பிராணிப்புகை, பொங்கும் பால் என்பன மீள உட்கிரகிக்கப்படும்.

இப்படி பாலசந்தர் திறமைகள் தரவுபடுத்தப்பட்டால் அவை சங்கிலியாய் நீளும், என் மனதில் சுவடுகளானவை மட்டும் இங்கே கொடுக்க முடிந்தது. இவை மட்டுமல்ல அவரது திறமைகள். இன்னும் யாராருக்கோ இதைவிட வேறு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கலாம். திரைப் படங்கள் பொழுதை மட்டும் போக்காமல் பல அரிய விடயங்களையும் கொள்ளவேண்டும். இதை பாலசந்தர் படங்கள் செய்தன. அதனால்தான் இதை எழுதவும் தூண்டியது இது போல்தான் மகேந்திரனின் படங்களும். அது இன்னொரு சமயம். இது சிம்மாசனத்துக்கு சாமரம் வீசும் முயற்சியல்ல. ஏனெனில் அதைச் செய்யின் எனக்கென்ன வரப்போகிறது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வேலிகள்



மேசன் கரண்டி, மட்டக்கோல், நீர்க்குமிழி மட்டம் தூக்குக் குண்டு போன்ற தொழிற்சாமான்களை உரப்பையால் சுற்றி பின் கரியரில் கட்டிய, நாகரத்தினத்தோடு ஒரு பட்டாளம் விரைந்து கொண்டிருந்தது. பின்னாலே அவனும் சுரேஷும் ஒரு சைக்கிளில் வந்தார்கள். இளங்காலை நேரம் இதமாகவிருந்தது. கடற்கரையோடு கிடந்த அந்த கல்லுண்டாய் ரோட் ஒவ்வொரு குறிப்பிட்ட பகுதிகளை கடக்க ஒவ்வொருச் சூழலாகவிருந்தது. நவாலி ரோட்டை கடக்கும் வரையில் கடல் நீர் காய்ந்த— மணம்.

மாட்டொழுங்கையை அண்மிக்க வயல்வெளியில் தவழ்ந்து வந்த தூய்மையான காற்று, எதிர்த்தாற்போல் இறந்த தென்னை மரங்களுடன் கூடிய குடியிருப்பிலிருந்து தவழ்ந்த சீதளத் தென்றல் கடலோடு அண்டிய ரோட்டுப்பகுதியில் (காக்கை தீவடியில்) மீன் மணம் கடக்க, நாவாந்துறை குப்பை மேடுகளின் அழகிய மணம். அதை சமப்படுத்தி தகரம், சாக்குகள் அடைப்புக்கள் செய்து, வேய்ந்த உயரம் குறைய சிறிய குடிசைகள் 4–5 குடும்பங்கள் வாழ்கிறார்கள். அந்த காலையிலேயும் ராத்திரி கடைசியாக கொட்டிய குப்பைகளை அவர்களின் பிள்ளைகள் கிளறிக் கொண்டிருந்தார்கள்.

ஆண்டவன் படைப்பில் எத்தனை மனிதர்கள்? சிலர்க்கு அளவுக்கு மிஞ்சிய பணம், பலருக்கு, சமுகவியாதிகள், ஏழைகளுக்கு, பசியோடு கூடிய சுகாதாரமற்ற வாழ்க்கை விபச்சாரம் சீரழிவுகள் எல்லாம் பசிக்கு முன்னால் தூசாகி போய் விட்ட நிலையில் இந்த மக்கள். ஆனால், மற்றவர்களிடமில்லாத சந்தோசம் அங்கே நிலவுமோ?
இப்படி நினைத்துக் கொண்டு வந்தான்.

தமிழ் 'இனவாதத்'தை தூண்ட சிங்கள ஆமி 'பெண்களை' கெடுத்ததையே சொல்லித் திரிகிற பெடியளும், அரசியல்வாதிகளும் இவர்களைப் பற்றி கவலைப்படுவார்களா? இன்னம் கூட காணி சாதிப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான தீர்வை நாம் முன்வைக்கவில்லை எங்களைப் போல பலவீனமுடையவர்கள் தானே, அரசியல் வாதிகள்! இனப்பிரச்சனைக்கான தீர்வை அவர்கள் எங்கே வைக்கப்போகிறார்கள்?

ஓட்டுமட வீதியாலே போய் நாவலர் பெருமாள் சந்தியை கடந்து சிறிய தொலைவிலிருந்த ஒழுங்கையால் உள்ளுக்கை போனார்கள்.
5–6 வது வீடு பின் விறாந்தையோடு கூடியதாக மேலதிகமாக ஒரு அறை கட்டலும், சற்றுத் தொலைவில் ஒரு தண்ணீர் தாங்கி கட்டுதலுமே வேலைகள்.

இவ்வளவு கடக எண்ணிக்கையில் மணல், சீமேந்து போட்டு சாந்து குழைப்பதும், சமயத்தில் சல்லி போட்டு கொங்கிறீற் கலவை குழைப்பதும் காய்ந்த கற்களை (கொங்கிறீற் கல்) தூக்கி கொடுப்பதுமான தொட்டாட்டு வேலைகள் அன்று கல் அறுவையிருக்கவில்லை.

வேலையில் நேரம் பறந்தது. 10.00 மணிக்கு 'டீ' வந்தது. களையாகவிருந்ததால் ருசியாகவிருந்தது. மத்தியானச் சாப்பாட்டுக்கு ஆளுக்கு 5 ருபா கிடைத்தன. கொஞ்ச தூரம் தள்ளியிருந்த கடையிலே மலிவுச் சாப்பாடுகளை (இடியப்பம் சொதி, சம்பல்) சாப்பிட்டார்கள்.

பிறகு 3.00 மணிபோல 'டீ' திரும்பவும் வந்தது. ஒரு 15 நிமிட

## கடல்புத்திரன்

ஓய்வு. 4.00 மணியிற்கு வேலையை நிறுத்தினார்கள்.
குளித்து வெளிக்கிட்ட போது அசதியாகவிருந்தது.
தினக் கூலி முறைப்படி வேலை எடுத்ததால் நாகரத்தினம் அன்றைய கணக்கை எழுதிக் கொடுத்து விட்டு வந்தார்.

அவர்களுடைய கூலி 50 ருபா. அவர்க்கு 15 ருபா போக 35 கையில் கிடைக்கும் ஒவ்வொருவரும் அவ்வாறே பெற்றார்கள். பொதுவான தொழில் முறை.

உபகரண வாடகை பல்வேறு செலவுகளுக்கு அந்த 15 எடுக்கப்பட்டது. சமயங்களில் அப்பணம் உபரியாக அமையும்.

பணக்காரன் மேலும் பணக்காரனாவான் என்பது ஐதிகம். சிறு பணக்காரன் கூடத்தான்.
சுரேஷ் ஜேபி மாமா வீட்டபோய் ரீவி பார்த்துக் கொண்டிருந்தான்.
வகுப்பில் நளினி சிறிது சோர்வுடன் வீற்றிருந்தாள். முகத்தில் களை கூடியிருந்தது நண்பர்களுக்கிடையில் சலசலப்பு நிலவியது.
"P.T. நேரத்திலே அவளோட எப்படியும் கதைத்து விடு" என்று பாபு சுரேஷிடம் சொன்னான்.

முத்தனை நம்பினாலும், அவளும் சம்பந்தப்பட்டவள். அவளுடனும் கதைக்காத வரையில் வதந்திகள் தெளிவுற மாட்டாது. ஒரு பெடியனுக்கு பெட்டையிலே ஆசை ஏற்படுவது இயற்கை. சாதியும், சமயமும் குற்றப்பத்திரிகை வாசித்தாலும் கூட அதை, தவறென்று சொல்ல முடியாது.
P.T. பாடமிருந்தது 4 வது பாட நேரத்திலே எதை? எப்படி? கேட்கிறது என்று மூளையை உடைத்துக் கொண்டிருந்ததால் சுரேஷ் விஞ்ஞான ரீச்சர் கேட்ட கேள்விக்கு பதில் சரிவர சொல்லத் தவறினான். ஏச்சு வாங்கிக் கொண்டான். வெளியில் நிறுத்தி விட்டதால் நோட்ஸ் எழுத முடியாமல் போய்விட்டது.

நாளைக்கு 'பரீட்சை' வைக்கப் போவதாக வேறு பயமுறுத்திவிட்டுப் போனார்.
P.T. பாடத்திற்கு வகுப்பு கலைந்து போயிருந்தது ஆண்கள் பிரிவு கிரிக்கெட்டில் ஈடுபட்டது. அவனும் பாபுவும் சுரேஷிலே பொறுப்பை விட்டு விட்டார்கள். பெண்கள் பிரிவு பெரிய பாலை நிழலிலே கிளித்தட்டு விளையாடிக் கொண்டிருந்தது. நளினி வேர்ப்பகுதியில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மனதில் புதிதாக என்னென்ன

*28ம் பக்கம் பார்க்க..*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இருத்தலியல் விசாரணைகள்

# ஆர்ப்பாட்டங்கள், கோஷங்கள், புரட்சிகள்

**கௌந்தி**

கூட்டு ஆர்ப்பாட்டம், கூட்டற்ற ஆர்ப்பாட்டங்கள் என நாம் ஆர்ப்பாட்டங்களைப் பிரிக்கலாம். ஆர்ப்பாட்டம் என இருக்க வேண்டியது, ஆர்ப்பாட்டங்கள் என்ற நிலைக்குத் தள்ளப் பட்டமையே உலக சமூகக் குழுக்களினது ஒருங்கிணைப் பிற்கான அடிப்படைத் தடை என்பதுஎன் அபிப்பிராயம். இனம், மதம், மொழி போன்றன உலகம் தழுவிய ஒரு மனித கலாசாரத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் வகையிலேயே அதிகார பீடங்களினால் பயன் படுத்தப்பட்டு வந்துள்ளன. இனங்களினதும், மதங்களினதும், மொழிகளினதும் வரலாறுகள் பற்றிய தேடல் ஓர் கலாசாரப் பெறுமானத்தை உள்வாங்கும் பக்குவ நிலையை மனிதர்கள் அடைவதற்கு அதிகார பீடங்கள் ஒருபோதுமே சம்மதித்ததில்லை.. யூதர்களினால், அதிகாரத்தைப் பயன்படுத்தி, விவிலிய வேதத்தின் பழைய ஏற்பாட்டைக் காட்டி, இந்த நவஉலகில், பாலஸ்தீனியர்களின் நிலத்தைப் பறித்து இஸ்ரேல் எனும் தேசத்தை உருவாக்கவும், பாலைவனத்தைச் சோலை வனமாக்கவும் மட்டுமே முடிந்தது.. யூத அரபு இனங்களுக்கிடையே இந்தத் தேசத்தின் ஜனனம் தொடர்பாக நாட்டப்பட்ட காழ்ப்புணர்ச்சியை களைந்தெரிய முடிந்ததா? யூதர்கள் வாழ்வதற்கு ஒரு தேசம் இருக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ, அதுபோல பாலஸ்தீனியர்கள் வாழ்வதற்கும் ஓர் தேசம் இருக்க வேண்டியதென்பது அவசியமே. யூத பாலஸ்தீனிய நல்லுறவை விரும்பும் இஸ்ரேலிய சிறு குழுக்களினது ஆர்ப்பாட்டங்கள் திட்டமிட்ட முறையில் அங்கே நசுக்கப்பட்டு வருகின்றன என்பவை எமக்கு மறைக்கப்பட்டே வருகின்றன. இதுபோன்ற பல உதாரணங்கள் உலகம் முழுவதும் விதைக்கப்பட்டுள்ளன. சிறு குழுக்களினது ஆர்ப்பாட்டங்களைப் பலவீனமாக்கும் அனைத்து அதிகாரமும் பெரும் குழுக்களிடம் உள்ளன. இந்தப் பெரும் குழுக்கள் உலகினைத் தனது கைக்குள் வைத்திருக்கவும், தான் விரும்பியபடி ஆட்டவும் ஆயுத உற்பத்தி துறை தொழில் நுட்ப ரீதியாகக் கண்ட வெற்றிகள் பெரிதும் உதவுகின்றன.

தேசங்கள், தங்களுக்குள்ளே சில உரிமைகளை வேண்டி நடத்தும் ஆர்ப்பாட்டங்கள் அர்த்தம் கொண்டவையா? உலகப்பந்தை தாம் விரும்பியபடி உதைத்து மகிழும் வல்லரசு நாடுகள் சிலவற்றினால் இந்த ஆர்ப்பாட்டங்கள் அனைத்தும் அவதானிக்கப்பட்டு வருகின்றன என்பது உண்மையாக இருக்குமாயின் நாம் இந்த ஆர்ப்பாட்டங்களையொட்டிப் பெருமிதம் கொள்ள முடியாது. வல்லரசுகளினது அவதானிப்பு நுட்பம் தொடர்பான புரிந்துணர்வுக்கு அந்நியமான நிலையிலேயே உள்ளன, உலகின் பல ஆர்ப்பாட்டங்கள். அத்தோடு இந்த ஆர்ப்பாட்டங்கள் எந்தக் கோரிக்கையின் அடிப்படையில் யாரால் நடத்தப்படுகின்றன என்பதெல்லாம் முக்கியமான விஷயங்களே. ஒரு இனப்புரட்சியையோ, அக்டோபர் புரட்சியையோ கடன் வாங்கி அல்லது குத்தகைக்கு எடுத்துக் கோஷங்கள் போடுவோர்களிற்குத் தம்மை அவதானித்துக் கொண்டிருக்கும் வல்லூறுகளின் விழிகள் தெரிவதில்லை. வல்லூறுகள் இரக்கம் கொண்டன வல்ல. உதாரணத்துக்கு இலங்கையை எடுப்போம். 83 ஜூலைக் கலவரத்தின் பின்னர் தமிழ்ப் பேரின வாதிகளாலும், புரட்சிக் குழுக்களாலும் மேற்கொள்ளப் பட்ட ஆர்ப்பாட்டங்கள் தமிழ்பேசும் அனைத்து மக்களினதும் இருத்தலை நிரந்தர அச்சுறுத்தலிற்குள் ளாக்கியது. ஆயுதபலமும், சமூகம் தழுவிய பொருளாதார பலவீனமும் கொண்ட இந்தியா எனும் வல்லூறு கொடுத்த பயிற்சியும், ஆயுதங்களும் இவர்கள் அனைவருக்குமே கிடைத்தன. இவைகள் இலங்கை மக்களின் வாழும் உரிமையைக் கிள்ளி எறியவே பயன்பட்டன. வடக்கிலே இந்தியா நடத்திய அராஜகம், இன்று புலிகள் அங்கே நடத்திக்கொண்டிருக்கும் அராஜகத்துக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல.

> **ஆர்ப்பாட்டங்கள் எந்தக் கோரிக்கையின் அடிப்படையில் யாரால் நடத்தப்படுகின்றன என்பதெல்லாம் முக்கியமான விஷயங்களே. ஒரு இனப்புரட்சியையோ, அக்டோபர் புரட்சியையோ கடன் வாங்கி அல்லது குத்தகைக்கு எடுத்துக் கோஷங்கள் போடுவோர்களிற்குத் தம்மை அவதானித்துக் கொண்டிருக்கும் வல்லூறுகளின் விழிகள் தெரிவதில்லை.**

இலங்கையினது கதை, மூன்றாம் உலகத்தினது பல நாடுகளினது கதைகளுடன் ஓர் ஒற்றுமையைக் கொண்டன. உலக வல்லரசு நாடுகளினது சுரண்டலினது இலக்காக மூன்றாம் உலகம் அன்றும் இருந்தது. இன்றும் இருந்து வருகின்றது. வல்லரசுகள், காலனித்துவக் கொள்கையை விட்டு விட்டன என்பதை வைத்து, அவை

**24ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காதலரின் களவொழுக்கம் தினைப்புனத்தில் தொடங்குவதாகப் பாடுவது பழைய தமிழிலக்கிய மரபு. தமிழ் மரபு மீறப்படுகிறது என்று கூக்குரலிடுவோரின் கூற்றுப்படி பார்த்தால் வானொலி நிலையத்தில் வேலை செய்யும் தட்டெழுத்து தவமணியும் திறைசேரி எழுத்துவினைஞர் ஏகாம்பரமும் பஸ் நிலையத்திலும் வீதியிலும் திரைப்பட நிலையத்திலும் சந்தித்துக் காதல் தொடங்கக் கூடாது. தினைப்புனத்தைத் தேடிச் சென்று அங்குதான் காதலைத் தொடங்கவேண்டும்! கூக்குரலிடுவோர் கொழும்பு மாநகரத்தில் எங்கே தினைப்புனம் இருக்கின்றது என்றதைச் சிருஷ்டி எழுத்தாளர்களுக்குத் தெரியப்படுத்தினால் நல்லது. ஏனெனில் இனி எழுதும் கதைகள் நாவல்களில் ஏகாம்பரத்தையும் தவமணியையும் தினைப்புனத்தில் சந்திக்கச் செய்வார்கள்.

# மாறுதல் பெறுவதே மரபு (4)

சுபைர் இளங்கீரன்

"ஆங்கிலத் தொடர்பினால், உரைநடை வரையும் பொழுது நிறுத்தக் குறியீடுகள் இட்டு எழுதும் வழக்கமும், பந்தி பிரித்து எழுதும் வழக்கமும், வசனங்களைச் சிறிதாகவும் தெளிவாகவும் எழுதும் வழக்கமும் தமிழில் வந்து சேர்ந்தன என்று கூறலாம்"

"... இலக்கிய வகைகளில் உரைநடை இலக்கியம் இன்று பெரிய நிலையை வகிக்கின்றது. நாவல், சிறுகதை, கட்டுரை இலக்கியம், ஓரங்க நாடகங்கள் ஆகிய இவையாவும் மேல்நாட்டார் தொடர்பால் தமிழுக்கு வந்தவை." (இளங்கதிர் 1961 62)

அவசியத்தைக் கருதி வாக்கிய அமைப்பில் புதுமையைப் புகுத்துவது குற்றமல்ல. எளிதில் பொருள் புதிய முறையைக் கையாளத்தான் வேண்டியிருக்கிறது. இதனை விரிவுரையாளர் வி.செல்வநாயகமே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

" வாக்கியங்களைச் சந்தி கூட்டி எழுதுவதே தமிழ் மரபு. எனினும் மாணவர்கள் இலகுவாகப் பொருளை அறிந்து கொள்ள வேண்டுமென்று எண்ணியே பிரிக்கக் கூடாத இடங்களிலும் சந்திகளைப் பிரித்து எழுதியுள்ளேன்." (தமிழ் இலக்கிய வரலாறு: முன்னுரை)

உரைநடை தோன்றிய காலத்திலும் அது செய்யுளைப் போல் அழகில்லாததாலும், அன்றாடம் பேசப்படுவதுதானே என்பதாலும் அது இலக்கியம் அல்ல என்று கூக்குரல் எழும்பத்தான் செய்தது. ஆனால் உரைநடை சிருஷ்டி எழுத்தாளரின் கைவண்ணத்தால் அழகுபெற்றதும் இக்கூக்குரல் தானாகவே நின்றது.

தமிழ் இலக்கியங்கள் தொடக்க காலத்தில் ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா முதலிய வடிவங்களில் இருந்தன. இவ்வடிவங்கள் போதாதென்று பின்னர் விருத்தப்பா, சிந்து, கண்ணி முதலிய வடிவங்கள் தோன்றின. உதாரணமாக ஒரே வகையான நடையும் ஓசையும் கொண்ட ஆசிரியப்பாவில் பல்வேறு உணர்ச்சிகளையும் அமைப்பது கடினம். எனவே, இதற்கென ஒரு புதிய வடிவம் தேவைப்பட்டது. அதனால்தான் வெவ்வேறு வகை நடையும், ஓசையும் கொண்டு மாறி மாறி வரும் விருத்தம் என்னும் புதிய வடிவம் தோன்றியது.. இதுபோலவே, பிற்காலத்து வடிவங்களும் தேவையை ஒட்டி எழுந்தன.

தேவையைப் புறக்கணித்து முன்னிருந்த பாட்டு வடிவத்துக்குள்ளேயே படைப்புகள் அமைய வேண்டும் என்று புலவர்கள் கருதியிருந்திருப்பார்களானால் பேரிலக்கியங்களே தோன்றியிருக்க முடியாது. குறிப்பிட்ட இலக்கண வரம்பும் மரபும் எக்காலத்துக்கும் பொருந்தாது என்பதை பேரிலக்கிய கர்த்தாக்களே தமது படைப்புக்கள் மூலம் நிரூபித்து விட்டனர்.

அகநானூறு, புறநானூறு முதலிய நூல்களில் உள்ள தனிப் பாடல்களின் அமைப்பு வேறு: சிலப்பதிகாரம் மணிமேகலை முதலியவற்றின் அமைப்பு வேறு, சமயப் பாடல்களின் அமைப்பு வேறு, சீவகசிந்தாமணி, பெரிய புராணம், கம்பராமாயணம், முதலியவற்றின் அமைப்பு வேறு. இவை போதாதென்று பின்னர் பலவகைப் பிரபந்தங்களும், தனிப் பாடல்களும் தோன்றின. பாரதி மேலும் புதிய அமைப்பை உண்டாக்கினார்.

வடிவத்தைப் போலவே பொருள் மரபுகளும் மீறியும் மாறியும் வந்திருக்கின்றன. அகப்பொருள் புறப்பொருள் மரபுகளுக்கு ஒட்டாத சங்கப் பாடல்கள் பல உள்ளன. முன்னர் வகுத்த விதிகளுக்கு கட்டுப்பட்டு இலக்கியம் ஆக்கமுடியாது என்பதற்குப் புறத்திணை ஏழு என இருந்ததைப் பிற்காலத்து இலக்கணப் புலவர் பன்னிரண்டு எனக் கொண்டது மற்றொரு சான்றாகும். இதுபோலவே, காலத்துக்குக் காலம் வெவ்வேறு பொருள்கள் ஆளப்பட்டு வந்திருக்கின்றன.

சங்காலத்தில் அரசனும் காதல், வீரம் ஆகிய உணர்ச்சிகளும், காப்பிய காலத்தில் அறங்களும் தத்துவங்களும், புராண காலத்தில் தெய்வமும் பக்தியும், தற்காலத்தில் மக்களும் அவர்களின் எல்லா உணர்வுகளும், வாழ்க்கையின் சகல போக்குகளும் இலக்கியத்திற்குப் பொருள்களாகக் கொள்ளப்படுகின்றன. சுருங்கச் சொன்னால் இன்றைய இலக்கியத்தில் பொருளாகக் கொள்ளத் தகாதது ஒன்றுமேயில்லை.

மரபுகள் காலத்துக்குக் கட்டுப்பட்டவை, ஒரு காலத்தில் கொள்ளப்பட்ட மரபுகள் பிறிதொரு காலத்துக்கு ஒத்துவரா, சிலப்பதிகாரத்தில் காவியத் தலைவி கண்ணகி நிறைவுள்ளவளாகவும் உயர்ந்தவளாகவும் இருக்கின்றனர். இம்மரபை ஒட்டித்தான் காவியங்கள் இயற்றப்பட வேண்டும் என்று கூறுவது அறிவுடைமையாகுமா? மணிமேகலையின் காவியத்தலைவி திருமணமாகாமல் துறவு பூண்டாள். அம்மரபை ஒட்டிக் காவியத்தலைவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துறவு பூணவேண்டும் என்று மரபிலக்கணம் வகுக்க முடியுமா?

காதலரின் களவொழுக்கம் தினைப்புனத்தில் தொடங்குவதாகப் பாடுவது பழைய தமிழிலக்கிய மரபு. தமிழ் மரபு மீறப்படுகிறது என்று கூக்குரலிடுவோரின் கூற்றுப்படி பார்த்தால் வானொலி நிலையத்தில் வேலை செய்யும் தட்டெழுத்து தவமணியும் திறைசேரி எழுத்துவினைஞர் ஏகாம்பரமும் பஸ் நிலையத்திலும் வீதியிலும் திரைப்பட நிலையத்திலும் சந்தித்துக் காதல் தொடங்கக் கூடாது. தினைப்புனத்தைத் தேடிச் சென்று அங்குதான் காதலைத் தொடங்கவேண்டும்! கூக்குரலிடுவோர் கொழும்பு மாநகரத்தில் எங்கே தினைப்புனம் இருக்கின்றது என்றதைச் சிருஷ்டி எழுத்தாளர்களுக்குத் தெரியப்படுத்தினால் நல்லது. ஏனெனில் இனி எழுதும் கதைகள் நாவல்களில் ஏகாம்பரத்தையும் தவமணியையும் தினைப்புனத்தில் சந்திக்கச் செய்வார்கள்.

*மரபு" பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தால் தமிழிலக்கியம் வளராது. இதனால்தான் பண்டித வர்க்கம் தமிழிலக்கியத்திற்குப் புதிய புதிய படைப்புக்களை அளிக்கவில்லை. அத்தகு முயற்சியில் கவனம் செலுத்தவுமில்லை. அது குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு கிணற்றுத் தவளை மனோபாவத்துடன் இருப்பதால்தான் இவர்களிடத்திலிருந்து ஒரு கம்பன், ஓர் இளங்கோ, ஒரு திருத்தக்கதேவர், ஒரு பாரதி பிறக்கவில்லை. இவர்களின் பரம்பரையில் பெரும்பான்மையினர் யமகம் திரிபு முதலிய செய்யுட்களும் திரிபந்தாதிகளும் யமக அந்தாதிகளும் சிலேடை வெண்பாக்களும் இயற்றிக் கொண்டிருந்தவர்கள். இவர்களுக்கு எவ்வாறு இலக்கிய தரிசனம் கிடைக்கும்? அவர்களின் வாரிசுகளான கூக்குரல்காரர்களுக்கும் "இலக்கிய தரிசனம்" கிடைக்கப் போவதில்லை!*

"மரபு" பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தால் தமிழிலக்கியம் வளராது. இதனால்தான் பண்டித வர்க்கம் தமிழிலக்கியத்திற்குப் புதிய புதிய படைப்புக்களை அளிக்கவில்லை. அத்தகு முயற்சியில் கவனம் செலுத்தவுமில்லை. அது குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு கிணற்றுத் தவளை மனோபாவத்துடன் இருப்பதால்தான் இவர்களிடத்திலிருந்து ஒரு கம்பன், ஓர் இளங்கோ, ஒரு திருத்தக்கதேவர், ஒரு பாரதி பிறக்கவில்லை. இவர்களின் பரம்பரையில் பெரும்பான்மையினர் யமகம் திரிபு முதலிய செய்யுட்களும் திரிபந்தாதிகளும் யமக அந்தாதிகளும் சிலேடை வெண்பாக்களும் இயற்றிக் கொண்டிருந்தவர்கள். இவர்களுக்கு எவ்வாறு இலக்கிய தரிசனம் கிடைக்கும்? அவர்களின் வாரிசுகளான கூக்குரல்காரர்களுக்கும் "இலக்கிய தரிசனம்" கிடைக்கப் போவதில்லை!

இத்தகைய வைதீகப் பண்டிதர்கள் ஆங்கில நாட்டிலும் இருக்கத்தான் செய்தனர். பென் ஜான்சன் போன்ற ஆங்கில இலக்கணப் புலவர்கள் ஷேக்ஸ்பியரின் இலக்கியங்கள் ஆங்கில இலக்கண மரபுக்கு மாறானவை என்று கண்டனம் பொழியத்தான் செய்தனர். ஆனால் தோற்றவர் ஷேக்ஸ்பியரல்ல, அவர்கள்தான். ஷேக்ஸ்பியர் இன்றும் உலகு முழுதும் வாழ்கின்றார் ஆனால் கண்டனம் பொழிந்த ஆங்கில வைதீகப் பண்டிதர்கள் தமது பெயரை மட்டும்தான் ஏட்டில் விட்டுச் சென்றனர். இதேபோல இன்றைய சிருஷ்டி எழுத்தாளர்கள் என்றும் வாழ்வார்கள். கூக்குரலிடுவோருக்குத் தீர்ப்பு எழுதுவது எழுத்தாளர்களல்ல, காலம் வரலாறு.

மாற்றங்களும், புதியனவும் தொடர்ந்து நிகழ்வன. இவற்றை எந்த இலக்கணங்களாலும், மரபுகளாலும் தடுத்து நிறுத்த முடியாது. தடுத்து நிறுத்த முயன்றவை முறியடிக்கப்பட்டன. முயன்றவர்கள் புறமுதுகிட்டார்கள். மனித வரலாறும் இலக்கிய வரலாறும் இதற்குச் சான்றாக உள்ளன.

காலத்திற்கு ஏற்பத் தன்னை மாற்றியும் தேவைக்கு ஏற்பத் தன்னைத் திருத்தியும், புதுக்கியும் வருவதே தமிழ் மரபு. இன்றைய சிருஷ்டி எழுத்தாளர்களும் இத்தமிழ் மரபை ஒட்டித்தான் இலக்கியம் வளர்த்து வருகின்றனர். எனவே "இன்றைய சிருஷ்டி எழுத்தாளர்கள் தமிழ் மரபுக்கு மாறாக எழுதுகின்றனர்" என்ற கூக்குரல் உண்மையல்ல.

"ராஜமய்யர், பாரதி, புதுமைப்பித்தன்" ஆகிய மூவரும் புதிய தமிழ் இலக்கியத்தின் மூன்று தூண்கள் இந்த மும்மணிகள் படைத்த அஸ்திவாரத்தை ஆதாரமாகக் கொள்ளாத இலக்கியத்தில் இவர்கள் புகுத்தியுள்ள கருத்துக்களைச் சிருஷ்டித் திறனுடன் மலரச் செய்யாத, இவர்கள் உருவாக்கி அமைத்த மொழி, நடை சிருஷ்டித் திறன் ஆகியவை பற்றிய கொள்கைகளை அடிப்படையாகக் கொள்ளாத எந்த ஒரு படைப்பும் விரைவிலோ காலந் தாழ்ந்தோ அழிந்தொழிந்து விடுமென்பதை நான் துணிந்து சொல்ல விரும்புகிறேன். அத்தகைய படைப்புக்கும் புதுமைத் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கிலே நிரந்தரமான ஓர் இடம் கிடையவே கிடையாது. இந்த மும்மணிகள்தான் புதிய தமிழ் இலக்கிய வளர்ச்சியின் ஜீவனுள்ள பசுமையான கொழுகொம்பு. இவர்களைப் பற்றிப் படர்ந்தே தமிழ்க்கொடி வளரும்!"

கமில் ஸ்வலபில், செக்கோஸ்லேவேகியா நாட்டவர். பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். தமிழைக் கரைத்துக் குடித்த பண்டிதர் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் தேர்ந்த புலமையும் மிகுந்த ஈடுபாடும் கொண்டவர். இப்போது தமிழ் இலக்கண வரலாறும், இலக்கிய வரலாறும் எழுதுவதில் ஈடுபட்டுள்ளார். அவரின் கூற்றுப்படி ராஜமய்யர், பாரதி, புதுமைப்பித்தன் ஆகிய மூவரும் புதுமைத் தமிழின் மும்மணிகளாவர் இவர்களின் வாரிசுகள்தான் இவர்கள் காட்டிச் சென்ற வழியில் இலக்கியம் படைப்பவர்கள்தான், இன்றைய எழுத்தாளர்கள். எனவே, கமில் ஸ்வலபிலின் கூற்றுப்படி இவர்களைப் பற்றிப் படர்ந்து தமிழ்க்கொடி வளருமேயன்றிக் கூக்குரலிடுவோரைப் பற்றிப் படர்ந்தல்ல.

தினகரன் 1962 தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மக்களின் அபிலாசை

ராவய மார்ச் 27,1994 ஆசிரியர் தலையங்கம்

நாட்டில் தெட்டத் தெளிவான ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே இந்நாட்டில் வாழும் பரந்துபட்ட மக்களின் அபிலாசை என்பதை தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மூலம் காணக் கூடியதாயுள்ளது.

ஆட்சித் தலைவர்கள் அனேக விடயங்களை தெற்கில் உள்ள மக்களுக்குக் கூறினர். இக் கற்ப காலம் இருக்கும் வரை ஈழம் வழங்கப்பட மாட்டாது என ஜனாதிபதி மீண்டும் மீண்டும் கூறியது மட்டுமன்றி அவ்வாறாக குறிப்பிடப்பட்ட போஸ்டர்கள் இலட்சக் கணக்கில் தென் இலங்கையில் ஒட்டப்பட்டன ஜனாதிபதி விஜேதுங்க மட்டுமன்றி பிரதமர் ரனில் விக்கிரமசிங்க, செயலாளர் நாயகம் சிறிசேன கூரே போன்ற அமைச்சர்களும், காமினி திசாநாயக, ஹெரனி டி மெல், ஓசி அபேகுணசேகர ராஜித சேனரத்ன, சானக அமரதுங்க போன்ற அமைச்சர் பதவிகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களும் முடிவில்லாத கதைகளை மக்களுக்கு கூறினர். ஆனால் தென் மாகாண மக்கள் இவை அனைத்தையும் துட்டுக்குக் கூட கணக்கெடுக்காமல் இன்றைய ஆட்சியாளரின் இறுதியின் ஆரம்பத்தைக் காண்பதற்காக தமது வாக்குகளைப் பாவித்தது மட்டுமன்றி தேர்தல் நடவடிக்கைகளின் உண்மைத் தன்மையைப் பாதுகாப்பதற்காக சமாதான ரீதியாக முன்வந்ததும் தெளிவான ஒன்றாகும்

அரசாங்கம் இத்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பாவித்த அரசு அதிகாரத்தின் பரிமாணம் வேறு எத்தேர்தலுடனும் ஒப்பிட முடியாத அளவுக்கு விசாலமானதாகும். ஆயினும் இவை எதனையும் கண்டு தென்பகுதி மக்கள் ஏமாறவில்லை. அதற்குப் பதிலாக அத்தருணத்தில் திடீர் திடீரென வினியோகிக்கப்பட்ட அனைத்தினதும் போலித் தன்மையை விளங்கிக்கொண்டு அரசாங்கத்தை மண் கவ்வச் செய்தனர். இத் தேர்தல் முடிவுகள் நாட்டின் மோசமான சீரழிவைப்பற்றி மக்கள் எவ்வளவு தூரம் விளங்கியுள்ளார்கள் என்பதையும் அவ்வாறே இந்நிலையிலிருந்து நாட்டைக் கரையேற்ற வேண்டும் என்னும் மக்களின் தாகத்தின் அளவையும் எடுத்துக் காட்டுகிறது.

மக்களால் தமக்களிக்கப்பட்ட இம் மாபெரும் வெற்றியைக் கண்டு எதிர்க்கட்சியினரின் தலை வீங்கக் கூடாது. நாட்டுக்கு தேவைப்படுவது வெறும் ஆட்சி மாற்றம் அல்ல என்பதை இவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் இந்நாடு இழுத்துத் தள்ளப்பட்டுள்ள அதன் பாதாளத்திலிருந்து கரையேற்றுவது எவ்வாறு என்பதை மக்களுக்கு விபரமாக கூறவேண்டும். அரசியல் அதிகாரத்தை ஆயுதமாக பாவித்து மக்களின் மேல் ஏறி சவாரி செய்யும் ஏமாற்று அரசியல் தலைவர்கள் குறித்து மக்கள் மத்தியிலே நிலவும் வெறுப்பை விளங்கிக்கொண்டு தாம் அவ் அரசியல் கலாச்சாரத்திலிருந்தும் வேறுபட்ட அரசியல் கலாச்சாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் ஊழியர்கள் என்பதை அவர்கள் இப்பொழுதாவது நாட்டுக்குக் காட்டவேண்டும்.

நாடு அர்த்தமுள்ள புதிய பாதையில் பயணம் செல்வதைக் காண்பதே பரந்துபட்ட மக்களின் அபிலாசையாகும். இவ் மக்கள் அபிலாசையை மேலும் முன்னெடுத்துச் சென்று அர்த்தமுள்ள சீர்திருத்தங்களை நாட்டில் மேற்கொள்ளும் மக்கள் நேய ஆட்சியை உருவாக்குவதில் நாடு வெற்றி கண்டால், நாட்டின் எதிர்காலம் சீராக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

*தமிழாக்கம் செ. லோகநாதன்.*

# விஜேதுங்கவின் இனவாதத்திற்கு தெற்கிலிருந்து கன்னத்தில் அறை

யுக்திய 27.3. 1994 ஆசிரியர் தலையங்கம்

அரசியல் காடைத்தனம் மூலமாக தென்மாகாண சபையில் பதவியிலிருந்த எதிர்க்கட்சியினரின் ஆட்சியைக் கவிழ்த்த ஜனாதிபதி விஜேதுங்கவிற்கு தென்மாகாண மக்கள் காது வெடிக்கும் அளவிற்கு ஓங்கி [illegible]. பிரான்சிஸ்கு [illegible]படும் அரசியல் நீசனை அநுரா பண்டாரநாயக போன்ற அரசியல் விபச்சாரிகள் மூலமாக பிடித்து ஆடிய அநாகரீகமான கூத்துக்கூட தோற்கும் அளவிற்கு ஜனாதிபதி விஜேதுங்க தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது மிகவும் குறுகிய இனவாதத்தைக் கக்கினார். முழு இலங்கைக்கும், சகல இனத்தவர்களுக்கும் ஜனாதிபதி எனக் கூறிக்கொண்டு ஆனால் தென்மாகாண மக்களை தம்மை நோக்கி இழுப்பதற்கான நல்ல துரும்பு இனவாதமே என எண்ணி தான் செல்லும் இடங்களிலெல்லாம் தமிழ் விரோத குறுகிய இனவாதத்தை விதைத்ததோடு லேக் ஹவுஸ் பத்திரிகைகளையும் அதற்காக ஈடுபடுத்தி அவ் இனவாதத்தின் மூலமாக முழுநாட்டையுமே நாற வைத்தார். திடீரென ஜனாதிபதி ஆகிய நாள் தொடக்கம் சிங்கள மக்கள் மத்தியிலே இனத்துவம் பற்றிய உணர்வைத் தூண்டுவதன் மூலமாக மட்டுமே தன்னை ஜனரஞ்சகப்படுத்த முயன்றார். இன்றைய யுத்தத்திற்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என படைத் தளபதிகள் கூட கூறும் போது யுத்தத்தை யுத்தத்தாலேயே அடக்கவேண்டும் என போலிக் கூக்குரல் இட்டதும் இதற்காகவேயாகும்.

யுத்தத்தை அரசியல் பொருளாதார வியாபாரமாக மாற்றியுள்ள பல்வேறுபட்ட கள்ளவியாபாரிகளுடன் சேர்ந்து ஜனாதிபதி விஜேதுங்க நாட்டைக் எடுத்துச் சென்றது எரிமலையை நோக்கியேயாகும். இனங்களுக்கு இடையேயான உறவு என்னும் துறையில் குணப்பட்டு வந்த காயத்தைக் கூட கிண்டியதன் மூலம் ஜனாதிபதி விஜேதுங்க எதிர்பார்த்தது பெரும் சிங்கள இனவாத அலைகளைக் கிளப்பி அதன் மீது ஏறி நின்றுஎதிர்கட்சியை தோற்கடிப்பதையேயாகும்.

தேர்தலின் இறுதி நாட்களில் முற்றாகவே ஐக்கிய தேசியக்கட்சியின் பிரச்சாரப் பத்திரிகைகளாக மாறிய லேக் ஹவுஸ் பத்திரிகைகள் ஜனாதிபதியின் இனவாதப் பேச்சுக்களை பரப்பியது மட்டுமன்றி எதிர்க்கட்சியின் தேர்தல் பிரச்சாரப் பணிக்கு தலைமை தாங்கிய சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் சிங்கள இனத்திற்கு எதிரானவர் என்றும் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைப் பரப்பின. நாட்டின் ஒருமைப்பாட்டை உயிர்போல் பாதுகாப்பது தான் மட்டுமே எனக் கூறிய விஜேதுங்க பொது ஜன முன்னணிக்கு வாக்களிப்பதன் மூலம் நாடு இரண்டாக துண்டுபடும் எனக்கூறி மக்களைப் பீதிக்குள்ளாக்கும் கேவலமான முயற்சிகளில் கூட ஈடுபட்டார். சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் வார இறுதிப் பத்திரிகை ஒன்றுக்கு விடுத்த அறிக்கையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிழையாக மேற்கொள்ள காட்டிய அரசாங்க தொடர்பு சாதனங்கள், பொது ஜன முன்னணி ஈழம் வாதிகளுக்கு ஆதரவு வழங்குகிறது என்னும் கருத்தையும் பரப்பின.

பொதுவாகக் கூறுவதாயின் அரசாங்கத்துக்குள்ளேயே நிலவுகின்ற பதவிப் போட்டியில் வெற்றி பெறுவதற்காக விஜேதுங்க ஜனாதிபதி பாவித்ததும் இனவாதமேயாகும். இதன் மூலமாக ரணில் விக்கிரமசிங்கவையும் மேவி தான் பிரபல்யமடையலாம் என அவர் எண்ணினார்.

பொலிசாரையும் ஈடுபடுத்தி தென் மாகாணம் பூராவும் தனது தமிழ் விரோத யுத்தவாத பிரதி ரூபத்தை கட்டி எழுப்புவதற்கான புகைப்படத்துடன் கூடிய போஸ்டர்கள் ஒட்டியதும் இந் நோக்கத்துடனேயாகும். நாட்டை பாதுகாக்கும் வீரனை தன்னை வெளிக்காட்ட விஜேதுங்க ஜனாதிபதி மேற்கொண்ட வஞ்சகமாக முயற்சிக்கு தென்பகுதி மக்கள் கசப்பான தோல்வியையே உரிமையாக்கியுள்ளனர்.

இனவாதம் இனிமேலும் இந்நாட்டு மக்களை ஏமாற்றக்கூடிய வணிகப் பண்டமல்ல என்பது தென் மாகாண தேர்தல் மூலமாக திட்டவட்டமாக காண்பிக்கப்பட்டுள்ளது. இது ஜனாதிபதி விஜேதுங்கவுக்கு மட்டுமல்ல சகல அரசியல் கட்சிகளும் மனதில் கொள்ள வேண்டிய பாடமாகும். யுத்தத்தையும் இனவாதத்தையும் தோற்கடித்து ஜனநாயகம், சமாதானம் சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படும் அரசியலை நோக்கி பிரவேசிப்பதற்கு, இந்நாட்டின் சகல புத்தி ஜீவிகளுக்கும் அரசியல் இயக்கங்களுக்கும் இத்தேர்தல் முடிவு நல்லதொரு பாடமாக அமையட்டும்! என மகிழ்ச்சிகரமான இவ்வேளையில் நாம் வேண்டுகிறோம்.

**(தமிழாக்கம் செ. லோகநாதன்)**

## ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள்

# அப்பா



நான் அண்மையிலே அப்பாவாகிய விஷயம் உங்களுக்குத் தெரியுமோ? தெரியாது என்று நினைக்கின்றேன். கதையை வாசியுங்கள். எல்லாம் புரியும். கடந்த வாரம் சுரங்க ரயில் நிலையத்துக்குள் ஓர் டிரெக்ஸனைத் தேடி நடந்து கொண்டிருந்தேன். எனக்கு முன்னே ஒரு கறுப்பி... அவளுக்கு முன்னே ஒரு வண்டில்... அதற்குள் ஓர் குழந்தை... அவளுக்குப் பின்னே இன்னொரு சிறுவன்... ரயில் எடுக்க படியால் இறங்க வேண்டிய கட்டம் வந்தது. வண்டிலோடு குழந்தையையும் தூக்கிக் கொண்டு இறங்குவது கறுப்பிக்குக் கஷ்டம் என்றபடியால் உதவிக்கு நான் முன்னே போனேன். அவள் வண்டிலையும் பிள்ளையும் என்னிடம் தந்தாள். கறுப்பியின் விழிகளில் (MERCY) நன்றி கசிந்தது. வண்டிலோடும் பிள்ளையோடும் கீழே இறங்கிய பின்னர் அண்ணாந்து பார்த்தால் கறுப்பியைக் காணவில்லை. சில நிமிடங்கள் கழிந்தும் கூட அவளைக் காணவேயில்லை. என்னிடம் பிள்ளையையும் தந்துவிட்டு கறுப்பி தப்பி ஓடிவிட்டாளோ என்று வேறு நினைக்கத் தோன்றியது. இந்தக் கட்டத்தில் எனக்கு தெரிந்த தமிழ் வாலிபர்களில் சிலர் என்னையும் குழந்தையையும் விசித்திரமாகப் பார்த்து விட்டு, சற்றே தூரப்போய் "டேய், குட்டிக்கதையன் எழுதிற ஜெயந்தீஸன் இவன்தான்டா— கறுப்பியொருத்தியை வைச்சிருக்கிறன் போல' என்று விட்டு நைசாக மாறினர். நினைக்க நினைக்க ஆத்திரம் வந்த வேளையில் குழந்தை அழுதது... "ச் ச் ச் க" "ச் ச் க" என்று அழுகையை அடக்கப் பார்த்தேன். ஹூம். அழுகை நிற்கவேயில்லை. வண்டிலைத் தள்ளினேன். அழுகை நின்றது... அழுகை நின்று விட்டதுதானே என்பதால் வண்டிலை நிறுத்தினேன். மீண்டும் குழந்தை அழுதது. மீண்டும் வண்டிலைத் தள்ளினேன். அழுகை நின்றது... குழந்தை அழாதிருக்க வண்டிலைத் தள்ளித் தள்ளி எனது டிரெக்ஸன் வரை வந்து விட்டேன்... சில பிரெஞ்சுக் கிழவிகள் குழந்தையைப் பார்த்துவிட்டு என்னிடம் "வடிவான குழந்தை" என்று சொல்லிச் சென்றனர். நான் குழந்தையைப் பார்த்தேன். அது தனது பொக்கை வாய் திறந்து சிரித்தது. திடுதிடுப்பென கறுப்பியின் நினைவு வந்ததால் உடல் நடுங்கியது. என்னைத் தேடிப் பார்த்து விட்டு நான் குழந்தையைக் கடத்திச் சென்று விட்டேன் என பொலீஸில் போய் முறையீடு செய்தால்.... மாறி வந்த டிரெக்ஸனிலிருந்து குழந்தையைப் பொறுப்பேற்ற பழைய இடத்துக்கு ஜெட் வேகத்தில் போய்ச் சேர்ந்தேன். ஹூம். கறுப்பியைக் காணவேயில்லை. கறுப்பிகள் இசைவெறி பிடித்தவர்கள். உடனடியாக "ஷிக் மெஷின்" எனும் இசைக்குழுவின் பாடலொன்றை எனது குயிலினும் இனிய குரலால் பாட வெளிக்கிட்டேன்.... அதிசயம் ஆனல் உண்மை... கறுப்பியின் தலை தெரிந்தது... அவளும் அதே பாடலைப் பாடிக் கொண்டு என்னருகே வந்து... தனது விழிகளைக் காதுவரை இழுத்து... "காத்திருக்க வைத்ததற்கு மன்னிக்கவும்.... எனது இரண்டாவது மகன் சுவிங்கம் விற்கும் கடையொன்றைக் கண்டதும் அதற்குள் போய் விட்டான்.. அதனால் அவனைக் கண்டுபிடிப்பதால் இந்தத் தாமதம் ... ...மன்னியுங்கள்... உங்களது குட்டிக்கதைகளின் பரம ரசிகை நான்" என்றபடி வண்டிலோடு, பிள்ளையையும் பெற்றுக்கொண்டு மாறிவிட்டாள்.....

பிரெஞ்சு பேசிய கறுப்பி, எனது குட்டிக்கதைகளினது ரசிகையாக எப்படி மாறினாள் என்பது எனக்கு உண்மையிலேயே விளங்கவில்லை. உங்களுக்கு விளங்குகின்றதா?

(இது ஓர் உண்மையான சம்பவம், சற்றே கற்பனை கலந்து எழுதப்பட்டது.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூக்கம்

க. கலாமோகன்



தூங்கும் குழந்தையினது முகத்தை ரஸித்து விட்டு நள்ளிரவில் வீதியிலே இறங்குகின்றேன். ஓர் முற்றுப் பெறாத நிஸப்தம். இந்த நேரத்திலே மனிதர்கள் தங்களது வீடுகளிலே தூங்குகின்றனரா? ஒருவேளை இவர்கள் தூக்கத்திலிருப்பின் இவர்களுக்கு தித்திப்பான கனவுகள் சித்திக்கின்றனவா? மனிதர்களுக்குள் மனிதனா நான். அதுவும் வீதியில். உண்மையிலேயே எங்கே போவதென எனக்குத் தெரியவில்லை. போகும் இலக்கை நிச்சயப்படுத்திக் கொண்டு வீதியில் இறங்கியவனுமல்லன். கால்கள் எங்கு போகின்றனவோ அவை அங்கேயே போகட்டும். போகுமிடம் சொர்க்கமாகவோ நரகமாகவோ இருந்தால் கூட எனக்குப் பிரச்சனையில்லை. தெரிவு எனக்கு மறுக்கப்பட்டுள்ளது.

கால்கள், அந்த மாடிக் கட்டிடத்தின் படிகள் மீது மிகவும் அமைதியாக ஏறுகின்றன. 5ஆம் மாடியில் உள்ள கதவின் மீது செல்வி கொரின் என எழுதப்பட்டுள்ளது. அந்தக் கதவில்தான் நான் தட்டுகின்றேன். எல்லாக் கதவுகளிலும் கொரின் என எழுதப்பட்டிருப்பின் நான் அனைத்தையும் தட்டியிருப்பேனா? தட்டப்பட்டதும் கதவு உடனடியாகத் திறபட்டு விடவில்லை. அந்த நேரத்திலே தட்டியவுடன் திறபட்டு விடும் என நினைத்தல் கூட பொருத்தமான நினைத்தலாகா— நாகரிகமானதுமல்ல. அது பொல்லாத நேரம். தட்டும் சத்தம் கேட்போர் முதலில் பயப்படுவர்— கள்வனோ என்றும் சந்தேகிப்பர். "அது நான் தான்" எனச் சொன்னாலும் குரலைச் சந்தேகித்து கதவின் கண்ணாடித் துவாரத்தால் சோதனை செய்வர். தூக்க மயக்கத்தில் பார்க்கப்படுவர் சரியானவராக இருந்தாலும் பிழையானவராகப் படக்கூடிய அபாயமும் உண்டு.

கதவைத் திறந்தாள் கொரின்.

"உனது தூக்கத்தைக் கெடுத்து விட்டேனா? மன்னி!" என்றபடி உள்ளே நுழைகின்றேன். எதுவும் பேசாமல், மூடித் திறந்த விழிகளால் அவள் என்னையே பார்த்தபடி.

"என்ன நடந்தது?" எனக் கேட்டபடி கொரின் நிலத்திலே அமர்கின்றாள்.

என்ன நடந்தது.? எனக்கும் அது தெரியவில்லை. குழந்தையின் முகத்தை ரஸித்ததும், வீதியில் இறங்கியதும், கொரின் வீட்டுக் கதவைத் தட்டியதும், இப்போது அவளது வீட்டுக்குள் இருக்கின்றேன் என்பதுவும் மட்டுமே எனக்குத் தெரியும்.

"கொரின், போய்த் தூங்கு— சிறிது நேரம் இருந்துவிட்டு நான் வெளியேறி விடுகின்றேன்"

"எனக்குத் தூக்கம் வரவில்லை"

"உனது தூக்கத்தை நான் கெடுத்துவிட்டேன்."

"எனது தூக்கத்தை நீ கெடுக்கவில்லை— உனது தூக்கத்தை நீ கெடுத்துவிட்டாய்"

"இல்லை, கொரின். நான் இரவின் புத்திரன் என்பது உனக்குத் தெரியாதா?"

"நீ உனது தூக்கத்தை மட்டுமல்ல, உனது மனைவியின் தூக்கத்தையும் கெடுத்து விட்டாய்..."

"கரோலின் பற்றிய பேச்சை மட்டும் இந்த இரவில் எடுக்காதே. — நான் பேசுவதற்கு வரவில்லை... போய்த் தூங்கு"

"பின் ஏன் இங்கு வந்தாய்—வா தூங்குவோம்"

"தூங்குவதற்கும் நான் வரவில்லை"

"நான் தந்த சுகங்கள் உனது தூக்கத்தைக் கெடுக்கின்றனவா?"

"சுகம், சுகவீனம் இவைகளைப் பற்றி அலட்டிக் கொண்டிருப்பதை ஒரு பக்கத்திலே வைத்துவிட்டுப் போய்த் தூங்கு—"

"இரண்டு வருடங்களின் முன்னர் நீ எனக்குப் பரிசாகத் தந்த பரத நாட்டியக் கசெட்டை நேற்று மீளவும் போட்டுப் பார்த்தேன்— ரஸித்தேன்— பார்ப்போமோ?"

"கொரின், உனக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும். பரத நாட்டியம் பார்க்க நான் இங்கு வரவில்லை— எனது தூக்கத்தைக் கெடுக்காதே!"

"என்ன நீ தூங்குகின்றாயா?"

"நான் தூங்கிக் கொண்டிருப்பது உனக்குத் தெரியவில்லையா?"

"முன்றே மூன்று நிமிடங்கள் என்னைத் தனிமையில் இருக்கவிடு— உள்ளே போ!"

"சரி" என்றபடி கொரின் உள்ளே போக நான் வெளியே போகின்றேன். கொரின் என்ன நினைப்பாள், எனது நடத்தை நாகரிகமானதா என்ற எந்த குழப்பமும் இல்லாமல், வீதிக்கு நான் வந்துவிட்டேன். இலைதளிர்க் காலத்து மென்குளிர் காற்று வந்து என்னை முத்தமிட்டது— படு குளிரிலும் கொடு கோடையிலும் கொரின் எனக்கு முத்தங்கள் தந்தபோது அவைகளை நான் "இலை தளிர் காலத்து மென்குளிர் காற்று" என்றல்லவா வருணித்திருந்தேன்

ஒரு சிகரட்டைத் தூக்கி உதட்டில் வைத்து விட்டு பொக்கெட்டுக்குள் நெருப்பைத் தேடினேன். எனக்கு முன்னே ஒரு கரம் நெருப்பை நீட்டியது. அது கொரின்.

"இந்த இரவிலே நீ வந்து எனது வீட்டுக் கதவைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தட்டியது என்னை ஏமாற்றுவதற்கா?"

"நான் உன்னை ஏமாற்றவில்லை கொரின். எவ்வளவு உனக்கு அறிவிக்காமல் உனது வீட்டுக்குள் நுழைந்தேனோ, அவ்வாறே உனக்கு அறிவிக்காமல் உனது வீட்டை விட்டு வெளியேறினேன். இது ஏமாற்றியதாகாது"

"மொழிச் சித்தை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, என்னுடன் இப்போது வா!"

"என்னது மொழிச் சித்தல்ல.." என்றபடி, நான் அவளைப் பின்தொடர்கின்றேன்.

"உனது மனம் குழம்பியுள்ளதா?" கொரின் கேட்கின்றாள்.

"மனம், இது ஓர் குழம்பும் குளம். ஆனால் இன்று எனது மனம் குழம்பவில்லை."

"நேற்று இது குழம்பியதா?"

"குழம்பியதா, குழம்பவில்லையா என்பதை இன்றைய தினம் உதித்தபோது மறந்துவிட்டேன்.

"நேற்றைய தூக்கத்திலே நீ கனவு கண்டாயா?"

"ஆம்!"

"உனது கனவில் நான் வந்தேனா?"

"முதலில் நீ வந்தாய், பின்னர் கரோலின் வந்தாள்"

"நீ யாரை முத்தமிட்டாய்?"

"எனது பதில் நீ என இருக்கவேண்டும் என்பதல்லவா உன் கனவு?"

"கனவு கண்டது நான் அல்ல. சொல்"

"நான் இருவரையுமே முத்தமிட்டேன்."

கொரின் சோர்ந்து போய் விட்டாள்.

"நான் கரோலினை முத்தமிட்டது தப்பா?"

"அவள் என் சிநேகிதி.."

"அவள் என் மனைவி"

"அப்படியாயின் நான்?"

"நீ என் காதலி"

கொரின் வெறி கொண்டு, நடு வீதியில், என்னைக் கட்டியணைத்து முகம் முழுவதும் முத்தமிடுகின்றாள். நான் அவளுக்கு ஒரு முத்தம் கூடக் கொடுக்கவில்லை. அதேவேளையில் அவள் தந்த முத்தங்களை நிராகரிக்கவுமில்லை..

முத்தங்களின் பின்னர் களைப்படைந்த கொரின், புத்துயிர் பெற, தனது உதட்டை எனது முகத்துக்கு நேரே நீட்டி "முத்தமிடு" என்கின்றாள்.

"முத்தம் தர எனக்கு நேரமில்லை. நான் உடனடியாக வீடு திரும்பவேண்டும்" என்கின்றேன்.

கன்னத்தில் ஓர் அடி விழுகின்றது.

"கொரின் இந்த அடி கூட ஓர் முத்தமே!" என்றபடி அவளைப் பார்த்துச் சிரிக்கின்றேன்.

"வா என் வீட்டிற்கு!"

"சிறிது நேரத்தின் முன்னர் கரோலினது தூக்கத்தைக் கெடுத்து விட்டேன் என்று என்னை விமர்சித்தாயே, இப்போது மட்டும் நீ என்னை உனது வீட்டுக்கு அழைக்கும் போது, கரோலினது தூக்கம் கெடுபடும் நேரம் நீடிக்குமென்பது உனக்குத் தெரியாதா?"

"கரோலினது தூக்கம் கெடுபடுமே என நீ இரங்கியிருப்பின், எனது வீட்டின் கதவைத் தட்டியிருக்க மாட்டாய்... வா எனது வீட்டுக்கு என்னுடன் தூங்கு....

"உன்னுடன் நான் தூங்க மாட்டேன்"

"நான்?"

"நான் எனக்குள் தூங்கிக் கொண்டுள்ளேன்."

இருவரும் வீட்டுக்குள் நுழைந்தோம். கடிகாரம் காலை நான்கு மணியைக் காட்டுகின்றது.

யார் கொரின்? யார் கரோலின்? எனக்கு எதுவுமே விளங்கவில்லை.

இந்த விளங்காதிருத்தல்தான் நான் விளங்கிக்கொண்டதோ? அதுவும் எனக்கு விளங்கவில்லை.. விளங்குதலும் விளங்காதிருத்தலும் ஒன்றே என்கின்ற ஞானம் எனக்குள் முகிழ்த்ததுதான் காரணமோ? அதுவும் கூட எனக்கு விளங்கவில்லை.

"கொரின். எனக்குத் தாகமாகவுள்ளது... குளிராக ஏதும் குளிர்சாதனப் பெட்டிக்குள் உள்ளதோ?"

"குளிர் சாதனப் பெட்டிக்குள் இருப்பவை குளிராகவே இருக்கும் என்பது உனக்குத் தெரியாதோ?"

"குளிர் சாதனப் பெட்டி பழுதாகியிருப்பின், அதற்குள்ளே கோடை கூட குடியிருக்கக் கூடிய வாய்ப்புண்டு..."

"நீயும் உனது குளிரும்" என இதமாகச் சொல்லிவிட்டு, குளிர்சாதனப் பெட்டிக்குள்ளிருந்து, குளிரான இரண்டு பியர் புட்டிகளுடன் வருகின்றாள். ஒன்று அவளுக்கு, மற்றது எனக்கு. எனது கிளாஸிற்குள அவளும, அவளது கிளாஸிற்குள் நானுமென ஜப்பானிய பாணியில் பியர் பரிமாற்றம் செய்கின்றோம்.

..."CA FAIT DE BIEN" (ஆறுதலைத் தருகின்றது என்ற அர்த்தத்தையும் இதற்குக் கொடுக்கலாம்) என்கின்றேன்.

" நீ கதவைத் தட்டுவதற்கு முன்னர் நான் ஓர் கனவு கண்டேன்..."

" உன் கனவில் நான் வந்தேனோ?" மிகவும் அமைதியாகக் கேட்கின்றேன்.

"இல்லை.. ஓர் பூனை வந்தது..."

"அது பூனையா? புலியா? இரண்டுக்கு மிடையே கனவில் வித்தியாசம் காண்பது சற்றே கடினம். கனவுகளிலே சிலவேளைகளில் கீறல்கள் விழுந்த படங்கள் ஓடுவதுண்டு."

"அது புலியல்ல, பூனையே.. அதனது மியா, மியா சத்தம் எனக்குத் தெளிவாகவே கேட்டது...."

"சரி...பூனை வந்தது... அது என்ன செய்தது...."

"தனது மிருதுவான வாலால் எனது உடல் முழுவதையும் தழுவியது... நான் அது என்னைத் தழுவட்டும் என விட்டுக் கொடுத்தேன்...."

"நீ பூனையின் காதலியா?"

"ஆம்!"

"என்ன! இது உண்மையா?"

"அந்தப் பூனை பின்னர் நீயாக மாறியது..."

"மாறிய பின் என்ன செய்தது..."

"அது செய்ய வெளிக்கிடத் தொடங்கிய வேளையில், கனவு கலைந்துவிட்டது.. நான் கனவைச் சபித்தேன்..."

"நீ கனவைச் சபித்தால் நானும் சபிக்கப்படுவேன் அல்லவா!"

"அது எப்படி?"

"உனது கனவுக்குள் நான் இருந்தேன்."

"மொழி புனிதமானது. சித்தினால் மொழியைக் கெடுக்காதே!"

"மொழி அசுத்தமானது. எவை சுத்தமானவை என்பது எனக்குத் தெரியாது...."

"அப்படியாயின் உனது எழுத்துகள்..."

"ஓ! நான் எழுத்தாளன் என்பதையும் நீ எனக்கு நினைவூட்டுகின்றாய். என் எழுத்துகள் எந்த வகையறாவுக்குள் அடங்குமென்பதும் உனக்குத் தேவையாகவுள்ளது... எனது எழுத்துகள் அசுத்தமானவை.."

"இல்லை அவை சுத்தமானவை..."

"என் மீதான எனது மதிப்பீட்டை நீ ஏன் என்னிடமிருந்து பறிக்கின்றாய்?"

"உன் மீதான உனது மதிப்பீட்டை நீ எனது உடலில் எழுதினாய்...."

"நான் உனது உடலின் மீது எழுதிய மதிப்பீடு உண்மையானது


***24ம் பக்கம் பார்க்க..***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கறை படிந்த கைகள்



## ஜீன் பால் சாத்ரே

### தமிழில்: நேசன்

ஒல்கா: ஹோடரர்..
லூயிஸ்: அவர் மீண்டும் போரிஸ் உடனும் லுக்காஸ் உடனும் சேர்ந்துவிட்டார்.
லூயிஸ்: கெட்ட வேசை மக்கள்
ஒல்கா: வாக்கெடுப்பில் என்ன நடந்தது?
லூயிஸ்: ஆம் (மௌனம்) மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு அவனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவன் அவற்றின் முடிவுகளுடன் வரும் போது அதைச் செயலாக்கப் போகின்றான்.
ஒல்கா: அடுத்த கூட்டம் எப்போது?
லூயிஸ்: இன்னும் பத்து நாட்களில். அது எங்களுக்கு ஒரு வருடத்தில் கூடுதலான நேரத்தைத் தரும் (ஒல்கா ஹிகோவை சுட்டுகின்றாள்)
என்ன? ஆ நீயா? நீ இன்னும் இங்குதான் வேலை செய்கின்றாயா? ஆ (ஹிகோவை பார்த்து தன்னை மறந்தவனாகப் பேசுகின்றான்) ஹம் நீ இன்னும் இங்குதான் இருக்கின்றாய். (ஹிகோ வெளியே செல்ல முற்படுகின்றான்)
நில் உனக்கு நான் ஓர் வேலை தரலாம் ( ஒல்காவைப் பார்த்தபடி)
அவனை உனக்குத்தான் அதிகம் தெரியும்
அவனது தகுதிகள் என்ன?
ஒல்கா: அவன் விஷயங்களைச் செய்யக் கூடியவன்.
லூயிஸ்: அவன் இடைவெளியில் வேலையில் இருந்தும் பின்வாங்கமாட்டான் என நீ நினைக்கின்றாயா?
ஒல்கா: ஓ அப்படி இல்லை அதற்கு முற்றிலும் மாறானது அவன்—
லூயிஸ்: என்ன.....
ஒல்கா: ஒன்றுமில்லை அவன் செய்வான்.
லூயிஸ்: நல்லது (மௌனம்) ஐவன் போய் விட்டானா?
ஒல்கா: அவன் போய் கால் மணித்தியாலமாகிறது.
லூயிஸ்: நான் இப்போது அந்த இடத்திற்கு கிட்டத்தான் இருக்கின்றோம். குண்டு வெடிக்கும் போது வெடிச்சத்தம் எங்களுக்கு இங்கு கேட்கும். (மௌனம். ஹிகோவை நோக்கி திரும்பியபடி) நீ சீரியஸான ஓர் வேலை செய்ய வேண்டும் என துடிக்கின்றாய் போல் இருக்கின்றது
ஹிகோ: ஆம்
லூயிஸ்: ஏன்?
ஹிகோ: ஏனென்றால்—
லூயிஸ்: மிக நன்று. கையால் செய்யும் வேலை உனக்கு பிடிக்காதா என்ன?
ஹிகோ: அதுதான் உண்மை
லூயிஸ்: வேறு என்ன நீ சொல்ல நினைக்கின்றாய்.
ஹிகோ: கடந்த நூற்றாண்டின் இறுதியில் ரஷ்யாவில் சில கதாபாத்திரங்கள் இருந்தன. அதாவது சில இளைஞர்கள் தம்முடன் கைக்குண்டுகளை இணைத்தபடி அரசனின் அருகே சென்று குண்டுகளை வெடிக்க வைப்பார்கள் அதில் அவர்கள் அரசனுடனும் தாமும் இறப்பார்கள் எனக்கு அப்படியான வேலைகளைச் செய்யவிருப்பம்.

> "கடந்த நூற்றாண்டின் இறுதியில் ரஷ்யாவில் சில கதாபாத்திரங்கள் இருந்தன. அதாவது சில இளைஞர்கள் தம்முடன் கைக்குண்டுகளை இணைத்தபடி அரசனின் அருகே சென்று குண்டுகளை வெடிக்க வைப்பார்கள் அதில் அவர்கள் அரசனுடனும் தாமும் இறப்பார்கள் எனக்கு அப்படியான வேலைகளைச் செய்யவிருப்பம்."

> "அவர்கள் அராஜகவாதிகள் நீ அவர்களை நேசிப்பதற்கு காரணம் நீயும் அவர்களை போன்ற ஒருவன். ஆனால் நீ ஓர் புத்திஜீவித அராஜகவாதி நீ ஐம்பது வருடங்களுக்கு பின்னால் வாழ்பவன். பயங்கரவாதம் என்பது ஓர் இறந்தகால நிகழ்வு."

லூயிஸ்: அவர்கள் அராஜகவாதிகள் நீ அவர்களை நேசிப்பதற்கு காரணம் நீயும் அவர்களை போன்ற ஒருவன். ஆனால் நீ ஓர் புத்திஜீவித அராஜகவாதி நீ ஐம்பது வருடங்களுக்கு பின்னால் வாழ்பவன். பயங்கரவாதம் என்பது ஓர் இறந்தகால நிகழ்வு.
ஹிகோ: அப்படியானால் நான் ஒன்றுக்கும் உதவாதவன்தான்
ஹிகோ: அப்படியானால் அந்த விடயம் பற்றிய ஓர் உரையாடலை நிறுத்துவோம்.
லூயிஸ்: கொஞ்சம் பொறு (மௌனம்) உனக்கு பொருத்தமான ஓர் வேலையை எனக்குத் தாருங்கள்.
ஹிகோ: "உண்மையான" ஓர் வேலையா?
லூயிஸ்: ஆம்
ஹிகோ: நீ உண்மையில் என்னில் நம்பிக்கை வைத்திருக்கின்றாயா?
லூயிஸ்: அது நீ நடந்து கொள்ளும் விதத்தைப் பொறுத்தது.
ஹிகோ: லூயிஸ் நீ சொல்லும் எதையும் செய்ய நான் தயார்.
லூயிஸ்: பார்ப்போம் உட்கார் (மௌனம்) இப்ப எங்கள் சூழ்நிலை இதுதான் ஒரு புறம் நாஸிகள் உடன் தொடர்புள்ள றிஜென்றின் பாசிச அரசாங்கம். மறுபுறம் சுதந்திரம், ஜனநாயகம், வர்க்கமற்ற சமுதாயம் ஆகியவற்றிற்காகப் போராடும் எமது கட்சி இரண்டுக்கும் இடையில் கட்சிகளுக்குமிடையில் பூர்சுவா லிபரல்களையும் தேசிய வாதிகளையும் இணைக்கும் பென்ரகன் கட்சி. இந்த மூன்று குழுக்களும் ஒன்றுடன் ஒன்று இணையமுடியாத, ஒன்றை ஒன்று வெறுக்கும் சக்திகள் (மௌனம்) இன்று ஹோடரர் கட்சி கூட்டத்தைக் கூட்டியதற்கு காரணம் இந்த 2ம் உலக யுத்தத்தின் வாழ்வில் எமது தொழிலாளர் கட்சியை இந்த பாசிச, பென்ரகன் கட்சிகளுடன் இணைத்து புதிய அரசாங்கம் அமைத்து அதிகாரங்களை அவர்களுடன் பகிருவதற்காகத்தான். நீ அதைப்பற்றி என்ன நினைக்கின்றாய்?
ஹிகோ: (சிரித்தபடி) நீ பகிடி விடுகிறாய்
லூயிஸ்: ஏன்?
ஹிகோ: இவ்வாறான ஓர் அரசாங்கம் படுமுட்டாள் தனமானது
லூயிஸ்: ஆம். அதனால் தான் கடந்து மூன்று மணித்தியாலங்களாக வாதிட்டோம் எமது கட்சியில் பெரும்பான்மையோர் இந்த முடிவுக்கு இணங்கியிருக்கின்றார்கள் எனின் நீ என்ன செய்வாய்?
ஹிகோ: நீ சீரியஸாக தான் சொல்கின்றாயா?
லூயிஸ்: ஆம்
ஹிகோ: நான் எனது குடும்பத்தையும், வர்க்கத்தையும் தியாகம் செய்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இக்கட்சிக்கு வந்தேன் சுரண்டலை ஒழிக்க வேண்டும் என்பது எனது இலட்சியம் என்று இந்த நிலைப்பாட்டை எந்த ஓர் சந்தர்ப்பத்திலும் விட்டு கொடுக்க மாட்டேன்.

லூயிஸ்: ஆனால் அதுதான் உண்மை எனின்?

ஹிகோ: நீ பகிடிக்காக சொல்கின்றாய்?

லூயிஸ்: மத்திய குழு ஹொடரரின் வேண்டுகோளை நான்குக்கு மூன்று என்ற வோட்டுடன் அங்கீகரித்துள்ளது. அடுத்த கிழமை ஹொடரர் றீஜெண்ட்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போகின்றான்.

ஹிகோ: அவன் எங்களை விற்றுவிட்டான்

லூயிஸ்: அவன் ஓர் துரோகி. அது என்னை வருத்துகின்றது.

ஹிகோ: ஆனால் லூயிஸ் இதை என்னால் புரியவில்லை. றிஜெண்ட்கள் எம்மை வெறுப்பவர்கள் அவர்கள் எம்மை வேட்டையாடுபவர்கள். நாஸி ஜேர்மனியுடன் சேர்த்துக்கொண்டு சோவியத் யூனியனுக்கு எதிராக போரிடுபவர்கள். அவன் எமது தோழர்களை சுடுகாட்டுக்கு அனுப்புகின்றான் இப்ப நாங்கள் என்ன செய்யலாம்.

லூயிஸ்:இனி ஜேர்மனி போரில் வெல்லாது என றிஜென்ட் விளங்கிக்கொண்டான் இப்போது அவனுக்கு தன்னைக் காப்பாற்றுவது முக்கியம். அவன் இப்போது எங்களுடன் சேர்ந்து கொண்டால் நேச அணிகள் போரில் வென்ற பின்புதான் இரட்டை விளையாட்டு விளையாடியதாகச் சொல்லி தன்னைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

ஹிகோ: உனது தோழர்களில் நிலைப்பாடு என்ன?

லூயிஸ்: நான் பிரதிநிதித்துவப் படுத்தும் P.A.C. முழுவதும் ஹொடரருக்கு எதிராக இருக்கின்றது. உனக்குத் தெரியும் தொழிலாளர் கட்சி, [illegible] இரண்டும் சோஷலிச ஜனநாயகக் கட்சியினதும் இணைப்பில் தோன்றியது. சோஷலிச ஜனநாயக கட்சி பெரும்பான்மையானது. அது ஹொடரரின் தீர்மானத்தை ஆதரிக்கிறது.

ஹிகோ: ஏன் அவர்கள் அதை ஆதரிக்கிறார்கள்?

லூயிஸ்: ஏனெனின் அவர்களுக்கு, ஹொடரர் குறைகளுக்கு அப்பாற்பட்ட ஓர் புனிதமான ஒரு ஜீவி. (விரக்தியுடன்)

ஹிகோ: நாங்கள் கட்சியை பிரிக்கலாமா?

லூயிஸ் அது நடைமுறைச் சாத்தியமாகாது. (மௌனம்) நீ எங்கள் பக்கமா?

ஹிகோ: நீயும் ஒல்காவும் எனக்கு எவ்வளவோ கற்று தந்திருக்கின்றீர்கள். நான் உங்களுக்கு மிகவும் நன்றிக்கடன்பட்டு இருக்கின்றேன் என்னைப் பொறுத்தவரை நீங்கள் தான் எனது கட்சி.

லூயிஸ்: (ஒல்காவை நோக்கி) அவன் சொல்வது உண்மைதானா?

ஒல்கா: ஆம்

லூயிஸ்: நல்லது (ஹிகோவைப் பார்த்து) உனக்கு நிலைமை விளங்குகின்றது இப்போ நிலைமையின்படி நான் கொமிட்டி சொல்லும் வேலையைச் செய்யவும் முடியாது. அதைவிட்டு வெளியேறவும் முடியாது. இது எல்லாம் ஹொடரரின் வேலைதான். அவன் மட்டும் இல்லாவிடில் மற்ற கொமிட்டி ஆட்களை நாம் எமது பக்கத்திற்கு இழுத்திருக்கலாம். (மௌனம்) போன கிழமை தனக்கு ஓர் செயலாளர் வேண்டும் என ஹொடரர் கட்சியைக் கேட்டு இருந்தான் திருமணம் செய்த ஒருவன் அவனுக்கு வேண்டுமாம்.

ஹிகோ: ஏன் அவனுக்கு ஓர் திருமணம் செய்த செயலாளர் தேவை?

லூயிஸ்: எனக்குத் தெரியாது. நீ திருமணமானவனா?

ஹிகோ: ஆம்

லூயிஸ்: மிகவும் நல்லது நீ அந்த வேலையை ஏற்றுக் கொள்வாயா?

ஹிகோ: (உற்சாகத்துடன்) ஆமாம்

லூயிஸ்: மிகவும் நல்லது. நாளை உனது மனைவியுடன் நீ அங்கு செல்லலாம். ஹொடரர் இங்கிருந்து 15 மைல் தொலைவில் உள்ள ஓர் கிராமம் ஒன்றில் மூன்று மெய்காவலர்களுடன ஓர் வீட்டில் இருக்கின்றான். இம்மூன்று மெய்காவலர்களும் அவனுக்கு பாதுகாப்பிற்காக இருக்கின்றார்கள். உனது வேலை அங்கு நீ அவனை உளவு பார்ப்பதே. அங்கு நாம் உன்னை விரைவில் தொடர்பு கொள்வோம். அவன் பாசிச றிஜெண்ட் அரசாங்கத்தைச் சார்ந்த காவலரையும் சந்திக்காதபடி நீ பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஹிகோ:ஆம்

லூயிஸ்: நான் ஒரு குறிப்பிட்ட நாளைத் தேர்ந்தெடுப்போம். அன்று இரவு ஹொடரின் கதவை நீ திறந்து வைத்திரு. எனது மூன்று தோழர்கள் வந்து ஹொடரரை மண்டையில் போடுவார்கள். அதேவேளை பின் வாசலில் காத்திருக்கும் காரில் நீயும் உன் மனைவியும் உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டும்.

ஹிகோ: ஓ! லூயிஸ்

லூயிஸ்:என்ன பயப்படுகிறாயா?

ஹிகோ:சே. எனது வேலை அவ்வளவு தானா என்று யோசித்தேன். ஆனால் ஆக கதவைத் திறக்கும் வேலையை மட்டும் தான் செய்ய முடியும் என்று நீ நினைக்கிறாயா?

லூயிஸ்: அப்போ உனக்கு இந்த வேலையைச் செய்ய விருப்பமில்லையா?

ஹிகோ:அப்படி இல்லை. நான் இந்த மாதிரி சின்ன வேலைகளைச் செய்ய முடியாது. ஒரு புத்தியுள்ள anarchist ஆகிய நான் இந்த மாதிரி பழைய காலத்து வேலைகளைச் செய்ய முடியாது.

லூயிஸ்:ஹிகோ

ஹிகோ:நான் சொல்ல வருவது இது தான். என்னை யாரும் அங்கு வந்து சந்திக்கத் தேவையில்லை. நானே ஹிகோவை மண்டையில் போட முடியும் என்று தான் சொல்கிறேன.

லூயிஸ்:நீயா?

ஹிகோ:ஆம். நானே தான்.

லூயிஸ்:உன்னை மாதிரி புது ஆட்களுக்கு இந்தவேலை மிகவும் கஷ்டமானது.

ஹிகோ:உனது மூன்று தோழர்களும் ஹொடரரின் மெய்காவலர்களுடன் மோதி இறந்து போனால் என்ன செய்வது? நான் அவனது செயலாளராக இருப்பதால் அவனது நம்பிக்கைக்கு பாத்திரமாகி எனது வேலையை கச்சிதமாக முடிக்கலாம். ஏனெனில் எனக்கு ஹொடரரின் மெய்காலவர்கள் இல்லாமல் தனிமையாக இருக்கும் பல சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.

லூயிஸ்:(தயக்கத்துடன்) எனக்கு

ஒல்கா: லூயிஸ்

லூயிஸ்:என்ன?

ஒல்கா: ஹிகோவை நம்பு. இந்தப் பையன் பெரிய வேலை ஒன்றை செய்ய வேண்டும் என்று துடிதுடிக்கிறான். அவன் அதைச் செய்வான் என நம்புகிறேன்.

லூயிஸ்:நீ தான் அவனுக்கு பொறுப்பு.

ஒல்கா: எனக்கு அந்த பொறுப்பில் பிரச்சனை இல்லை.

லூயிஸ்:நல்லது. (அப்போது தூரத்தில் வெடிகுண்டு வெடிக்கும் சத்தம் கேட்கிறது)

ஹிகோ:நாங்கள் அனுப்பிய ஆள் கச்சிதமாக வேலையை செய்திருக்கிறான்.

லூயிஸ்:ஹிகோ, லைட்டை அணைத்து விட்டு ஜன்னலைத் திற.

(தூரத்தில் தெரியும் நெருப்புச் சுவாலையை ஜன்னலூடாகப் பார்க்கின்றனர்)

லூயிஸ்:ஆம். பாலம் உடைந்து எரிகிறது. எங்கள் தோழன் வேலையை சரியாக செய்திருக்கிறன்.

ஹிகோ:ஆம். அவன் தனது வேலையை செய்து விட்டான். அடுத்த கிழமை முடிவில் நானும் எனக்கிடப்பட்ட வேலையைச் செய்து முடித்திருப்பேன். அப்போது என்னைப் பற்றி நீங்கள் எல்லோரும் புகழ்ந்து பேசப் போகிறீர்கள்.

தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# இத்தாலி: வலதுசாரிகளின் வெற்றிகளால் தடுமாறும் எதிர்காலம்!

மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்ட இத்தாலியப் பொதுத் தேர்தல் முடிவுகள் ஏமாற்றமளிப்பவையாக அமைந்துள்ளன. கடந்த மார்ச் மாதம் 27, 28 ம் திகதிகளில் இத்தாலியின் பாராளுமன்றம் மற்றும் செனட் சபைகளுக்கான தேர்தல்கள் நடந்தன. சமீபத்தில் உள்ளூராட்சி தேர்தல்களில் வெற்றிபெற்ற முற்போக்கு இடதுசாரி முன்னணியே இந்தத் தேர்தலிலும் வெற்றிபெறும் என்ற ஆரம்ப எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் தேர்தல் முடிவுகள் வலதுசாரிக் கட்சிக் கூட்டணிக்கே வெற்றியைக் கொடுத்திருக்கின்றன. சில்வியோ பேர்லுஸ்கோனியின் தலைமையிலான சுதந்திர கூட்டணி (FREEDOM ALLIANCE) பாராளுமன்றத்தில் 366 ஆசனங்களையும். செனட்சபையில் 155 ஆசனங்களையும் பெற்று வெற்றிபெற்றுள்ளது. முற்போக்கு அணிக்கு பாராளுமன்றத்தில் 213 ஆசனங்களும் செனட்சபையில் 122 ஆசனங்களும் கிட்டியுள்ளன.

இரண்டு மாதங்களுக்கு முன்னரேயே அரசியலில் குதித்த இத்தாலியின் பிரபல வர்த்தகரும் கோடீஸ்வரருமான பெருலுஸ்கோனி 'இத்தாலியே நாங்கள் போவோம்' (FORZA ITALIA) என்ற கட்சியை ஆரம்பித்தார். இந்தக் கட்சியும் நவபாசிசக் கட்சியான தேசிய கூட்டணி, இத்தாலியின் வடபகுதியில் பிரிவினையைக் கோரும் வடக்கு பேரவை ஆகியன இணைந்தே இந்த வலதுசாரிக் கூட்டணியை அமைத்தன. அதே சமயம் இடதுசாரிக் கூட்டணியில் இடதுசாரிகளுக்கான ஜனநாயகக் கட்சி, மறுசீரமைக்கப்பட்ட கம்யூனிஸ்ட்டுகள், மா:பியாவுக்கு எதிரான அமைப்புக்கள் ஆகியன இருந்தன. இந்தத் தேர்தலில் மா:பியா குழுக்கள் வலதுசாரிக் கூட்டணிக்கே பூரண ஆதரவை வழங்கின என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக உள்ளூராட்சித் தேர்தல்களில் பெரும் வெற்றி பெற்ற மா:பியா எதிர்ப்பு அமைப்புக்கள் இந்த பொதுத் தேர்தலில் வலதுசாரி வேட்பாளர்களிடம் தோல்வி யடைந்துள்ளன. 1980இன் பின்னர் இத்தாலியில் கிளர்ந்தெழுந்த மா:பியா எதிர்ப்பு மக்கள் இயக்கம் இந்தத் தேர்தலில் வலதுசாரிகள் தோற்கடிக்கப் பட்டிருப்பது இத்தாலியின் எதிர்காலத்துக்கு எந்த வகையிலுமே ஆரோக்கியமானது அல்ல. பிரபல மா:பியா எதிர்ப்பு நீதிபதியான அந்தோனினோ கபோனெற்றோ பலெர்மோ தொகுதியில் வலதுசாரி வேட்பாளர்களிடம்

## சுழலும் உலகம்



**தி. உமாகாந்தன்**

தோல்வியடைந்துள்ளார்.

தேர்தலில் வலதுசாரிக் கூட்டணி வெற்றியடைந்த போதிலும் ஆட்சி அமைப்பதில் இந்தக் கூட்டணிக் கட்சிகளிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. வடக்குப் பிரிவினைவாதக் கட்சியின் தலைவர் உம்பொற்றோ பொசினி, பெருலுஸ்கோனி பதவி ஏற்பதை எதிர்த்துள்ளார். ஆனால் இந்த இருவருக்குமிடையில் நடந்த சந்திப்புக்கள் சூழ்நிலையின் பதட்டத்தை குறைத்துள்ளன. வலதுசாரி அரசாங்கத்தின் பிரதமராக தான் பதவி ஏற்கப் போவதையும் இதற்கான கோரிக்கையை ஜனாதிபதி ஒஸ்கார் லூயிஜி ஸ்கலபரோவிடம் விடுக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் இவர் பிரதமராவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வடக்குப் பிரிவினை அமைப்புத் தலைவர் திரு.பொசி அமைக்கப்படவிருக்கும் புதிய அரசாங்கத்தில் நவபாசிஸ்டுகள் அங்கம் பெறுவதை நாம் அனுமதிக்கப் போவதில்லை எனக் கூறியுள்ளார். அவர்களது தீவிரவாதப் பின்னணிகளைக் கூறி அவர்களை எதிர்க்கும் பொசி குறிப்பிடும் இன்னுமொரு விடயம் இத்தாலியின் தென்பகுதியில் அதிக வாக்குகளைப் பெற்ற நவ பாசிஸ்டுகள் தொடர்ந்து வசதியான வடக்கிலிருந்து மானியம் பெற்று காலம் தள்ளுவார்கள் என்பதுதான். அதுமட்டுமல்ல திரு. பெருலுஸ்கோனியின் பெரும் சொத்துக்களும் திரு.பொசியின் கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கின்றன. இத்தாலியின் மூன்று பிரபல தொலைக்காட்சிச் சேவை நிறுவனங்கள்., பல சஞ்சிகைகள் பல தொடர் நகரக்கடைகள் ஏராளமான நிலம் ஆகியனவற்றின் உடைமைகளிலிருந்து பெருலுஸ்கோனி விடுபடவேண்டும் என்பது பொசியின் வாதம். ஏனெனில் பிரதமர் பதவி வகித்துக்கொண்டு இத்தகைய வர்த்தகத்தையும் நடத்தினால் அது எதிர்காலத்தில் ஊழல்களுக்கும் சர்ச்சைகளுக்கும் இடமளிக்கும் என்பது திரு. பொசியின் வாதம். அத்துடன் தமது வடக்குப் பிராந்திய அமைப்பின் கீழ்சபைத் தலைவரான ரொபேற்றோ மரோனியே பிரதமர் பதவிக்கு சரியானவர் என்பதும் பொசியின் அபிப்பிராயம். தமது தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் திரு. பெருலுஸ்கோனி "நான் பிரதமராக பதவி ஏற்க வேண்டும் என்றால் எனது நிறுவனங்களை விற்றுவிடவேண்டும் என சிலர் கூறுவதாக நான் கேள்விப்பட்டேன். விரும்பினால் அவர்களில் யாராவது முன்வந்து அவற்றை வாங்கட்டும் அதை நான் ஆட்சேபிக்கவில்லை" என்கிறார். நவபாசிஸ்டுகளும் தனது அரசாங்கத்தில் இருப்பார்கள் எனக்கூறும் பெருலுஸ்கோனி உதவிப் பிரதமர் பதவியை வடபிராந்திய அமைப்புக்கு அளிக்கத் தயாராக உள்ளதாகவும் கூறியுள்ளார்.

ஆனால் நவபாசிஸ்டுகளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத்தாலியின் வடபிராந்தியக் கட்சியும் அரசாங்கத்தில் இடம் பெறுவது என்பது ஐரோப்பியக் கூட்டமைப்பில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம் போன்ற நாடுகள் நவபாசிச அல்லது தீவிரவலதுசாரிகளை ஒதுக்கி வைக்க முனையும் இந்தவேளையில் இத்தாலியில் தீவிர வலதுசாரி நவபாசிஷ்டுகளுக்கு கிடைத்திருக்கும் வெற்றி இதரநாடுகளிலுள்ள தீவிர வலதுசாரிகளுக்கு ஒரு உற்சாக மாத்திரையாக அமைந்துள்ளது. இதனாலேயே பிரான்சின் தீவிர வலதுசாரிக்கட்சியான தேசிய முன்னணியின் தலைவர் லெபென் இவ்வெற்றி குறித்து பாராட்டை அள்ளிவழங்கினார். ஆனால் கிறீஸ் நாட்டில் நடந்த தேர்தல்களில் சோசலிஷ்டுகள் வென்றது குறித்து அதிருப்தி தெரிவிப்பதில் அவசரம் காட்டிய பிரான்சின் வலதுசாரி அரசின் வெளியுறவு அமைச்சர் அலன் யுப்பே 'இத்தாலியத் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்துக் கூற தமக்கு எந்தக் காரணமும் இல்லை' எனத் தட்டிக் கழித்துவிட்டார். ஆனால் இத்தாலியில் கிடைத்த இந்த வெற்றியை எதிர்வரும் ஐரோப்பிய தேர்தல்களிலும், பொதுத்தேர்தல்களிலும் தீவிர வலதுசாரிகள் பாவிக்கப் போவது தவிர்க்க முடியாதது. தற்போது ஐரோப்பிய கூட்டமைப்பின் தலைமைப் பதவியை வகிக்கும் கிரேக்க நாட்டு வெளிநாட்டமைச்சர் தியேடோர் பங்கலோஸ் கூட நவபாசிஷ்டுகளின் வெற்றி குறித்து கடுமையான விமர்சனம் எதையும் வைக்கவில்லை. அவுஸ்திரியாவின் வெளிநாட்டமைச்சர் அலொய்ஸ் மொக் "மிதவாதக் கட்சிகளின் பலவீனத்தால் ஏற்பட்ட வருத்தப்படவேண்டிய வெற்றியே இது" என்கிறார்.

இத்தாலியிலே இடதுசாரி முன்னணி பதவிக்கு வந்துவிடக்கூடாது என்ற முனைப்பு ஐரோப்பாவின் வலதுசாரி அரசாங்கங்கள் அனைத்துக்கும் இருந்திருக்கிறது. இல்லையேல் பெருலுஸ்கோனியின் திடீர் அரசியல் பிரவேசமும் இரண்டு மாத அரசியல் வேலைகளில் கிடைத்த பெருவெற்றியும் மா.:.பியா எதிர்ப்புச் சக்திகளுக்கு கிடைத்திருக்கும் தோல்வியும் வந்திருக்க முடியாது. நிலையில்லாத அரசாங்கங்களை தொடர்ந்து தருவதில் சாதனை படைத்த இத்தாலிய மக்கள் இம்முறை தமது எதிர்காலத்தையே நிலைதடுமாற வைத்துள்ளார்கள்.

## தூக்கம்..

என நீ கருதுகின்றாயா?"

"பொய்யை எழுதினேன் என நீ சாட்டுக்குச் சொல்லலாம்.... மெய்மையே நீ எழுதினாய் என அது என்னால் மொழி பெயர்க்கப்படும்."

நானும் கொரினும், மிகவும் ரகஸியமாக, பாரிஸ்"க்குள் ஐப்பானை வாழ்ந்தவர்கள். --- பார்த்தவர்கள்..... எங்கே? எப்படி? கலங்கும் மனக்குளத்தினது மூலங்கள் மர்மங்களாகவே இருக்கட்டும்.......

"கொரின், உனக்குத் தூக்கம் வந்தால் போய்த் தூங்கு...."

"எனக்கு முன் நர்த்தனமாடும் கனவு உனக்குத் தெரியவில்லையா?"

"எனது விழிப் புலன் பலவீனமடைந்துள்ளது... எதுவுமே எனக்கு முழுமையாகத் தெரியவில்லை"

கொரின் என் முன் நிர்வாணமாகிக் கேட்கின்றாள்.

"இதுவுமா?"

"ஆம்"

மீண்டும் என் கன்னத்தில் அறைந்து விட்டு, உள்ளே போகின்றாள் ஒரு வேளை தூங்குவதற்காக இருக்கலாம்.

கொரின் உள்ளபோனதும நான் விழிக்கின்றேன். கரையாத காலசமுத்திரங்கள், திட்டாய் மாறிய கண்ணீர்த்துளி ஒன்றின் மீது அட்டணக்கால் கட்டி உலகின் ஜால வளையங்களைக் கடப்பதில் இன்பம் துய்த்தும் துன்பம் துய்த்தும் யாவும் தித்திப்பினது மூலங்களே எனும் மோன நிலைக்குள் மூழ்கி முத்தெடுத்து, மாலையாக்கி செல்வி கொரினின் கழுத்திலே சூடத் தயாராகின்றேன்.

கரோலின் எனது மனைவி.

அவள் எங்கே?

அது எனக்குத் தெரியாது.

கொரின் எங்கே?

அது எனக்குத் தெரியும். தெரியாமலும் இருக்கலாம்.

தெரிவு எனக்கு மறுக்கப்பட்டுள்ளது என வருமாயின் தெரிவும் தெரிவின்மையும் சமன் எனும் முடிவுக்கு வருதல் அபத்தமா?

காலையில் கரோலின் என்னை, எனது என், சிதறும் வகையில் குத்திக் குதறலாம். இரவு மரணிக்க முன்னர், என்னைப் பூனையாக்கி, மியா, மியா எனக் கத்திக் கொண்டு, கொரினினது அறைக்குள் நுழைகின்றேன்.

அவளும் தூங்காதிருந்தாள்.

(மார்ச் 22 1994.)

## இருத்தலியல்..

பரிசுத்தமாகி விட்டன அல்லது பரிசுத்தமானவை என்ற முடிவுக்கு நாம் வந்துவிட முடியாது. காலனித்துவத்தை விட்டுதற்போது அவர்கள் நவகாலனித்துவத்தை அறிமுகப் படுத்தியுள்ளனர். நவகாலனித்துவம் வணிக (பொருளாதார) ரீதியான அடக்கு முறைகளுடன் தொடர்பு கொண்டன. உற்பத்தி, விநியோகம் தொடர்பான மனிதாபிமான ஆய்வுகள் மட்டுமே எமக்கு வல்லரசுகளினது கொடூரமான பின்புலத்தைக் காட்டஉதவும்.

உலகம் தழுவிய ஆர்ப்பாட்டங்கள், அதாவது தனிமைப்படுத்தப்பட்ட தேவைகளை யொட்டிய ஆர்ப்பாட்டங்கள் – தற்காலிகக் தீர்வுகளை ஒருவேளை தரலாம். தற்காலிக தீர்வுகளை மட்டும் வைத்து, நாம் ஓர் சர்வதேசியத் தீர்வு தொடர்பான முடிவினை எடுத்துவிடமுடியாது. சர்வதேசியத் தீர்வு என நான் இங்கு குறிப்பிடுவது ஓர் பொருளாதாரத் தீர்வையே. இந்தத் தீர்வு தொடர்பான சிந்தனைக்குள் நாம் நுழைவதாயின், வல்லரசுகளின் கட்டுப்பாட்டில் இருப்பதும், உலக பொருளாதார சமச்சீரின்மைக்கும், அரசியல் நெருக்கடிகளுக்கும் காரணமான IMF (International Monetary Fund சர்வதேச நாணய நிதியம்) இனது அழிவு பற்றிச் சிந்திக்கவேண்டும்.

இந்தச் சிந்தனையின் முதல்படி, மூன்றும் உலகினது "ஆர்ப்பாட்டங்கள்" அனைத்தும் "ஆர்ப்பாட்டம்" என்ற ஓர் பொது அலகிற்குள் நுழைவதிலேயே தங்கியுள்ளது.....

இது, இலகுவில் சாத்தியமாகும் ஒன்றல்ல. புதிய விவாதங்கள் அவசியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்: செ. லோகநாதன்

### ஜே.வி.பியின் நடவடிக்கைகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்திய சமூக காரணிகள்;

சமூக ரீதியாக எடுத்துப் பார்க்கும்போது கலாச்சாரம், மொழி, கல்வி, குலம் ஆகியவாறுன சமூக அநீதிகள் எமது சமுதாயத்தில் நிலவுவதைக் காணமுடியும். சமூகத்தில் ஒரு புறம் ஆதிக்கம் செலுத்தும் சிறுதொகையினரது கலாச்சாரமும் மறு புறம் ஆளப்படும் மிகப் பெரும்பாலோரது ஒடுக்கப்பட்ட கலாச்சாரமும் என்றவாறு நேர் எதிரெதிர் துருவங்களாக நிலவும் இரு கலாச்சாரங்களையும் எம்மால் காணமுடிகிறது. உண்மையிலேயே இனரீதியான கலாச்சாரங்களுக்கும் மேலாக இவ் இரு கலாச்சாரங்களும் செயல்படுகின்றன எனக் கூறவேண்டியுள்ளது. இனரீதியான முரண்பாடுகள் கூர்மை அடைந்தும் மோதல்களும் நிலவுகின்றபோது மேற்குறிப்பிட்ட கலாச்சாரங்கள் அவற்றுக்கும் மேலாக நிலவுகின்றது என்பதைக் காண்பது கடினமானதல்ல.

ஆதிக்கம் செலுத்தும் சிறு தொகையினரது கலாச்சாரம், மொழி, வாழ்க்கை முறை, உடைநடை, பழக்க வழக்கம், எண்ணம் சிந்தனை என்பன ஆளப்படும் பெருந்தொகையானோரது மொழி, கலாச்சாரம், வாழ்க்கை முறை, உடை நடை பழக்க வழக்கம், எண்ணம் சிந்தனை என்பவற்றிலிருந்தும் வேறுபட்டவை.

பொருளாதார ரீதியாக செல்வந்தராயுள்ள சிறு தொகையினர் பொருளாதார அரசியல் சிறப்புரிமைகள் உட்பட அனைத்து சிறப்புரிமைகளையும் அனுபவித்தனர். அவர்கள் ஆங்கில மொழியையே பேசினர். அவர்களுடைய பிள்ளைகள் றோயல், சென்ற் தோமஸ், சென்ற் பிரிஜட், பிஷொப், ஆனந்தா ஆகிய முதல் தர பாடசாலைகளுக்கே சென்றனர். கிரிக்கட் டென்னிஸ், றகர் என்பனவே அவர்களுடைய விளையாட்டாகும். அவர்கள் சகல வசதிகளும் கொண்ட மாடமாளிகைகளில் வாழ்ந்தனர். உயர்ரக வாகனங்களில் பயணம் செய்தனர். பெருந்தெருக்கள் இவர்களுக்காகவே அமைக்கப பட்டன. முதல் தர பாடசாலை, முதல்தர ஹோட்டல், முதல்தர மருத்துவ மனை, முதல் தர சந்தைகள் இவை அனைத்தும் இவர்கள் நன்மைக்காகவே கட்டப்பட்டன. நாட்டின் அனைத்தும் தமது நன்மைக்காகவே நிர்மாணிக்கப் பட்டுள்ளதாக இவர்கள் எண்ணினர், செயல்பட்டனர்.

ஆனால் சனத்தொகையில் மிகப் பெருந்தொகையினரது நிலமை எத்தகையது? அவர்களது மொழி, வாழ்க்கை முறை, உடைநடை, வீடு, உணவுபானம், எண்ணங்கள் அவற்றைவிட வேறுபட்டவை. இவற்றுக்கு எவவித முகக்கியத்துவமும் வழங்கப்படவில்லை.

இவர்கள் தாய் மொழியையே பேசினர். இவர்களுடைய பிள்ளைகள் வசதிகள் அற்ற பாடசாலைகளுக்கே சென்றனர். உதைபந்து, வலைப்பந்து, எல்லே என்பனவே இவர்களது விளையாட்டுக்கள். எவ்வித வசதியுமற்ற வீடுகளிலேயே இவர்கள் வாழ்ந்தனர். வதைகூடம் போன்ற பஸ்வண்டிகளிலேயே பயணம் செய்தனர். அரசாங்க நிறுவனங களானாலும் சரி தனியார் துறை நிறுவனங்களானாலும்சரி கீழ்த் தர கவனிப்பே இவர்களுக்கு கிடைத்தது. இந் நிலமை சிங்கள தமிழ் முஸ்லீம் ஆகிய சகல இனத்தவர்களுக்கும் பொதுவானது.

சமூக ரீதியான ஒடுக்குமுறை கூடுதலாக வெளிப்பட்டது. கல்வித் துறையிலேயேயாகும். "சுதந்திரம்" கிடைத்து நான்கு தசாப்தங்கள் ஆகியும் கல்வி முறையில் அடிப்படை மாற்றம் ஏற்படவில்லை. இலவச கல்வி மூலமாக ஒருவகை மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தபோதிலும் உள்ளடக்கத்தில் நிலவிய சிறப்புரிமை பெற்ற பகுதியினரின் அவசியங்களை பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கல் என்பதில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்ததாக காண முடியவில்லை.

எமது கல்வி முறை பிரதானமாக எழுதுவினைஞர் போன்ற சேவை அவசியங்களை பூர்த்தி செய்வதை கருத்தில் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது. தொழில் துறை தகமைகளை வழங்குவதற்காக உருவாக்கப்படவில்லை. ஒருவர் 10-12 வருடங்கள் கல்விகற்று படிப்பை முடித்துக் கொண்டு தொழில் தேடிச் செல்லும் போது தகைமைகள் எதுவுமே இல்லை. கல்வி மட்டத்திற்கு தகுந்த தொழிலைத் தேடுவதில் இடர் ஏற்படுவது இதன் விளைவுகளில் ஒன்றாகும். தொழில்துறை கல்வி வழங்கப்பட்டிருந்தால் தொழில் துறை அற்ற கல்வியுடன் தொழிலைத் தேடுவதை விட இருந்த வாய்ப்புகள் மத்தியிலே இலகுவாக இருந்திருக்கும். ஆனால் எமது கல்வி முறையின் கதவு திறக்கப்பட்டிருந்தது எழுதுவினைஞர் ஆசிரியர் ஆகிய தொழில்களுக்கேயாகும். ஆனால் படிப்பை முடித்துக்கொண்டு தொழிலை நாடுபவர்கள் அனைவரையும் இத்துறைகளால் உறிஞ்சிக் கொள்ள முடியவில்லை. தொழில் துறைத் தகமைகளை வழங்கும் கல்வி முறையாக இருந்திருந்தால் வேலை இல்லாத் திண்டாட்டத்திற்கு தீர்வு கிடைத்திருக்கும் என்பது மட்டுமேயாகும். பொருளாதார மட்டத்திற்கு ஏற்ப இவ்வாய்ப்புகள் மட்டுப்படும் என்பதை நாம் மறக்கக் கூடாது.

கல்வி முறை தொழிற் பிரச்சனைக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றபோதிலும் தொழில் பிரதானமாக பொருளாதாரப் பிரச்சனையாகும். சமூகரீதியாக கல்வி முறையில் உள்ள பெரும் பிரச்சனை கல்வி வசதிகள் துண்டிக்கப்படுவதும் சமசந்தர்ப்பம் இல்லாமல் போவதும் ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற சேவை வசதிகள் துண்டிக்கப்படுவது பொருளாதார விருத்தி இல்லாமையின் தவிர்க்க முடியாத விளைவேயாகும். கல்விக்காக அரசாங்கம் செய்யும் செலவை, அதிகரிக்கும் மாணவர் தொகையுடனும் அவசியங்களுடனும் எடுத்துப்பார்க்கும்போது படிப்படியாக குறைந்து செல்லும் போக்கை அவதானிக்க கூடியதாகவுள்ளது. அரசாங்க செலவு செய்கின்ற விகிதாசாரத்தில் அவ்வளவு பெரும் வித்தியாசம் ஏற்படாத போதிலும் விலை அதிகரிப்புடன் ஒப்பு நோக்குகின்றபோது அரசாங்கம் செலவு செய்யும் தொகை குறைந்துள்ளது. அரசாங்கம் தான் சுமக்க வேண்டிய பாரத்தை குறைத்து விசேடமாக பெற்றோர் மீது அப்பாரத்தை சுமத்தியுள்ளது. கல்வி பாரத்தை பெற்றோர்கள் பெருமளவில் சுமக்க நேரிட்டதன் விளைவாக மேல் தர பாடசாலைகளுக்கும் கீழ்த்தர பாடசாலைகளுக்கும் இடையே நிலவிய வேறுபாடு மேலும் அதிகரித்துள்ளது. செல்வந்த பெற்றோரால் தமது பிள்ளைகள் செல்லும் பாடசாலையை முன்னேற்ற பெரும் தொகைப் பணத்தை செலவு செய்ய முடியும். ஆனால் வறிய பெற்றோரால் அவ்வாறு செய்ய முடியாது. இது தவிர அரசாங்கத்தின் செலவிலும் கூடுதலான தொகை மேல்தர பாடசாலைகளுக்கே ஒதுக்கப்பட்டது. இவை அனைத்தினதும் பெறுபேறாக கல்வியிலும் வர்க்க வேறுபாடு அதிகரித்தது.

பொருளாதாரத்தைப் போன்றே கல்வியிலும் சமசந்தர்ப்பத்தை காணமுடியவில்லை. இச் சமமற்ற தன்மையினால் மாணவ சந்ததியினர் மத்தியிலும் தவிர்க்க முடியாதவாறு சலுகை பெற்ற மாணவர்கள், சலுகை ஏதுமற்ற இலட்சக் கணக்கான மாணவ சந்ததியினர் என இரு பகுதிகள் இருப்பதை காணக் கூடியதாயுள்ளது. முதலாவது பகுதியினருக்கு படிப்பை முடித்த பின்னர் வேண்டிய அளவு தொழில் வாய்ப்புக்கள், சமுதாயத்தில் முதல் தர அந்தஸ்து கிடைப்பதோடு இரண்டாவது பகுதியினருக்கு வேலை இல்லாத் திண்டாட்டமும் சமுதாயத்தில் இரண்டாம் தர அந்தஸ்துமே உரிமையாக்கப்பட்டுள்ளன.

சாதாரண பாடசாலை ஒன்றில் கல்விகற்று பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறுகின்ற இரண்டாவது பகுதியைச் சார்ந்த ஒருவரைவிட முதலாவது பகுதியைச் சார்ந்த பல்கலைகழக கல்வியை பெறமுடியாத ஒருவருக்குக்கூட நல்ல தொழிலும் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தும் முயற்சி ஏதும் இன்றிக் கிடைக்கிறது.

இவ்வாறான சமூக வேறுபாடுகள் இரண்டாவதாக குறிப்பிட்ட பகுதியினர் மத்தியிலே நிலவும் சமுதாயத்தைப் பற்றிய விரக்தியும்வைரமும் ஏற்படுவதற்கான ஒரு காரணியாகும். இவ் அநியாயங்களை இல்லாதொழிக்க ஆட்சியாளரால் முடியவில்லை. இல்லாதொழிக்கும் அவசியம் இருந்ததாக கூறுவதும் கடினமாகும். விசேடமாக 1977க்கு பின்னரான காலத்தில் ஆட்சியாளர் செயல்பட்டது இவ் வேறுபாட்டை இல்லாதொழிப்பதற்காக அல்ல. ஆகக் குறைந்தது இவ் இடைவெளியை குறைக்கக் கூட நடவடிக்கை எடுக்கவில்லை. இவ் இடைவெளியை கூட்டவே செயல்பட்டனர். அவர்களுடைய கல்விச் சீர்திருத்தம் அதற்கான ஒன்றேயாகும். கல்வி வெள்ளை அறிக்கையும் தனியார் மருத்துவக்கல்லூரியும் இவ் இடத்தில் முக்கிய அடையாளமாகும்.

இவ்வாறாக சமமற்ற தன்மை அதிகரிக்கும்போதும் தொழில் பற்றிய கூடுதலான எதிர்பார்ப்பு உயர்கல்வியைப் பெறுவதிலேயே தங்கியிருந்தது. உயர் கல்வியைப் பெறுவதற்காக கடும்போட்டி நிலவியது. இப் போட்டியில் வெற்றிபெறுவதற்கு பாடசாலைக் கல்வி எவ்விதத்திலும் போதியதாக இருக்கவில்லை. தனிப்பட்ட வகுப்புகளுக்கு டியூஷன் செல்லாமல் எவராலும் பரீட்சையில் சித்தி அடைய முடியாது என்னும் நிலமையே காணப்பட்டது. அவ்வாறாக பரீட்சையில் சித்தி பெற்றாலும் பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவதற்கும் வாய்புகள் இருக்கவில்லை.

உயர்கல்வியைப் பெற விரும்புவோர் தொகை மென்மேலும் அதிகரித்த போதிலும் அதற்குத் தேவையான வாய்ப்புகளோ வசதிகளோ அதிகரிக்கவில்லை. பொருளாதார அபிவிருத்தி இல்லாத காரணத்தால் அவ்வாறு செய்யவும் முடியவில்லை. உயர்கல்விக்கான வரம் கிடைக்காத வறிய மற்றும் அனேக மத்திய தரவர்க்க குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்கு திறந்த பல்கலைக் கழகம் மூலமாகவோ வெளி நாடுகளில் கற்பதன் மூலமாகவோ உயர்கல்வியைப் பெறும் ஆற்றல் இருக்கவில்லை.

ஆனால் ஆட்சியாளர்கள் தனியார் மருத்துவக் கல்லூரி போன்றவை மூலமாக செல்வந்தர் வகுப்பைச் சார்ந்த பிள்ளைகள். உயர் கல்வியை பெறும் வரம் கிடைக்கக் கூடியவாறு செயல்பட்டனர். பிற் காலத்தில் இடம் பெற்ற மாணவர் ஆர்ப்பாட்டங்களுக்கான பிரதான காரணமாக விருந்தது இவ்வாறாக ஏற்படுத்தப்பட்ட தனியார் மருத்துவக் கல்லூரியாகும்.

1987ல் பல்கலைக் கழக அனுமதிக்கான தகுதி பெற்றோர் 31,079 ஆகும். ஆனால் 6143 பேர் மட்டுமே பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப் பட்டனர். அதாவது தகமை பெற்றோரில் 20% வீதத்திற்கும் குறைவாகும். இது 1986ல் அனுமதிக்கப்பட்ட 6208 பேரையும் விட குறைவாகும். 1988ல் தகமை பெற்றோர் 34,490ஆகும். ஆனால் பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்பட்டோர் அவற்றில் 4636 பேரேயாகும். அதாவது 18.7% வீதம் மட்டுமே. இது வீத ரீதியாக 1987 ஐயும் விட குறைவாகும். இதிலும் கூடுதலாக வறிய குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்கே அநீதி இழைக்கப்பட்டது.

கல்வியில் நிலவிய இவ் வேறுபாடு உழைப்புப்படையில் இணையவிருந்த மாணவர் சந்ததியின் மத்தியிலே பகைமை உணர்வை தோற்றுவித்தது. இவ் வேறுபாட்டுக்கு எதிராக தோன்றிய பகைமை உணர்வை 1988/89 ல் இடம் பெற்ற மாணவர் ஆர்ப்பாட்டங்களின்போது நன்றாக சுருக்கிய ஒரு கோஷத்தின் மூலமாக காணலாம். 'கொழும்புக்கு கிரி (பால்) எங்களுக்கு கெக்கிரி (வெள்ளரிக்காய்)' என்பதே இக் கோஷமாகும். இது கல்வியில் நிலவிய வர்க்க வேறுபாட்டை நன்றாக எடுத்துக் காட்டுகின்றது.

தொடரும்

# வேலிகள்...

பயங்களோ? சுரேஷ் அவளை நாடிப் போனன்.

"நளினி உங்கட விஞ்ஞானக் கொப்பியை ஒருக்காய் தாறிங்களா எழுதிப்போட்டு தாரேன்" என்று கேட்டான்.

"தாரேன்" என்று எழும்பி வந்தாள்.

வகுப்பறையில் இருவர் மட்டுமே இருந்தார்கள் கட்டிட நீள இருபக்கத்திற்கும் 'சிலிங்' தடுப்புக்கள் வைத்து வகுப்புக்கள் பிரிக்கப்பட்டிருந்தன. அக் கட்டிடம் நாற்சதுர அமைப்பில் அமைந்திருந்தது. 5ம் வகுப்பு வரையில் சிறிது தள்ளி நீளமண்டபமாக வேறொரு கட்டிடம் இருந்தது. நாற்சதுரத்தின் ஒருபக்கம் யன்னல்களைக் கொண்டதாக அமைக்கப்பட்ட அறைகளாகவிருந்தன. ஒபிஸ் விஞ்ஞான ஆய்வுகூடம், சிறிய லைபிரரி மற்ற பகுதி முழுதும் அரைச்சுவருடன் திறந்த அமைப்பு கிரவுண்ட்ஸ் பக்கமாக அவர்களுடைய வகுப்பு இருந்தது. நடுப்பகுதியில், வாழை, செவ்வந்தி, கனகாம்பரம் போன்ற மரங்கள் வைக்கப்பட்டிருந்தன. முன்று தண்ணீர் பைப்களும் அமைக்கப்பட்டிருந்தன.

கொப்பியை கொடுத்துவிட்டு சுவர்கட்டிலே கையை ஊன்றி வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கொப்பியை பிரித்தான். அழகான முத்தெழுத்துக்கள் தன்னுடைய பிரிஸ்கிரிப்சன் எழுத்துக்களை ஒப்பிட்டுப்பார்த்தான் அவளும் அழகாய் தானிருந்தாள். பெருமுச்சு வந்தது.

"நளினி உங்களிட்ட ஒன்று கேட்பேன் கோவிக்க மாட்டீங்களே" என்று கேட்டான்.

ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

"முத்துவை தெரியும் தானே!" என்று கேட்டான் 'ம்' என்றாள்.

நேரிடையாக விசயத்திற்கு வந்தான்

"உங்கட கையை பிடித்து இழுத்தவனா?"

"இல்லை" என்றாள்

"உங்கப்பா அப்படித்தான் சொன்னவர்"

வெறுப்புடன் சிரித்தான். அங்குள்ள பெண்களுக்கு கூட்டம் எதுவும் தெரியாது. படிப்பை நிறுத்தினால் நெசவு வேலைக்கு போய் வருவார்கள் அல்லது மகளிர் சங்கம் ஒன்றை நிறுவ போராடி வரும் வனஜா அக்காவிடம் தையல், கைவேலை பழக போவார்கள்.

கட்டினால் சமையல், குழந்தை குட்டி என்று அப்படியே அமுங்கி கிழவியாகி உதிர்ந்து விடுவார்கள்.

கணிசமானவர்கள் பள்ளிக்கூடம். போய்வந்தாலும் O/L சாதாரண பிரிவை பாஸ் பண்ணியவர்கள் 1 வீதமா[illegible] இருப்பார்கள். வேலை பார்த்திருந்தால் வெளியுலகம் சிறிதாவது புரிந்திருக்கும். ஆண் மனோபாவமும் மோசம். வேலை பார்த்த சிலரையும் முடிச்ச பிறகு 'வீட்டிலே இரு' என்று நிபந்தனைகள் போட்டிருக்கிறார்கள் அவன் வகுப்பு சுகுணனின் தாய் ரீச்சராய்யிருந்தவர். வீட்டிலேயிருக்கிறா .

"என்னம் கூடாம பேசினவனா? "

தொடர்ந்து கேட்டான்.

"இல்லையே!" என்றாள்

"தண்ணி கேட்டவனா?" சுரேஷ்

ஓம் என்று தலையை ஆட்டினாள்.

தொடரும்.

---

## சங்கவி...

போலித்தனமாகத்தான் படுகிறது. இசையமைப்புக் கூட மிக மிகச் சாதாரணம் பாடல் வரிகள் ஓரிரண்டு மிக மோசம்.. "இழப்பின்றி நம் வாழ்வில் பிழைப்பில்லையே!? என்றவரி என்ன கருத்து கொடுக்கிறது? ஈழத்தை நினைத்துப் பாடும் பாடல்கள் அதற்குரிய வகையில் இசையிலும் கருத்திலும் அழுத்தமாக இருக்க வேண்டும் இல்லையேல் குளிக்கப் போய் சேறு பூசிய கதையாகி விடும். முழுப் பாடலும் நாகூர் ஹனிபாவின் பாடலை ஞாபகப்படுத்துவது போல பாடப்படுகிறது.

பாடல் ஏழு: "ஆத்தீ... ஆத்தங்கரையோரம்...." பாடல் வரிகளும் இசையமைப்பும் அப்படியே ஒரு தமிழ் சினிமா கிராம கனவுக் காட்சிக்கு பொருந்துகிறது. பாடும் கௌரி பாஸ்கரன் ஏற்கனவே இங்குள்ள மேடைகளில் பிரபல்யம் பெற்ற பாடகி. இந்தப் பாடலில் கௌரி உச்சரிப்பில் காட்டும் தெளிவும், குழைவும் பாட்டின் கருத்துக்கேற்ப நன்றாகவே இருக்கிறது ரசிக்க முடிகிறது. ஆனல் கௌரியுடன் கூடப்பாடும் ஆணின் குரல், மன்னிக்கவும், மாற்றீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

பாடல் எட்டு: விண்மீன்கள் தரைமீது.. மேடைகளில் பாடும்போது திறமையாகப் பாடும் சுகல்யா ரகுநாதன் தனித்துப்பாடுகிறார் இசையமைப்பு பரவாயில்லை.

பாடல் ஒன்பது: "சங்கீதக்குயில் கூவுது..." இதுவும் ஒரு டூயட் பாடல் இசையமைப்பு இடையிடையே சினிமாத்தனத்திலிருந்து இறங்கி மேடைப்பாடல் போல வந்து போகிறது. ஆனாலும் "வாவ்.." எனச் சொல்ல வைக்குமளவிற்கு பாடியிருக்கும் பெண்குரல் ராணி சங்கர். இப்பாடலில் இவர் குரல் அற்புதம் கூடப் பாடும் சுந்தரும் ஏற்ற வகையில் பாடுகிறார். ரசிக்க முடிகிறது.

பாடல் பத்து: "நாடோடிப் பாட்டு.." இதுதான் இந்த இசைத்தட்டின் சிகரம் போன்ற பாட்டு என்று அடித்துச் சொல்லலாம். ஆனந்த் பிரசாத் பாடும் தனிப்பாடல் இது! இசை குறைந்து பாடகரின் குரலுக்கு முக்கியத்துவம் தருவது போலமைந்த இப்பாடல் முழுவதும் பிரசாத் தன் குரல் வளத்தால் குரலுக்கு சமன்படுத்ததக்க விதத்தில் பாடி அசத்தியிருக்கிறார். குரலில் அவர் தரும் அசைவுகளும் பாட்டின் கருத்துக்கேற்ப குரலின் காட்டும் பாவங்களும் பிரசாத்திடமிருந்து பல பாடகர்கள் கற்றுக்கொள்ள நிறைய விடயமிருப்பதைக் காட்டுகிறது. இங்குள்ள பாடகர்கள் வரிசையிலும் பிரசாத் தனித்துக் தென்படுகிறார் என்றால் மிகையில்லை.

ஆக இப்பேர்ப்பட்ட முயற்சியொன்றை ஆரம்பித்த கிரிதரன் குணரட்ணம் மிகவும் பாராட்டப் படவேண்டிய இளங்கலைஞன். இவரது முயற்சி தமிழ் சினிமாவை 'துரோணராக' நினைத்திருந்தாலும் கூட இதனை அதனுடன் ஒப்பிடுவது பொருத்தமற்றது காலப்போக்கில் எமக்கென்றொரு தனித்துவத்தை நிலைகாட்டும் வகையில் திட்டமிட்டு இவர் போன்றோர் செயல்படுவது எமது வாழ்க்கை முறையை மேலும் தரப்படுத்தும்.

நல்ல சங்கீதமும் நல்ல கவியும் சம அளவில் இணைந்து வந்தால்தான் நல்ல சங்கவியைக் காணமுடியும் இதைக் கவனத்தில் எடுத்தால் இப்பாராட்டுக்குரிய முயற்சியை செய்தவர்கள் மேலும் சிறப்புப் பெறுவார்கள். குழந்தை பிறந்ததும் எழுந்து நடந்துவிடுவதில்லை என்பது உண்மைதான். ஆனல் இம்முயற்சி குழந்தைதனமானதல்ல. சிடிப் பெண்ணை' சங்கவி' பருவமடைந்து அழகுராணிப் போட்டிக்காக போட்டி போட்டுக்கொண்டு மேடையில் நிற்கும் கன்னி!

எம்மவர்கள் சாதிக்கிறார்கள் என்பதில் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கிறது.

(அடுத்த இதழில் மூர்த்தி எழுதும் "சிடியே.. நேற்றுப் பிறந்தவளே...." என்று கட்டுரை இடம் பெறும்)

# ஏ.ஆர்.கே மார்க்கட்

இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
பால் பழங்கள், உடன் மரக்கறி
வகைகள், இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் ...

தமிழ், ஹிந்தி வீடியோப்
படங்களின் ஒரிஜினல் பிரதிகளை
வாடகைக்கும் விற்பனைக்கும்
பெறலாம்

CD, Audio மலிவு விலையில்

# A.R. K MARKET

31-35 St.Dennis Dr
(Don Mills/Eglinton)
(416) 421 3429




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழம் ஒரு தொடர்கதை 2

## அத்தியாயம் 20

சின்னத்தம்பி வேலாயுதம்

### ''ரோ'' (R.A.W) Research and analysis wing

கடந்த பதினைந்து வருடகாலங்களில் இலங்கை இந்திய உறவு சீர் கெடுவதற்கும் தமிழர் போராட்டம் தீவிரமடைவதற்கும் இருதரப்பு அரசியல்வாதிகள் மட்டுமன்றி இந்திய உளவு ஸ்தாபன "ரோ" வும் மிக முக்கிய பங்கை வகித்திருக்கிறது. 1970 களில் "ரோ" என்றால் என்ன என்று கேட்கக் கூடிய மக்கள் இன்று "ரோ" பற்றி ஒரு தடவையேனும் உச்சரிக்காத தமிழர்கள் இல்லையெனுமளவுக்கு முக்கியமடைந்துள்ளது.

அமெரிக்க சீ.ஐ.ஏ. சோவியத்தின் கே.ஜீ.பி பிரித்தானிய பிரெஞ்சு உளவு நிறுவனங்கள் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ என்பனவெல்லாம் பெயர் பெற்ற உளவு நிறுவனங்களாகும். அந்த வரிசையில் இன்று "ரோ" முன்னணியில் இருக்கிறது.

ஒரு நாட்டின் பிரதான அரசியற் போக்கையும் ஆட்சியாளர்களையும் தர்மசங்கடங்களில் மாட்டி விடுதல், ஆட்சிக் கவிழ்ப்பை செய்தல், ஆட்சியாளருக்குள் அல்லது கட்சிக்குள் உள்ள உள் முரண்பாடுகளை உளவு பார்த்து பிரச்சனைகளை வளர்த்துவிடுதல், ஆட்சியாளர்களுக்குத் தவறான தகவல்களை வழங்கி பிழையான முடிவுகளை எடுக்கச் செய்தல் என்பன உளவு நிறுவனங்களைப் பொறுத்தவரை மிகவும் பாதகமான அம்சங்களாகும்.

அமெரிக்க சீ.ஐ.ஏ உள்ளும் வெளியேயும் நடத்திய ஆட்சிக் கவிழ்ப்புகள் ஒரு வகையானது. ஸ்ராலின் காலத்து சோவியத்தின் கே.ஜீ.பீ இன்னொரு வகையானது மக்களுக்கு உளவு நிறுவனம் பற்றிய பயப் பிராந்தி காரணமாகக் கம்யூனிசம் பற்றித் தவறான அபிப்பிராயம் கொண்டனர் எனப்படுகிறது. இவ்வாறு வெவ்வேறு காலகட்டங்களில் ஜேர்மன், பிரஞ்சு ஆங்கில உளவு நிறுவனங்களின் செயற்பாடுகளை விளக்க ஆயிரக்கணக்கான ஆங்கில நூல்கள் உள்ளன. இதை விரிவாக அறிவது இங்கு எமது நோக்கமல்ல. "ரோ" பற்றிய விபரங்களைத்தமிழ் மக்கள் அறிந்து வைத்தல் மிக அவசியமென்பதில் அதுபற்றி விரிவாகப் பார்ப்போம்.

"ரோ" வைப்பற்றி நாம் விரிவாக ஆராய்ந்து பார்க்கும் போது இலங்கை இந்திய உறவுகள் பற்றி மீண்டும் பார்க்க முடியுமென்பதுடன் தமிழர் போராட்டம் பற்றியும் பார்க்கலாம் முதலில் "ரோ" வின் பூர்வீகம் பற்றிக் கவனிப்போம்.

1952/53களில் IB எனப்பட்ட Intelligence Bureau 1968 லிருந்து "ரோ" வாக மாற்றம் பெற்றதை முன்பு குறிப்பிட்டேன். இந்தியாவை இராணுவ மட்டத்தில் வளர்த் தெடுக்கவும் இந்தியாவுள்ளும் அயலிலும் மேற்குலகம் புகுந்து விளையாடுவதைக் கங்காணிக்கவும் "ரோ" உருவாக்கப்பட்டது. இந்திரா காந்தியின் இந்த எண்ணங்களுக்குச் செயல் உருவம் கொடுத்தவர் தான் நவ இந்தியாவின் மிகச்சிறப்புகள் பொருந்திய உளவு நிபுணர் ரமேஸ்வர் நாத் காவ் (R.N.KAO) ஆவார்.

பாகிஸ்தானில் பிறந்து 1947ல் நாடு பிரிந்தபோது காஷ்மீரில் குடியேறிய R.N.KAO ஒரு பிராமணரும் நேருவுக்குத் தூரத்து உறவு முறையானவருமாவார். பிரிட்டிஷ் ராஜ்யாவிலிருந்து இந்தியா சுதந்திரமடைந்தபோது பிரிட்டிஷ் உளவு நிறுவனத்தின் சாதாரண உளவாளியாகவிருந்த இவர் IB ஆரம்பிக்கப்பட்டதும் மிக முக்கிய பதவியை பெற்றுக் கொண்டார். அதாவது இந்தியாவின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேருவின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். இதிலிருந்து நேரு குடும்பத்தின் மதிப்பையும், நம்பிக்கையும் பெற்றுக் கொண்டார். நேருவின் வெளிநாட்டு விஜயங்களுக்கெல்லாம் பாதுகாப்புப் பொறுப்பை கவனித்ததின் மூலம் வெளிநாட்டு உளவுத் துறைகள் பற்றிய அனுபவம் இந்தியாவில் "ரோ"வை வளர்த்தெடுக்க உதவியது.

250 உளவு நிபுணர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட "ரோ" இன்று வளர்ந்து ஆண்களும் , பெண்களுமாக ஏழாயிரத்துக்கும் எண்ணாயிரத்துக்குமிடையேயான உளவாளிகளையும் உள்ளேயும் வெளியேயும் 40 க்கு மேற்பட்ட அலுவலகங்களையும் கொண்டுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் 20 மில்லியன் இந்திய ரூபாய்களைச் செலவிட்ட "ரோ" இன்று 100 மில்லியன் இந்திய ரூபாய்களுக்கு மேல் செலவிடுகிறது.

ஆரம்பகாலத்தில் "ரோ" வின் உளவாளிகள் ராஜதந்திரிகள் என்ற போர்வையில் தான் அனுப்பப்படுவது வழமையாகும். பாகிஸ்தான், பிரான்ஸ் ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு அவ்விதமே அனுப்பியது. சீனாவை சிக்கிம், தீபெத் ஆகிய இடங்களிலிருந்து கண்காணித்தனர். ஆப்கானிஸ்தான், பர்மாவிலும் மத்திய கிழக்கில் பல நாடுகளிலும் "ரோ" வின் அலுவலகங்கள் இருந்தன. சர்வதேச ரீதியாக இன்று அமெரிக்காவில் வாஷிங்டனிலிருந்து ஐரோப்பிய நாடுகள், கிரெம்ளின் வரை "ரோ" வின் அலுவலகங்கள் வியாபித்துள்ளன.

"ரோ" வின் மிகப் பிரதான கடமைகளாக இந்தியாவின் உள்ளும், புறமும் அதன் புவியியல், பொருளாதார அரசியல் நிலைமைகளை உளவறிதலாகும். குறிப்பாக தென் ஆசியப் பிராந்தியம் மிக நுணுக்கமான அவதானிப்புக்கு உட்படுத்தப்படுகிறது. "ரோ" வின் அறிக்கைகளின் அடிப்படையில் பிரதமர் செயலகம் தமது உள்நாட்டு வெளியுறவு கொள்கைகளை வகுக்கின்றது.

"ரோ" அதன் தொடக்கத்திலிருந்து இன்றுவரை தொடர்ச்சியான வெற்றிகளைக் குவித்து வருவதாகவே கருதப்பட்டு வருகிறது. ஒரே ஒரு விடயத்தில்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டும் "றோ" வின் கணிப்பீடு தவறியுள்ளது எனப்படுகிறது. அதுதான் தமிழீழ விடுதலைப்புலிகள் விடயத்தில் "றோ" போட்ட கணக்காகும். இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் இலங்கையை வெற்றி கொண்ட போதிலும் தமிழர் பிரச்சனை தீர்க்கப்படாதவரை இலங்கை விவகாரம் "றோ" வுக்கு ஒரு சவாலாகவே இருந்து வரும். "றோ" வின் வெற்றிக்கு அதன் "மிக இரகசிய நடவடிக்கைகளே" காரணமெனலாம். உதாரணமாக ஒன்றை இங்கு குறிப்பிடப்படலாம். 1975 77 அவசர கால நிலையில் இந்த ஆட்சிக்கு முன்பு இந்தியாவின் முதலாவது அணு ஆயுத பரிசோதனையான "பூர்ணிமா" திட்டம் பற்றிய இரகசிய பாதுகாப்பு பொறுப்பு பிரதமர் இந்திராவினால் R.N.KAO விடம் ஒப்படைக்கப்பட்டது. விஞ்ஞானிகள் ஒரு குழுவினருடன் இன்னொரு குழுவினர் தொடர்புகளை ஏற்படுத்தாமல் கூட விடயங்கள் நடந்தன. அவ்வளவு இரகசியம் பாதுகாக்கப்பட்டது. அணு ஆயுதத்திற்கு தேவையான யூரேனியம் பம்பாயிலிருந்தும், புராலலிங் தொரம்போயிலும் fabrication ஹைதராபாத்திலும் Power reactor ராஜஸ்தானிலும் பரீட்சார்த்த breeder reactor சென்னைக்கு அண்மையிலும் செய்யப்பட்டு 18 மே 1974ல் 15 கிலோ நிறையுள்ள புளுத்தோனியக் குண்டு வெடிக்கப்பட்டது. இதிலே பொய்த் தகவல்களைப் பரப்பும் "றோ" வின் பிரிவு முக்கியமான வேலையைச் செய்தது.

இந்த அணு ஆயுதம் வெடித்து பரீட்சித்து முடியும் வரை மிக முக்கிய நான்கு நபர்களுக்கு மட்டுமே இந்த விடயம் தெரிந்திருந்தது. பிரதமர் இந்திரா, காவ், ஹொமி சேத்னு (இந்திய அணுசக்தி கமிஷனின் தலைவர்), கலாநிதி ராஜா ராமண்ணா (அணு ஆயுத பௌதிக பிரதம விஞ்ஞானி) ஆகியோரே அவர்கள். இந்த அணு ஆயுதப் பரிசோதனை அமெரிக்க, பாகிஸ்தான், சீனாவுக்கு ஒரு திடீர் அதிர்ச்சியைக் கொடுத்தது. ஏனென்றால் இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியா பலமுள்ள அரசு என்பதை நிரூபித்தது என்பதனாலேயே. இந்தியாவை உளவு பார்த்த வண்ணமுள்ள வெளிநாடுகளுக்கு கண்ணில் மண்ணைத் தூவி மேற்கூறிய விடயத்தை இந்தியா செய்து முடிப்பதற்கு "றோ" வின் பங்கு முக்கியமானதாகும்.

"றோ" 1977 முதல் 80 வரை மொரார்ஜி காலத்தில் சீரழிக்கப்பட்டது இங்கு முக்கியமாக நோக்கப்படவேண்டும் மொரார்ஜியின் அமெரிக்க உளவுகளால் அமெரிக்காவுக்கு "றோ" பற்றி உளவு அறிய வாய்ப்புகள் ஏற்பட்டதுடன் R.N காவை மொரார்ஜி பதவி நீக்கி றோவை பலவீனப்படுத்தி விட்டார். அதுமாத்திரமன்றி சில வெளிநாட்டு உளவு நிறுவனங்களுக்கான இந்திய உளவாளிகளும் றோவுக்குள் நியமனம் பெற்று "றோ" வைச் சீரழித்தனர். "றோ"வின் தமிழ் நாட்டு இயக்குனராகவிருந்த உன்னி கிருஷ்ணன் பின்னர் ஒரு சி.ஐ.ஏ. ஏஜண்ட் எனக் கைது செய்யப்பட்டார். இத்தகைய உளவு நிறுவனத்தை உளவு பார்க்கும் சந்தர்ப்பங்கள் அதிகரித்ததால் தான் தமிழ் இளைஞர்கள் போராட்டம் ஒரு அரசியல் சதுரங்கத்துள் அகப்படவேண்டி வந்தது. இவைகள் பற்றி இயக்கங்கள் பற்றி பார்க்கும் போது காணலாம்.

ஈழப் போராட்டத்தில் "றோ" வின் பங்கு பற்றித் தொடரும்.

# 'புலிகளை ஆதரி'போருக்காக....

***புலிகளை தாயகம் விமர்சிக்கிறது என்ற குற்றச்சாட்டை நிவர்த்திக்க முனிவர் படித்த சில பகுதிகள் புலிகளை ஆதரிப்போருக்காக தொடர்ந்து பிரசுரமாகும். இவ்வாரம் 15.3.94 உலகத்தமிழரிலிருந்து ஒரு பகுதி...***

## பெரிய முள்ளெல்லாம் எங்களை பாவம் பார்த்து போக வேண்டாம் எண்டு பிடிச்சு பிடிச்சு இழுக்குதுகள்...

ஒரு நாள் நானும் கப்டன் ரசனியும் உப்பு மூடைகள் தூக்கி வந்தோம். இரண்டு பேருக்கும் கழுத்துக்குள் உளுக்கி விட்டது. விக்கி விக்கி அழத் தொடங்கினோம். எங்களுக்கு எப்போதாவது ஏதாவது துன்பம் என்றால் சோதியாக்காவுக்கு அருகில் தான் இருப்போம். அன்றும் அதே மாதிரித் தான் கப்டன் ரசனி சொன்னாள். 'நாங்கள் துவக்கு எடுத்து ஆமியோட சண்டை பிடிக்க மட்டும் வந்தனாங்கள். இப்படி மூட்டை தூக்க வேணும், கிணறு வெட்ட வேணும் எண்டு தெரிஞ்சிருந்தால் வந்திருக்கவே மாட்டம்' என்றாள். அதற்கு நானும் 'ஓமடி, நானும் அப்படி நினைச்சுத் தான் வந்தனான்' என்றேன். எங்களின் இந்த உரையாடலை மேலே தொடராமல் இடைநிறுத்தினா சோதியா அக்கா. இஞ்ச நீங்கள் இரண்டு பேரும் ஆகச் சின்னப்பிள்ளைகள் மாதிரி கதைக்காதையுங்கோ. போராட்டம் எண்டா கஷ்டம் தான். கல்லும் முள்ளும் நிறைஞ்ச பாதையில போய்த் தான் நாங்கள் தமிழீழம் பிடிக்க வேணும் என்றார். நான் உடனே சொன்னேன்... ஓமக்கா நீங்க சொல்றது சரிதான். நாங்கள் முட்டை தூக்கப் போற ஒற்றையடிப்பாதையில குத்துற கல்லும் முள்ளும் எங்களோடையே சேர்ந்து வருகுது. அதோட பெரிய முள்ளெல்லாம் எங்களைப் பாவம் பார்த்து போக வேண்டாமென்று பிடிச்சு பிடிச்சு இழுக்குதுகள் என்றேன். உடனே சோதியாக்காவுக்கு கோபத்தில் முகம் சிவந்தது. நான் சீரியசாகக் கதைக்கிறன். நீ பகிடி விடுறாய். போ. எனக்கு முன்னாலை நிக்காதை என்றார். இல்லையக்கா இனிமேல் நான் இப்பிடிப் பகிடி விடமாட்டேன் எனக் கெஞ்சிய போது தொடர்ந்து எங்களுக்கு போராட்டத்தைப் பற்றி விளக்கமளித்தார்.

உதாரணமாக நாங்க வீட்ல இருக்கிற நேரம் பள்ளிக்கூடத்தில முதலாம் வகுப்பு படிச்சுப் போட்டு திடீரென்று பத்தாம் வகுப்புக்குப் போறதில்லை. படிப்படியாக ஒவ்வொரு வகுப்பாய் படிச்சு முன்னேறிப் போவம். அதே மாதிரித்தான் எங்கட போராட்டமும். இப்ப நடந்து போய் தலையில முட்டை தூக்கிறம். கொஞ்சக் காலத்தில ட்ராக்டரில் கொண்டு வருவம். இப்படியே நாங்கள் வளர்ச்சி அடைஞ்சு எங்கட தமிழீழத்தை அடைவம்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏமாற்றாதே.. ஏமாறாதே...

நிவேதிகா

பிற இனத்தவர்களால் ஏமாற்றப்படுவதை விட எம்மினத்தாலே நாம் ஏமாற்றம் அடைவதுதான் அதிகம். தமிழன் என்ற உணர்வாவது இவர்கள் இதயத்தில் இருக்குமா? நான் ஏமாற்றப் போவதும் தமிழன் தான் என்பதையும் இவர்கள் ஏன் நினைப்பதில்லை.

நம்பிக்கை என்ற பெயரில் ஒவ்வொரு நிமிடமும் வியர்வை சிந்தி இரவு பகலாய் உழைத்த பணத்தை கொடுத்து விட்டு ஏமாற்றத்தை சுமந்து கொண்டு இதயங்களின் சோகக்கதை எண்ணிலடங்கா. . என்றுமே இப்படி பிறரை ஏமாற்றி வாழலாம்" என ஏமாற்றுக்காரர்கள் எண்ணலாம்.

எம்மில் எத்தனைபேர் நேர்மையான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பிறரை ஏமாற்றுவதால் என்றோ ஒரு நாள் தான் அவமானப்படக்கூடும் என்பதை மறந்து போகின்றார்கள். மனிதர்களை ஏமாற்றலாம். ஆனால் என்றோ ஒரு நாள் சந்திக்கப்போகும் அந்த இறைவனையுமா?

பணத்தை கொடுத்துவிட்டு தான் எப்படி வஞ்சிக்கப்பட்டேன் என கூறும் இளைஞர் ஒருவரின் துயரக்கதையை கேட்போம் .

கனடா ஆசை யாரைத்தான் விட்டது. கனடாவுக்கு என்று நானும் வெளிக்கிட்டு விதிவசக்கால் ஜேர்மனியில் தொங்கிப்போனேன். புத்தகமும் பறிக்கப்பட கனடா பயணம் ஜேர்மனியில் நாலு வருடம் ஸ்தம்பித்துப்போயிச்சு. இதற்கிடையில் கனடா போகும் வழி எல்லாம் இறுகிப்போனது. என்னுடன் கூடயிருந்தவர் மூலம் அந்த ஏஜண்ட் அறிமுகமானார்.

கனடா அனுப்ப சுளையாய் ஆறுயிரம் கேட்டார். புலிக்கு காசு சேர்ப்பவர். நம்பிக்கையானவர் என்று சொல்லக் கேட்டேன். நம்பினேன். அகதிக்கு தந்த கூழையும் கஞ்சியையும் குடித்து கைச்செலவுக்கு தந்த 69 ஜேர்மன் மார்க்கை சிறுக சிறுக சேர்த்ததுடன் பன்றி பண்ணையில் பன்றிகளுடன் பன்றியாய் நின்று கிடைத்த பணமும் சேர்த்து ஆறுயிரம் மார்க் கொடுத்தேன்.

பூரித்துப் போனார் அந்த ஏஜண்ட். ஒன்று இரண்டு தரமல்ல எத்தனைதரமென்றாலும் கனடா அனுப்பிவைப்பதாயும் இதற்கு மேல் ஒரு சல்லிக்காசும் கேட்க மாட்டேன் என்றும் உறுதிமொழி சொன்னார். அதையும் நம்பினேன். புலிப்பொடியன் ஏமாற்றமாட்டான் என்று என் ரூம்மேட்டும் அடித்துச் சொன்னார். காசு கொடுத்தாச்சு இனிக் கனடா தான் என எண்ணி நானும் சொன்ன எல்லாவற்றையும் சத்திய வாக்காய் எடுத்தேன்.

மாதக்கணக்காய் ஒரு பேச்சு இல்லை. போன் அடிக்கால் "ஆள் என்ர அலுவலாய் தான் ஓடித்திரியுறார். வந்தால் சொல்வதாய்" யாரோ சொன்னார்கள். திடீரென்று ஒரு நாள் கப்பலில் அனுப்பப் போவதாயும் ஆயத்தமாகும்படியும் சொன்னார். ஆனால் கப்பல் என்னை விட்டு விட்டு சும்மா நின்றவர்களையெல்லாம் ஏற்றிக் கொண்டு கனடா வந்து விட்டது. பிறகு நாலைந்து மாதங்கள் பறந்தன. அலுப்பு கொடுத்ததில் புத்தகம் ஒன்று செய்து அவுஸ்த்ரியா போய் நானே டிக்கட் செய்து போகும்படி சொன்னார். டிக்கட்டுக்கு பணமும் தந்து என் தலையுடன் ஒரு புத்தகம் தந்தார். அது பெண்ணின் புத்தகம் என்று எனக்கு பட்டது. போனில் அதைச் சொன்னேன். அவர் இருக்கமாட்டார் தானே! இன்னொருவர் சொன்னார் "எங்களுக்கு படிப்பிக்கிறீரோ? பிடிபடவெண்டே நாங்க இதெல்லாம் செய்யுறம்? நீர் திரும்பினால் எங்களுக்குதானே ஐசே அலுப்பு! பயப்படாமல் போ அங்க எந்த பிரச்சனையும் வராது"

காசு அவங்களிடம்.. வேறு வழி? நம்பினேன். ஒஸ்ட்ரியா போய் அங்கு பிடிபட்டு. ஒரு ஒஸ்ட்ரியா சமுகசேவகர் உதவியுடன் போன் அடித்தேன் ஏஜண்டுக்கு. அப்படி ஒரு ஆள் இங்கு இல்லை. போனை வைத்துவிட்டார். சிறையில் முப்பத்தொரு நாட்கள் இருந்தேன். முடிவில் ஒரு நாள் விசா தந்து சிறையை திறந்து விட்டார்கள்.

ட்ரெயினில் சீட்டுக்கு கீழ் படுத்து மீண்டும் ஜேர்மனி வந்தேன். (இந்த அவலத்தை சொல்வதானால் ஒரு புத்தகமே எழுதலாம்). ஏஜண்டை தேடிப்போனேன். ஆள் இல்லை. பிரான்சில் என்று சொன்னார்கள். என் சோகத்தை கொட்டினேன். யாரும் இல்லை ஜேர்மனில் விசா முடிந்து போச்சுது. பிடிபட்டால் பிரச்சனை என்றேன். பரிதாபப்பட்டு தேத்தண்ணி தந்து அனுப்பினார்.

இன்னொரு நாள் போன் அடிக்காமல் ஏஜண்ட் வீட்டுக்கு போனேன். அப்பவும் ஆள் இல்லை (என்றார்கள்) சூரினும் புத்தகம் ஒன்று தந்தார்கள். என் சின்ன தம்பியின் கணக்கு கொப்பி போல அங்கு இங்கு கிழிந்திருந்தது. அதிலொரு இலங்கை தலையை ஒட்டி பழகியிருந்தார்கள். "இது எனக்கு பிரயோசனமில்லை. அண்ணன் புத்தகம் சரியில்லை" என்றேன். இது தான் அவர் தந்தது. உம்மால் அவருக்கு நீர் கொடுத்ததிலும் மேலால் செலவாம். பரிதாபப்பட்டு தான் இந்த புத்தகத்தையாவது தந்தார் என்றனர்.

எனக்கு கணக்கு தெரிந்தது நல்லாப் போயிட்டது. கூட்டிப்பார்த்தேன். இரண்டாயிரத்து மேல் செலவு வந்திருக்காது என தெரிந்தது. இனி என்ன செய்வது? விசா இல்லை, காசு இல்லை, எங்கேயாவது போக வேண்டும். இந்த புத்தகத்தை தலைமாற்றி நோர்வே போகச் சொல்லி கதவை அடித்து பூட்டினார்கள் கழுத்தை பிடித்து தள்ளியமாதிரி.

நண்பர்கள் சிலரின் பண உதவியுடன் அப்புத்தகத்தை தலையை மாற்றி றெயின் டிக்கட்டும் எடுத்து நோர்வே நோக்கி அரைக்கால் மனதுடன் பயணமானேன். லூயிபேக்கில் பிடிபட்டேன். நான் ஜேர்மனியிலிருக்க முடியாது மீண்டும் அகதியாய் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்னார்கள். 64 நாட்கள் சிறை வைத்தனர். நான் தேடிப்பிடித்த வழக்கறிஞர் பல சிரமப்பட்டு எனது பழைய தகவல்களை எடுத்தார்... அந்நேரம் இலங்கையில் பதட்டம். மனிதாபிமானமாய் சொற்பநாள் விசா தருவதாயும் இலங்கையில் நல்ல சூழல் வரும் போது நாட்டுக்கு அனுப்புவதாயும் பயமுறுத்தி எனது சொந்த புத்தகத்தை கையில் தந்தார்கள்.

*36ம் பக்கம் பார்க்க...*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கல்லாநிதியும் பட்டரிகைகளும்

அறுஞர் போராசிரியர் கல்லாநிதி கியூரியஸ் ஜி

சமீபத்தில் ஒரு புதிய ஆங்கிலச் சஞ்சிகை ஒன்றைப் பார்க்க நேர்ந்தது. இது தொழில் நுட்பம் சம்பந்தமானது. வழமையான சஞ்சிகைகள் போலன்றி, வித்தியாசமான அமைப்பு, விடயங்களைத் தாங்கி வருகிறது. WIRED என்பது தான் அதன் பெயர். உருவ அமைப்பு முதல் கொண்டு விடயங்கள் வரை வித்தியாசமாய்... தாயகம் மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்களேன். Eye சஞ்சிகையின் வர்ணனைப்படி a slick, ultrahip computer lifestyle magazine. இதன் கருத்து என்ன என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

விளம்பரங்கள் கூட வித்தியாசமான வடிவமைப்பில்.. சந்தா விபரத்தில்.... தனியாருக்கு மலிவு விலை... மலிவு என்றால் ஒரு இதழ் ஆறு டொலர்கள். நிறுவனங்களுக்கு இரு மடங்கு. காரணம்... நிறுவனங்கள் வாங்குகின்ற சஞ்சிகையை பலர் வாசிப்பதால், நிறுவனங்களுக்கும் தனியார்களுக்கும் ஒரே விலை அறவிடுவது மகாபாவம் என்ற மாதிரி. . it would be unfair for individual readers to subsidize corporate purchasers என்றிருக்கிறது.

இப்படி பார்த்தால்.. தமிழ் நாட்டில் சில அகதிமுகாம்களுக்கு அனுப்பப்படுகின்ற தாயகம் குறைந்தது 300 பேரால் வாசிக்கப்படுகிறது.

ஜேர்மனியில் சில இடங்களில் முழு நகரத்தில் உள்ள தமிழர்களுக்கும் ஒரே ஒரு தாயகம் சுற்றுலா வரும். நூறு மைல் காரில் போய் சந்தா சேர்த்து அனுப்புகின்ற நல்ல உள்ளங்களும் தாயகத்திற்கு உண்டு. கிராமப்புறத்தில் இருப்பவர் காரில் போய் நகரத்தில் நண்பர்களிடம் தாயகம் வாங்கி வந்து படிப்பதும் உண்டு. சும்மா பம்மாத்து என்று நினைக்காதீர்கள். உண்மை. தாயகம் வாசகர்கள் பற்றி ஒரு காவியமே எழுதலாம்... இன்னொரு தடவை!

★ ★

தற்போது முழு உலகையும் சுற்றுகளால் சுற்றி ஒரு இடத்திலிருந்து உலகின் எந்த இடத்துடனும் தொடர்பு கொண்டு எந்த விடயத்தையும் அறிந்து கொள்கின்ற ஒரு வலைப்பின்னல் உருவாக்குவது பற்றிய பேச்சு அடிபடுகிறது. நீங்களும் Information Superhighway பற்றி வாசித்திருக்கக் கூடும். இந்த வலைப்பின்னல் Internet என்று கூறப்படும். இது பற்றி விஞ்ஞானப்பிரகாசனிடம் கேட்டுப் பாருங்கள். இந்த வலைப்பின்னலுடனான தொடர்புகளை ஏற்படுத்துவதை, அதாவது வயர்களைக் கொழுவுவது... Wired எனலாம். இந்த சஞ்சிகையின் சந்தா விபரத்தில் கூட முக்கியமாக e mail எனப்படும் கம்பியூட்டர் மூலமாக கடிதங்கள் அனுப்பக்கூடிய விலாசம் கேட்கிறார்கள் என்றால் பாருங்களேன். வாசகர் கடிதங்களில் வாசகர்களின் இந்த விலாசம் இருக்கும். தேவையெனில் நீங்கள் தொடர்பு கொள்ளலாம். நம்ம பத்திரிகைகளின் வாசகர் கடிதங்கள் மாதிரி "பெ.சொ.ப (பெயர் சொல்ல பயந்தவன்)" 'உ.வீ.பிள்ளை (உள் வீட்டுப் பிள்ளை)' அல்ல...

அத்தோடு நம்ம மாதிரி.. மலர், இதழ் எல்லாம் கிடையாது. கம்பியூட்டர் software மாதிரி... 2.04 என்றிருக்கும்.

★ ★

அதில் ஒரு துணுக்குச் செய்தி..

லண்டனில் பெரிய பத்திரிகையான அசோசியேட்டட் நியூஸ்பேப்பர் நிறுவனம் பரீட்சார்த்த முயற்சி ஒன்றை செய்து வருகிறது. பத்திரிகைகளை காகிதத்தில் அடிக்காமல் ஒரு பட்டரியில் இயங்கும், கைக்கடக்கமான சிறு கம்பியூட்டரில் உருவாக்குகிறார்கள். நான்கு றாத்தல் நிறையான 'நியூஸ் பொக்ஸ்' எனப்படும் இந்த கருவி புத்தக வடிவிலானது. இதில் ஒரு அன்டெனா இருக்கும். வானொலி அலைகளில் தினசரி அனுப்பப்படும் செய்திகளை இந்த அன்டெனா கிரகிக்க.. செய்திகள் எழுத்து வடிவில் விழும். இந்த வருட இறுதியில் அமெரிக்காவில் 500 டொலர்களுக்கு விற்பனையாகுமாம். தமிழ் மக்களுக்கு சேவை செய்ய யாராவது முன் வந்தால் தமிழிலும் இந்த 'பட்டரிகை'கள் வருமோ என்னமோ?

★ ★

Jargon Watch என்று ஒரு பகுதி.. புதிதாக தொழில் நுட்பத் துறையில் தோன்றிய வார்த்தைப் பிரயோகங்கள் பற்றிய விளக்கம்.

அதில் Showelware என்று ஒரு புதிய சொல் பிரயோகம்... இதற்கு முன்னர் சிறு விளக்கம்.. கம்பியூட்டர்கள் சம்பந்தமான விடயங்கள் Hardware, software, shareware என்று ஒரே ware மயமாகப் போகும். அத்துடன். - லேசர் இசைத்தட்டு வடிவில் உள்ள தட்டுக்களில் கம்பியூட்டர் software களை தற்போது பதிவு செய்து விற்கிறார்கள். பல இலவசமான software கள் இவ்வாறு தட்டுகளாக்கப்பட்டு (CD-ROM) விற்கப்படுகின்றன. இந்த தட்டுக்களில் பெருமளவு software களை பதிவு செய்யலாம் என்பதால்... போதிய அளவு விடயங்கள் கிடைக்காத பட்சத்தில் இடத்தை நிரப்புவதற்காக 'சவளால்' அள்ளி நிரப்புவது போல... நிரப்பி வெளியிடுவார்கள். இவ்வாறான தட்டுக்களைத் தான் Showelware என்பார்கள். இதை வாசித்ததும் எனக்கு என்ன நினைவில் வந்திருக்கும்? நம்ம புலம் பெயர் தமிழ் பத்திரிகைகளே தான்.. இடத்தை நிரப்புவதற்காக வீரகேசரி செய்திகளை 'பத்திரிகை செய்திகள்' என்றும் 'வைரமுத்துவின் புத்தகத்தை

## அறு(சு)வை



'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'இலக்கியம்' என்றும் போட்டு நிரப்பி தமிழருக்கு சேவை செய்பவர்கள் நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாததே.

★ ★

தமிழ் பத்திரிகைகள் வெளிவர காரணமான அப்பிள் மக்கின்ரோஷ் கம்பியூட்டரை வடிவமைத்த முக்கியஸ்தர்கள் இருவர் தற்போது ஜெனரல் மாஜிக் என்ற நிறுவனம் மூலமாக புதிய கையடக்க கம்பியூட்டர் ஒன்றை உருவாக்கி வருகிறார்கள். இது கிட்டத்தட்ட அப்பிள் நியூட்டன் மாதிரி இருக்கும். இவர்கள், இந்த நிறுவனம். கருவிகள் பற்றி ஒரு சுவையான கட்டுரை உண்டு. (இந்த கருவி பற்றிய மேலதிக விபரங்களுக்கு நாட வேண்டிய ஒரே இடம் தான்: விஞ்ஞானப்பிரகாசன்)

★ ★

கட்டுரைகள், விசய தானங்கள் செய்பவர்கள் பற்றி ஒரு சிறு அறிமுகம் இருக்கும். ஓரிரு வரிகளில்! இந்த அறிமுகமும் சில வேளைகளில் குறும்புத்தனமாக இருக்கும். ஒருவர் பற்றிய குறிப்புகளில்– He voted for Bush, lives in New York and remains in shock என்று இருந்தது.

பாக்ஸ் இயந்திரங்கள் பற்றி ஒரு கட்டுரை.... பாக்ஸில் செய்திகளை அனுப்புவதை விட e mail ஊடாக அனுப்புவது லாபகரமானது, வசதியானது என்பது தான் எழுத்தாளரின் வாதம். ஜப்பானிய மொழியில் அறுபதாயிரம் எழுத்துக்கள் இருப்பதால், ஜப்பானிய வியாபாரங்கள் வாய் மூலமாகவே நடைபெற்றதாகவும், கடிதங்களில் நடைபெறவில்லை என்றும் இந்த எழுத்துக்களை டைப் அடிப்பதில் உள்ள சிக்கலால் அவற்றை எழுதி அனுப்ப பாக்ஸ் பயன்பட்டதாகவும் இந்த பாக்ஸ் அறிமுகத்தால் மற்றவர்கள் சிக்கலடைய நேரிட்டதாகவும் எழுத்தாளர் வாதிடுகிறார். ஆனால் இந்தக் கட்டுரையை அப்படியே பாக்ஸில் அனுப்பிய உருவத்திலேயே வடிவமைத்து அச்சிட்டிருக்கிறார்கள். வித்தியாசமாயிருந்தது.

★ ★

சோவியத் ரஷ்யா பற்றிய பெரிய கட்டுரை ஒன்று— ரஷ்யாவின் தற்போதைய நிலையிலிருந்து அங்கு கம்பியூட்டர் தொழில் நுட்பம் பற்றிய விடயங்கள் வரை விபரமாக இருந்தது. அப்பிள் நியூட்டன் கம்பியூட்டரில் கையெழுத்தை அறிந்து கொள்ளும் தொழில் நுட்பத்தை வடிவமைத்தது ரஷ்ய நிறுவனம் ஒன்றும்– ரஷ்ய மாற்றங்கள் பற்றி விலாவாரியாக விபரிக்கும் கட்டுரையில் கொர்பாச்சேவ் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை— கொர்பி கால பிள்ளைகள் என்ற குறிப்பைத் தவிர! இந்த மாற்றங்களுக்கு காரணமானவர் எப்படி கொஞ்ச காலத்தில் மறக்கப்பட்டார்? நல்ல காலம், தற்போதைய நிலைக்கு கொர்பி காரணம் என்று பழிபோடாமல் விட்டார்களே– உலகம் ஹீரோக்களைத் தான் வழிபடும். மார்க்கட் போய் விட்டால், ஹீரோக்கள் தேடுவாரற்ற நிலைக்குப் போய் விடுவார்கள்.

அடங்காத் தமிழன், ஜி.ஜி. தந்தை, தானைத்தலைபதி என்று எத்தனை ஹீரோக்கள் தமிழர்களால் புகழப்பட்டார்கள். இப்போது மார்க்கட் இல்லை. தேடுவாரற்றுப் போனார்கள். அல்லது வில்லர்களாகி விட்டார்கள். தற்போதைய ஹீரோக்களுக்கு மார்க்கட் கொஞ்சம் நீளம். ரசிகர்களான இந்த தலைமுறை வளர– அரபாத்திற்கு மேற்குக் கரையிலும் காசாவிலும் தற்போதிருக்கும் செல்வாக்கு.. தற்போதைய இந்த ஹீரோக்களுக்கும் ஏற்படலாம்.

ஆர்வலர்கள் இந்த சஞ்சிகையை வாசிக்க முயற்சிக்கவும். கிறுக்குத்தனமான கியூறியஸ்தனம் இல்லாதவர்கள் ஜீரணிப்பது கஷ்டமானதாகவும் இருக்கலாம். வாசிக்கும் போது தாயகம் வாசித்த திருப்தி இருக்கக் கூடும்.

★ ★

சென்ற வாரம் 'உரசு' பத்திரிகை பற்றி எழுதினேன். இந்த வாரம் பத்திரிகையைக் காணேம். மறுபிரசுரம் செய்வதற்கு அப்படி தட்டுப்பாடோ? இரண்டு முறை உலகத்தமிழரில் சங்கப்பலகையில் நக்கீரன் உட்கார்ந்திருக்கக் காணேம். எங்கேயோ சம்திங் மிஸ்ஸிங்? சில நேரம் இவ்வாரம் 'உரசக்' கூடும். யாரறிவார்? 'போர்'வாள் எடுத்தவன் 'கீர்'வாளால் மடிவான்! (போர்வாளை மறுபிரசுரம் செய்பவன், நக்'கீர'னால் அழிவான்) இனி என்ன, நக்கீரனே தமிழ் மக்களைப் பார்த்து 'என்ன குற்றம் கண்டீர்? சொற்சுவையிலா? பொருட்சுவையிலா?' என்று கேட்க வேண்டியது தான். பதிலுக்கு தமிழ் மக்களும் 'இந்தக் கட்டுரையை நீரே எழுதினீரா? அல்லது ஏதாவது புத்தகத்திலிருந்து—?'

★ ★

வழமை போல் எதையாவது சொல்லப் போக– அது சம்பந்தமாக– ஒட்டக்கூத்தன் பற்றி சொல்லப் போக... விளம்பரம் பார்த்தேன். வருமானவரி தயாரிப்பு செய்கிறாராம். தமிழருக்கு சேவை செய்ய மலிவு விலையில்... ஒரு சந்தேகம்– வருமானம் இருப்பவன் தான் வரி கட்டுவது! அரச உதவிப் பண தயவில் வாழ்வு– அதற்குள் மற்றவர்களுக்கு வரி தயாரிப்பு– இருந்தாலும் கம்பியூட்டர் வாங்கி தமிழ் பத்திரிகை விடாத ஒரே மாமனிதன் கூத்தன் தான். முன்பு தாயகம் பற்றி 'புலம்பிய போது' சொன்னாராம்– "ஒரு பத்திரிகையை எப்படி தூக்கி விடுறது, எப்படி விழுத்திறது எண்டு எங்களுக்கு தெரியும்" என்று. ஒருவேளை 'உரசு' பத்திரிகையில் கூத்தன் ஒட்டிக் கொண்டாரோ என்னவோ?

★ ★

தகவல் சஞ்சிகையில் இம்முறை வெல்பெயர் மோசடி செய்யும் எம்மவர்கள் பற்றி ஒரு கட்டுரை வந்திருந்தது. நல்ல விடயம். ஆனால் சொல்பவர் பற்றி நினைக்கும் போது தான் கொஞ்சம் உதைக்கிறது– பிரிந்திருக்கிறோம் என்று கூறி வெல்பெயர் எடுப்பதற்கும், எண்ணாயிரம் பிரதிகள் விற்கின்றன என்பதற்குமான வித்தியாசம் புரியவில்லை. என்னவோ— நல்ல கட்டுரை!

★ ★

சங்க காலம்– மன்னர்கள் பொற்குவை கொடுக்க கவிஞர்கள் கை ஏந்தி நின்ற காலம். பங்க காலம்– கனடாவில் கவிஞர் பொற்குவை கொடுக்க மன்னர்கள் கையேந்தி நிற்கும் காலம்.. நான் சொல்ல வந்தது பொற்கைப் பாண்டியர் பற்றி .. தங்கத்துக்கும் தமிழுக்கும் இடையிலான நெருக்கம் இறுக்கமானது தான். அன்று மன்னர்கள் கொடுத்த பொற்குவை தொடக்கம் இன்று சங்கங்கள் விருதுடன் போர்த்துகின்ற பொன்னுடை வரைக்கும்— புலிகள் பறிக்கின்ற பவுண் ஊடாக– அப்படி ஒரு இறுக்கம்.

கனடாவில் நடைபெறவிருக்கும் மாநாடு ஒன்று– அதை நடத்தவிருப்போர் வெளியிட்ட சஞ்சிகை ஒன்று கண்ணில் பட்டது. அந்த சஞ்சிகையின் முதல் இதழின் முழுச்செலவையும் ஏற்றிருக்கும் அவரது நிறுவனம் பற்றி பின் அட்டையில் ஆசிரியர் குழுவே ஒரு வாழ்த்துப் பா பாடியிருக்கிறது. (அவர் உள்ளே தமிழ் பற்றி ஒரு வாழ்த்துப்பா) பல காட்சியறைகளைக் கொண்டு பளபளப்போடும் விளங்கும் என்று 'உயர்வு நவிற்சி' நடைபெற்றிருக்கிறது.

ஒரு பொது அமைப்பு– எல்லோருடைய ஆதரவும் தேவை என்று வேண்டி நிற்கும் போது இப்படிச் செய்தால் மீதியாயுள்ளவர்கள் தங்கள் ஆதரவை நிறுத்திக் கொள்ளப் போகிறார்களே–



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளம்பரம் வியாபாரத்துக்கு தேவை. . அதே போல பொது நன்மைக்கான விடயங்களுக்கும் தேவை. ஆனல் இப்படி ஆசிரியர் குழுவே endorse பண்ணுவது சரியானதல்ல. எப்போதுமே தொடர்பு சாதனங்கள் தாங்கள் தாங்கி வரும் விளம்பரங்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரம் கொடுப்பதில்லை. சங்கம் சர்ச்சைகளுக்குள் மாட்டிக் கொள்வது அழகல்ல. சங்கம் விலைக்கு வாங்கப்படக் கூடியது என்ற உணர்வை ஏற்படுத்தாது. எடுத்த காரியத்தை செவ்வனே முடிக்க அனைவரது ஆதரவையும் திரட்டி வெற்றிகரமாக நடத்தப்பட வேண்டிய அவசியம் உண்டு. சர்ச்சை தவிர்க்க!

★ ★

மொன்றியல் வள்ளுவர் விழா கொஞ்சம் கசமுசாவில் முடிந்து விட்டது... இங்கிருந்து ஒரு பத்திரிகாசிரியர் அங்கு சிறப்பு அதிதியாக அழைக்கப் பட்டிருந்தார். 'பஞ்சமருக்கு' பின்னல் 'சஞ்சயன்' புகழ் அஞ்சயர்! இரு வாரங்களுக்கு முன்னர் 'பஞ்சம' பெரியார் விழா! இப்போது திருவள்ளுவர் விழா! எக்கச்சக்கமான விழாக்கள். வள்ளுவரை நினைவு கூர விழா எடுக்கிறர்களா? இல்லை, விழா எடுக்க வேண்டும் என்பதற்காக வள்ளுவரை இழுத்தார்களா தெரியவில்லை.

மொன்றியலில் ஒரு மொட்டை நோட்டீஸ். பத்திரிகைகள் போய் இப்போது மொட்டை நோட்டீஸ் வந்திருக்கிறது. பிரதம விருந்தினர் பற்றி கொஞ்சம் ஏடா கூடமாக... பட்ட காலிலே படும்! ஏற்கனவே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலைக் காணேம்... (25 கேள்விகள்?) அதே தான். எல்லாரையும் எல்லாக் காலமும் முட்டாளாக்க முடியாது. எங்க நிற்கிறேம் என்பதைக் காட்டாமல் 'சுத்தலாம்' என்று நினைத்தால்... கொஞ்சம் சிக்கல் தான். இப்போதைய உடனடித் தேவை- யுத்த முனை றிப்போட் அல்ல. தன்னிலை விளக்கம்! கிடைக்குமா? வள்ளுவரின் லேட்டஸ்ட் இலவச இணைப்பு..

சுத்தாரைச் சுத்துவோர் சுத்துவர் சுத்தெல்லாம்
சுத்துமாம் தலையில்!

★ ★

அப்பனைப் பாடும் வாயால் சுப்பனைப் பாடும் போட்டியில் ஈடுபட்டிருந்த புதுவை காசி குழுவினரில் காசி தோற்று விட்டார் போலும். இப்போது காசி தமிழகத்தில் அஞ்ஞாதவாசம். பாவம்.. அங்கு சென்றும் நிம்மதியாய் இருக்க விடாமல்... 'உரக' பத்திரிகை ஒரு கேள்வி பதிலில் பகிரங்கமாக அவரது விலாசத்தை பிரகரித்து விட்டது. இதன் நோக்கம்.. இந்திய அதிகாரிகளுக்கு காட்டிக் கொடுப்பதைத் தவிர வேறெதுவாகவும் இருக்க முடியாது. பத்திரிகை நடத்துபவரில் ஒருவர் 'கவிஞர்'(?). பட்டினி கிடந்து பசியால் மெலிந்து பாழ்பட நேர்ந்தாலும் இன்னெரு கவிஞரின் நிம்மதியைக் குலைப்பது தான் நோக்கம் போலும். நெஞ்சில் உரமும் இன்றி நேர்மைத் திறனும் இன்றி வஞ்சனை செய்வாரடி. ராஜீவோடு புலிகளின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்திய காசிக்கே இந்தக் கதி என்றல்...

உலகத்தமிழர் பார்த்தேன். 'இலக்கியம் படைப்பதற்கு இங்கு எவரும் தடையாகவில்லை' என்று புதுவை இரத்தினதுரை விளாசியிருக்கிறர். இந்தப் புதுவை வெளிநாடு சென்றவர்களை நக்கச் சென்ற நாய்கள் நக்கட்டும் என்று கவிதை பாடி எம் பெருமான் கிருபை பெற்றவர். 'இந்த மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் தங்கியுள்ள சில எழுத்தாளர்கள் தாம் புலம் பெயர்ந்து சென்றதை தமது எழுத்துக்களில் நியாயப்படுத்த முயல்கின்றனர். வெளிநாடுகளிலும் கொழும்பிலும் உள்ள சில எழுத்தாளர்கள் தமிழீழ மண்ணில் இருந்து எழுதும் எழுத்தாளர்களின் படைப்புகளையும் எமது மக்களையும் கொச்சைப்படுத்தும் செயலில் ஈடுபட்டுள்ளனர். வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் சில எழுத்தாளர்கள் தாம் அங்கு வாழ்வதற்கு காரணம் தேடிக் கொண்டிருக்கிறர்கள். மூச்சு விடுவதற்கு நாம் யாரிடமும் அனுமதி கேட்பதில்லை. இதே மாதிரி எழுதுவதற்கும் அனுமதி தேவையில்லை' என்று கூறியிருக்கிறராம்.

புதுவை ஒரு விடுதலைக் கவிஞன்.. பேராசிரியர் கியூறியஸ் ஜி சொல்லலைங்க.. பேராசிரியர் கா.சிவத்தம்பி சொல்கிறர். புதுவையின் மனித நேயம் தான் விடுதலைப் புலிகளுடன் அவரைச் சேர்ந்து வைத்திருக்கிறதாம். (மன்னிக்க வேண்டும்.. மனித நேயமா? மிருக நேயமா?) புதுவை ஒடுக்கப் படுகின்ற மக்களுக்காக, வர்க்கத்துக்காக பேசுபவராக தொடங்கி இப்போது ஒடுக்கப்பட்ட இனத்துக்காக பேசுகிறராம். (நல்லது!)

இதைப் பார்த்ததும் எனக்கு நாயின் ஞாபகம் தான் வருகிறது. நாய் எஜமானனின் எலும்புத் துண்டுக்கு வாலை ஆட்டி அவனது பாதங்களை நக்கும். எஜமான் காட்டுகின்ற திசையில், சுட்டுகின்ற ஆட்களை நோக்கி குரைக்கும். நாயின் இயல்பு அப்படி! மூச்சு விட அனுமதி தேவையில்லைதான். ஆனல் வாயைத் திறக்க அனுமதி வேண்டுமே? இங்கிருந்து ஊருக்குச் சென்ற விமர்சகர்கள் கூட அங்கே தங்கியிருக்க விரும்பாமல் இங்கே வந்து தான் பயணக்கட்டுரை எழுதுகிறர்கள். புலிகளை ஆதரிக்கின்ற எழுத்தாளருக்கே இந்தக் கதி என்றல்? அவர்களுக்கு இங்கே வாழ்வதற்கு என்ன காரணம் வேண்டிக் கிடக்கிறதோ. அதை விட நியாயமான காரணங்கள் புதுவை சொல்கின்ற அந்த 'அங்கே சிலருக்கும்' உண்டு. புதுவையாரே! உம்மைச் சொல்லிக் குற்றமில்லை. யாரைச் சொல்லி என்ன பயன். காலம் செய்த கோலமடி!

★ ★

புதுவையாருக்கு சமர்ப்பணமாய் ஒரு கதை (மாஜி ரஷ்யா பற்றியது.. மறுபிரசுரமாகிறது.) சந்தித்துக் கொண்டது ரஷ்யரும் அமெரிக்கரும். அமெரிக்கர் சொன்னர்.. எங்கள் நாடு சுதந்திர நாடு. எங்கள் ஜனதிபதியின் மாளிகைக்கு முன்னல் நின்று 'எங்கள் ஜனதிபதி ஒரு முட்டாள்' என்று சொன்னலும் யாரும் எதுவும் செய்ய மாட்டார்கள் என்று.

ரஷ்யர் பதிலடித்தார். எங்கள் நாடும் சுதந்திர நாடு தான். எங்கள் ஜனதிபதியின் மாளிகைக்கு முன்னல் நின்று 'அமெரிக்க ஜனதிபதி ஒரு முட்டாள்' என்று சொன்னலும் யாரும் எதுவும் செய்ய மாட்டார்கள்!

இந்தப் பதில் போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா? நாய் கதையே சொல்கிறேனே! (பழைய ஏடிட்டோரியலுக்கு நன்றி) உமக்கு நாய் என்றல் பிடிக்கும்.

போலந்தில் தொழிலாளர் துறைமுகத்தில் புரட்சி செய்து கொண்டிருந்த நேரம். போலந்திற்கு அல்பேனிய நாய் ஒன்று வந்தது. அதைக் கண்ட போலந்து நாய்க்கு ஆச்சரியம்.. அல்பேனிய நாயைக் கேட்டது 'உனக்கு உன் நாட்டில் நேரத்திற்கு சாப்பாடு. இருப்பதற்கு வேறு அரசாங்கம் வீடு தருகிறது. எல்லா வசதியும் அங்கே கிடைக்கிறது. அதையெல்லாம் விட்டு என்ன மண்ணுங்கட்டிக்கு இங்கே வந்தாய்?' அல்பேனிய நாய் சாவதானமாக பதில் சொன்னது 'குலைக்கத் தான்!'

புதுவையாரே! நாங்கள் இங்கே வந்தது நக்க அல்ல, குரைக்க! நீர் அங்கே இருப்பது குரைக்க அல்ல! ......!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஏமாற்றுதே...ஏமாற்றுதே!

முன்று மாத விசாவுடன் அதில் வேலை செய்யும் அனுமதி... நாயாய் வேலைசெய்தேன். கனடா விசா ஸ்டிக்கர் ஒன்று வாங்கினேன் (நண்பர் முலம்) டிக்கட் வாங்கினேன். ஆக ஆயிரத்து முன்னூறு ஜேர்மன் மார்க் உடன் கனடா வந்தேன். பணத்திற்காக எதையும் செய்வார்கள் சில மனிதர்கள். பணத்தை கொடுத்து விட்டு எம்மில் இன்று எத்தனைபேர் ஏமாற்றத்தை சுமந்து கொண்டும் சபித்துக் கொண்டும் இருக்கின்றார்கள். அந்த பணத்தை இவர்கள் எவ்வாறு கட்டியிருப்பார்கள் என பணத்தை வாங்கியவர்கள் சிந்திப்பதில்லை. இரவு பகலாய் உழைத்து, வட்டிக்கு எடுத்து, கடன்பட்டு, இப்படியெல்லாம் பணத்தை கொடுத்து ஏமாற்றம் அடைந்து நிற்க காரணம்? யார்? நீங்கள் உறவினர்களோ, நண்பர்களோ, தெரிந்தவர்களோ யாருக்கு பணம் கொடுப்பதாயிருந்தாலும் நம்பிக்கை என்ற பெயரில் கொடுத்து விட்டு பின்பு துயரப்படுவதில் பலனில்லை. இன்று அந்த நம்பிக்கை உடைந்து சிதைந்து போய்கொண்டிருக்கின்றது. துரோகம் எனும் சொல்லே இங்கு வியாபித்துக் கிடக்கின்றது. யாருக்கு பணம் கொடுத்தாலும் கடிதம் முலம் எழுதி வாங்கிக் கொள்ளுங்கள். மிகவும் இரக்க குணமுள்ளவர்களாக இருக்காதீர்கள், சக்கரை போல் இருக்காதீர்கள். உங்களை அப்படியே விழுங்கிவிடுவார்கள். நம்ப நடவுங்கள்? நம்பி ஏமாறுதீர்கள். மனிதர்கள் திடீர் என்று குணத்தை மாற்றிக்கொள்ளும் வித்தையை இப்போது கற்றுக் கொண்டிருக்கின்றார்கள்... இதைப்போல் இன்னும் எத்தனை எத்தனை துயரங்கள் இங்கே.... சொல்லி முடியாத சோக கதைகள்.... நாமும் நம்பி துயரங்களை சுமக்காமல், நம்பி ஏமாறுமல், பிறருக்கு நம்பிக்கை துரோகம் செய்யாமல் இருப்போம்.

# ஓகோ.... அப்படியா!

(பேச்சுவழக்குத் தமிழ் எழுத்தமிழுக்கு சில இடங்களில் உருமாற்றம் பெற்றிருக்கிறது)

புலிகள் இதுவரை செய்தவற்றில் உருப்படியான விடயம் இதுதான். தமிழ் சமூகத்தை பீடித்த எல்லா விசயங்களையும் இப்படி பலாத்காரமாகவாவது செய்தார்கள் என்றால் தான் நல்லது. இல்லாவிட்டால் இந்தச் சமூகம் திருந்தாது
எஸ்.கருணு. மொன்றியல்

போன மாதம் தான் என் அக்காவுக்கு சீதனம் கொடுத்து திருமணம் செய்வித்தேன். இப்போது எனது முறை வரும் போது இப்படி காலை வாரி விட்டார்களே.
தேவராசா சிவகுமார். (இடம் குறிப்பிடவில்லை)

துப்பாக்கியால் எல்லாவற்றையும் சாதிக்க முடியும் என்று நினைக்கிற புலிகள் இதில் நிச்சயம் தோற்பார்கள். புலிகளை எப்படி சுத்திறதெண்டு யாழ்ப்பாணத்தாருக்குத் தெரியும்.
சி.குணபாலன். ரொறன்ரோ

இனியெண்டாலும் புலியளை ஆதரிக்கத் தொடங்குங்கோ.
அனுமதேயக் குரல்

நல்லாயிருக்கு. எங்களைப் படிப்பிச்ச தாய் தகப்பனுக்கு நாங்கள் என்னத்தைக் குடுக்கிறது. நல்ல மாப்பிளை வேணுமெண்டால் காசைத் தரட்டுமன். காசு இருக்கிறவன் குடுக்கிறன். இவைக்கு என்ன? பேசாமல் வரியை வாங்கலாமே?
இன்னொரு அ.கு

தமிழன் கெட்டிக்காரன். கலியாணத்தை அங்கே நடத்திக் கொண்டு காசை இங்கே தரச் சொல்லி மாப்பிள்ளைமார் கேட்பார்கள்.
தா.செல்வசிங்கம், ஸ்காபரோ

சீதனக் கொடுமையால் பாதிக்கப்பட்டு இருக்கும் பெண்களுக்கு இது வரப்பிரசாதம் தான். ஆனால் வெளிநாட்டுக்கு வந்த தமிழர்கள் தான் விலாசம் காட்டி கலியாணம் செய்ய முடியாமல் போகும்
கணேஸ்வரன். ஸ்காபரோ

இந்த வாரம்....
புலிகள் தமிழீழ நாணயத்தை அறிமுகம் செய்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. நூறு இலங்கை ரூபாய்க்கு எண்பது தமிழீழ ரூபாய் விகிதப்படி கொடுக்கப் போவதாகவும் தமிழீழ வங்கிகள் நிறுவப்படப் போவதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. இது பற்றிய உங்கள் கருத்துக்களை 963 5738 என்ற இலக்கத்தில் வெள்ளி இரவு முதல் ஞாயிறு இரவு வரை தெரிவிக்கலாம்.

*This newspaper is published by*
*Georgicka communications.*
*A member of*
*Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*
*இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினல் வெளியிடப்படுகிறது.*
*ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்*

தொடர்புகளுக்கு
Georgicka communications
P.O.Box 1031, Station "F",
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216*
*@Compuserve.com*

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறேம். உங்கள் கருத்துக்களை எழுத்து முலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம் சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ், ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

www.tamilarangam.net

SIVA'S TRADING CO LTD 321-2739

## ஸ்காபரோ நகரின் தன்னிகரற்ற தமிழ் வியாபார நிலையம்

**அனைத்துப் பொருட்களும் மலிவுவிலையில்**

- ★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
- ★ உடன் இறைச்சி,கடலுணவு,
- ★ பசுமையான மரக்கறி வகைகள்
- ★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்)
- ★ சமையல் உபகரணங்கள்
- ★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

## சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

**3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)**
**TEL:(416) 321 2739**

---

## P.S.T.T

**5210 FINCH AVE EAST #23**
**(FINCH/MIDDLEFIELD)**
**TEL:609-0141**

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

**VIDEO TRANSFER (ANY SYSTEM) $8.99**